## வில்பத்து விவகாரம்:

பூர்வீக இடங்களை முஸ்லிம்கள் இழக்கும் அபாயம், தென்னிலங்கை அரசு போன்றே வட மாகாண சபையும் பாரபட்சம்

06



## ரபா சதுக்கப் படுகொலையின் நான்காண்டு நிறைவு



08

## ரவியின் பதவி விலகல்

05

சின்ன மீனும் சிக்கப் போகும் பெரிய மீன்களும்




# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 375 • 18 ஒகஸ்ட் 2017 வெள்ளிக்கிழமை • துல் கஃதா 1438 • விலை 40.00







# வேட்பாளர்களில் முப்பது வீதம் பெண்கள் சட்டமூலம் அடுத்த வாரம் பாராளுமன்றில்

நடக்கவிருக்கின்ற மாகாண சபைத் தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்தும் விதமாக இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் வேட்பாளர் நியமனப் பத்திரத்தில் 30 சதவீதத்துக்கும் குறையாமல் பெண்கள் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும், இந்த எண்ணிக்கையைக் கொண்டிராத வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் எனவும் குறித்த சட்டமூலம் எடுத்துரைக்கின்றது.

(பக்.10)





அத்தனகல்ல ரஜ மகா விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் பண்ணில ஸ்ரீ ஆனந்த தேரரினால் 250 இலட்சம் ரூபா செலவில் திஹாரிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரிக்கு நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் கௌரவ ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது

## ஹஜ்ஜாஜிகள் வசதிக்காக சிலோன் ஹவுஸை மீள நிறுவ ஏற்பாடு

முஸ்லிம் தலைவர் கலாநிதி ரி.பி. ஜாயா அவர்களின் வேண்டுகோளின் பேரில், அப்போதைய சவூதி மன்னர் பைஸல் இப்னு அப்துல் அஸீஸ் அல் ஸுஊத் அவர்களினால் 1960 ஆம் ஆண்டில் இலங்கை ஹாஜிகளுக்கென வழங்கப்பட்ட சிலோன் ஹவுஸ் மூன்று மாடிக் கட்டடத்தை மீளவும் நிறுவுவதற்கான குழுவொன்று விரைவில் நியமிக்கப்படவுள்ளது. (பக்.10)

## படையினர் கையகப்படுத்திய காணிகள் வனஜீவராசிகளுக்கு கையளிப்பு

வடமாகாணத்தில் கிளிநொச்சி பாதுகாப்புப் படைத் தலைமையகமாகப் பயன்படுத்தப்பட்ட படையினர் கையகப்படுத்திய 2332 ஏக்கர் 01 ரூட் 25.2 பேர்ச்சஸ் பரப்புள்ள ஐந்து நிலப்பரப்புக்கள் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதில் 2290 ஏக்கர் 3 ரூட், 17.6 பேர்ச்சஸ் நிலப்பரப்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள வனஜீவராசிகள் பராமரிப்புத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 02 ஏக்கர் 01 ரூட் 17.6 பரப்புள்ள காணி கிளிநொச்சியிலுள்ள வனஜீவராசிகள் பராமரிப்புத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவற்றில் 38 ஏக்கர் 01 ரூட் 05 பேர்ச் காணியே கந்தவெளி பிரதேச செயலாளரிடம் பொதுமக்கள் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மன்னார் மாவட்ட மீள்குடியேற்ற அறிக்கை தயார் நிலையில்

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மன்னார் மாவட்ட மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவினர் 21 ஆம் திகதி தமது அறிக்கையைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக மன்னார் மாவட்ட அபிவிருத்திக்காக காணிகளை விடுவிப்பதற்கான முன்மொழிவுகளை வழங்குவதற்கான ஐவர் கொண்ட குழுவின் உறுப்பினர் கலா நிதி ஏ.எஸ்.எம். நௌபல் தெரிவித்தார்.

(பக்.10)



## மத்தள விமான நிலையம் இந்தியாவுக்கு?




மத்தள விமான நிலையத்தை கூட்டு முயற்சியாண்மையாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பகிர்ந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கியதைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்தக் கூட்டு முயற்சியில் இந்தியா முன்வைத்த 70:30 என்ற விகிதாசாரத்துக்குப் பதிலாக 49:51 விகிதாசாரத்தை இலங்கை முன்வைத்துள்ளதாக தெரியவருகிறது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் தகவல்களின் படி, 252 மில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் 2016 டிசம்பர் வரை திரண்ட நட்டம் 15.6 பில்லியன் டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. (பக்.10)

## பாலியல் வன்புணர்வு அறிக்கையிடலில் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு (PCCSL)**



பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் புகைப்படங்களை வெளியிடுதல், அவர்கள் பற்றிய விவரங்களை வழங்குதல், குற்றல்செயல் பற்றி அளவுக்கு மீறி விவரித்தல் மற்றும் வழக்கு விசாரணையை விவரித்தல் என்பவை பற்றி, இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது என இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களில் குறிப்பாக, புங்குடுதீவு மாணவி மீதான பாலியல் வன்புணர்வு மற்றும் கொலைபற்றி, பொறுப்பில்லாத செய்தி வெளியீடுகளைக் கண்டித்து, இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் (பக்.10)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திக் குழு ஊடாகவேனும்...

- ஏ.எல். நௌபீர்.



எமது நாட்டிலே நன்கு வளர்ச்சி யடைந்த, பிரபல்யமான பாடசாலை களில் மாணவர்கள் சீருடை அணியும் போது மணிக்கூடு கட்டுதல் (Wrist Watch), காற்சட்டைப் பட்டி (Trouser Belt) அணிதல் என்பனவும் கட்டாய மாக்கப்பட்டுள்ளன. இது அந்த மாண வர்களின் பாடசாலைக் கல்வியை முடி வுறுத்திய பின்னரான தொழில் வாழ்க் கைக்கு (Professional Life) சிறப்பாக ஆடை அணிந்து கொள்ளவும், நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற வும் உதவியாக உள்ளது.

கிராமப்புற சூழலில் நன்கு வளர்ச்சி அடைந்த பெரிய பாடசாலைகளிலும் கூட மணிக்கூடு, காற்சட்டைப் பட்டி என்பன அணிவது தடை செய்யப்பட் டுள்ளது. வறுமையான மாணவர்கள் உள்ளதால் இவை சாத்தியமில்லை என பாடசாலை நிர்வாகங்கள் சொல்லு கின்றன.

இன்று சந்தையில் 60/- முதல் மணிக் கூடுகளும், 150/- முதல் காற்சட்டைப் பட்டியும் கிடைக்கின்றன. எனவே எல்லோரும் வாங்கி அணிய முடிகிறது. இங்கே வறுமை ஒரு தடையல்ல.

ஆனால் கிராமப்புறப் பாடசாலை களில் நாளாந்தம் மாணவர்களின் திருட் டுத்தனமாகப் பாவிக்கும் Smart Phones ஆசிரியர்கள் கண்டு பிடித்து வருகிறார்கள். எமது மாணவர்களும் சிறந்த ஆளுமை கொண்டவர்களாக மிளிரவும், நேரத்துக்குக் கருமமாற்றும் திறனை வளர்த்துக் கொள்ளவும், கொழும்பிலுள்ள மாணவர்களை நேர்முகத் தேர்வுகளிலே வெற்றி கொள்ளவும் அவர்களுக்கு மணிக் கூடும், காற்சட்டைப் பட்டியும் அணிந்து பாடசாலைக்கு வரப் பாடசாலைக் காலம் முதலே பழக்க வேண்டும் என்பது எமது அபிப்பிராய மாகும்.

இப்போதுதான் எமது மாணவர் களுக்கு நாம் கழுத்துப் பட்டியை (Tie) அணிய அனுமதித்துள்ளோம். எமது மாணவர்கள் அணிவது கழுத்துப் பட் டியே அல்ல என்பதும், இந்திய சினிமா வின் தாக்கம் அதிலே மேலோங்கி உள்ளதையும் நாம் கூர்ந்து அவதானித்து அதை சீர்செய்ய வேண்டும்.

ஆடை என்பதும் ஒரு மொழி (Dress Language). அது பேசாமலே நம்மைப் பற்றிப் பலருக்கும் சொல்லும் திறன் கொண்டது. எனவே பாடசாலைகள் இது விடயத்தில் கொஞ்சம் கவனம் கொள் ளுமா? பாடசாலைக்கு Belt அணிந்து பழக்கமில்லாது Interview க்கு எப்படி அணிந்து போவது?

எல்லா மாற்றங்களையும் அரசே ஏற் படுத்த வேண்டும் என எதிர் பார்ப்பதை விட, சில மாற்றங்களை நாமே பாட சாலை அபிவிருத்திக் குழு ஊடாக சிந்தித்து செயற்படுத்தவும் வேண்டும்.

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை.




- ஹுஸ்னி ஜாபிர்

## மிஸ்வாக்

'ஸிவாக்' என்ற அறபுச் சொல்லுக்கு பல் துலக்குதல் என்று அர்த்தம். 'மிஸ்வாக்' என்றால் 'ஸிவாக்' இற்கு பயன்படுத்தும் கருவி என்று அர்த்தம். ஆயிரக்கான வருடங்களாக அரபு நாடுகளில் அராக் மரக் குச்சியையும் இலங்கையில் வேப்பங் குச்சியையும் 'மிஸ்வாக்'' ஆகப் பயன்படுத்தியிருக்கி றார்கள்.

அராக் மரக் குச்சியை 'மிஸ்வாக்' ஆக பயன்படுத்துதல் என்பது ரஸூல் (ஸல்) அவர்களது புதிய கண்டுபிடிப்பல்ல. 'மிஸ்வாக்' பயன்படுத்துவதை சிலாகித் துக் கூறும் ஹதீஸ்கள் கூட அராக் மரக் குச்சியையே 'மிஸ்வாக்' ஆக பயன் படுத்துவதை சிறப்பித்து சொல்ல வில்லை.

இன்றைய திகதியில் வர்த்தக ரீதியாக தயாரிக்கப்படும் பல்வேறு வகை 'மிஸ்வாக்'கள் சந்தையில் இருக்கின்றன. அவை வெவ்வேறு நிறங்களில் இருப்ப தால் இன்னாருடைய 'மிஸ்வாக்' இது என்று அடையாளம் காண்பது இலகு.

க்ளோகாட் என்ற வர்த்தகப் பெயரில் சந்தையில் இருக்கும் 'மிஸ்வாக்' களையே நான் அதிகம் பயன்படுத்து கின்றேன்.

## பர்தாவை கழற்றுங்கள்



கம்பளையில் உயர்தரப் பரீட்சை எழுதிய முஸ்லிம் மாணவிகள் தங்கள் பர்தாவை கழற்றிவிட்டு பரீட்சை எழுதுமாறு நிர்ப்பந்திக்கபட்டுள்ளனர். இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் போதே இச்சம்பவம் நடந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி, மாணவிகளின் பெற்றோர் உரிய தரப்பினருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். கம்பளை கம்பசிறி வித்தியாலயம், சென் ஜோசம் வித்தியாலயத்தில் பரீட்சை எழுதிய முஸ்லிம் மாணவிகளுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

# எம்மை குற்றவாளியாக்கிய அத்தர்

- ஷிபானா ஸமீர்

சென்ற கிழமை சில தேவைகளிற்காக பல்கலைகழகம் செல்ல வேண்டி ஏற்பட்டது. ஒருநாள் பயணம் சுபஹ் முதல் இரவு வரை எடுத்து கொள்வதால் தந்தையுடனே புறப்பட்டேன். பல்கலைகழகத்தில் வேலைகளை முடித்து ஊர் செல்வதற்காக பஸ் பிடிக்க Pettah நோக்கி செல்ல 138 பஸ்ஸில் ஏறும் போது நண்பகலாகிவிட்டது.

சிங்கள, தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை என்பதால் பஸ்ஸினுள் நெருக்கடி குறைவாக இருந்த போதும் பாதையில் Traffic வழமை போலவே இருந்ததால் பஸ் ஊர்ந்து கொண்டிருந்தது. மண்டையை பிளக்கும் வெயிலாலும், காதை பிளக்கும் ஹோன் சத்தத்தினாலும் பயணிகள் எரிச்சல் மிக்க அசௌகரியத்திலே இருந்நனர்.

நாம் ஏறி இரண்டாவது பஸ் நிறுத்தத்தில் சில பயணிகள் ஏறினர். 'குப்' என்று ஒரு வகையான மணம் நம் நாசிகளை துளைத்துச் சென்றது. ஏற்கனவே எரிச்ச லில் இருந்த பயணிகள் தம் மூக்குகளை மூடி வெறுப்பு கலந்த கோபத்தில் முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

அங்கிருந்த பயணிகளில் முஸ்லிங்களாக இருந்தவர்கள் நானும், தந்தையும் மட்டும் என்பதால் எம்மால் அது அத்தரின் மணம் என கணிக்க முடிந்தது. ஆம், எதிர்பார்த்தவாறு முழுமையான ஜுப்பா, தாடி, தொப்பி போன்றவற்றுடன் முழுமையாக முஸ்லிம் என்ற அடையாளத்தினை பேணி பஸ்ஸினுள் ஏறிய அவரிடமிருந்தே அந்த குப் என்ற மணம் வீசி கொண்டிருந்தது. அத்தரை தன் மேல் கொட்டிக் கொண்டு வந்திருந்தார்.

அவ்வத்தரின் அதிக மணம் எனக்குமே தலைவலியையும், குமட்டலையும் ஏற்படுத்தியது. எனக்கு முன் இருக்கையில் இருந்த பெண்மணி ' இவர்கள் குளிக்காமல் வியர்வை மணத்தை மறைக்க இப்படி கொட்டிக் கொண்டு திரியுறாங்க' என்று பகிரங்கமாக முணுமுணுத்தமை எம் காதுகளில் தெளிவாக விழுந்தது.

ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையும் குறித்த அந்த ஒரு நபரை கொண்டு அளவெடுத்த அப்பெண்ணின் பேச்சு எமக்குள் வருத்தத்தினையும், வெட்கத்தினையும் ஒரு சேர ஏற்படுத்தியது.

குறித்த அந்நபர் இறங்கிய பின்பும் அவ்வத்தர் மணம் பஸ்ஸினுள் மறையவில்லை. அத்தர் என்பது வாசனை திரவியம், அதனை பூசுவது ஆண் களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ள போதிலும், அதனை சிறிதளவு தடவுவதனை விட்டு மேலே கொட்ட கூடாது.

ஏனெனில், இன்று காணப்படும் சில அத்தர்களின் மணம் மென்மையானது அல்ல. அவ்வாறு இருக்கும்போது அதனை தடவாமல் உடலில் கொட்டினால் அவருக்கு எப்படியோ சுற்றியுள்ளவர்களிற்கு மிக கஷ்டமாக இருக்கும். மேலும் ஒரு சிலரின் இவ்வாறான செயற்பாடுகள் ஒட்டுமொத்த சமூகத்தினையும் மற்றவர்கள் முன் குற்றவாளியாக்கி கேலிக்குள்ளாக்குகின்றன.

சும்மாவே எம்மில் பெரும்பான்மையினர் அதிருப்தி கொள்ளும் இன்றைய காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் அதற்கு துணைபோவதாக அமைகின்றன. ஆகவே தனி நபர்களாக நாம் அனைவரும் எம் செயற்பாடுகள் குறித்து மிக மிக கவனமாக இருத்தல் வேண்டும்.

- மனாஸிர்

எந்தக் காலங்களில் எந்த விதையை பயிரிட்டால் எவ்வாறான விளைச்சலை
அடையலாம் என்பதை ஒரு விவசாயி அறிந்து ஒழுகுவது போல,
எந்தக் காலத்தில் எவ்வாறான கல்வித் தரத்தை நாம் பெற்றுக் கொண்டால்
தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதனை தற்காலத்து மாணவச் செல்வங்கள்
கருத்தில் கொண்டு, தான் பயணிக்கப் போகும் பாதையை
நன்றாக செப்பனிட்டுக் கொள்ள வேண்டும்.





குவைத் நாட்டில் கற்கும் இலங்கை மாணவர்களின், குவைத்-இலங்கை மாணவர் ஒன்றியத்தினால் (SLSUK) அண்மையில் கல்-எலிய அலிகார் மகா வித்த்தியாலயத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான உயர் கல்வி வலுவூட்டல் மற்றும் தொழில் வழிகாட்டல் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. இதில் வளவாளர்களாக, பல்கலைக்கழக விரிவுரையாளரும், கல்வி அமைச்சு நூலாக்கக்குழு உறுப்பினரும், அஹதிய்யா பாட நூல் ஆசிரியரும், மல்வானை அல் முஹ்ஸின் பவுண்டேஷனின் செயலாளருமாகிய Mr. M.M.M. ஸாபிர் (எம்.ஏ), சமூக வலுவூட்டல் உளவளத்துணையாளரும், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் உளவளப் பிரிவு ஆலோசகருமான Mr. மனூஸ் அபூபக்கர் ஆகியோரும் பங்குபற்றினர். இச்செயலமர்வில் தேசிய ரீதியில் 10 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பயன்பெற்றனர்.



110 முஸ்லிம் மாணவ, மாணவியருக்கு சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகம் சார்பில் சிறப்பு ஆங்கிலப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம் வாணியம்பாடியில் வாணியம்பாடி முஸ்லிம்கள் கல்விச் சமுதாயம் என்ற அமைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் இவ் இலவச பயிற்சியை அமெரிக்க தூதரகம் வழங்குகின்றது.

# இனவாதம் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது:



## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்

இனவாதத்தை பரப்பி சமூகங்களுக் கிடையில் பிரச்சினைகளைத் தூண்டி விடுவதன் மூலம் அரசியல் அதிகாரத்தை ஒருபோதும் கைப்பற்ற முடியாது என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது, 30 வருட கால பயங்கரவாத யுத்தம் நாட் டின் நிலையான சமதானத்தை சீர்குலைத் தது. யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அது சரியான முறையில் நிலைநாட்டப் படவில்லை. அதற்கான முயற்சிகள் இன்று வரை மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. இவ்வாறான சூழலில், இன [illegible] ஊடாக மிக மோசமான முறையில் பரப்புரை செய்யப்பட்டு வருகின்றன. இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் சட்ட திட்டங்கள் எம் மத்தியில் இல்லாமல் இருக்கின்றன.

இந்நிலையில், இனவாதத்தை பரப்பி சமூகங்களுக்கிடையில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதன் மூலம் அரசியல் அதி காரத்தைக் கைப்பற்ற சிலர் முயற்சி செய்து வருகின்றனர். கிழக்கு மாகாணத் திலும் இந்நிலை உருவாகியுள்ளமை மிகவும் கவலைக்குரியதாகும்.

தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடை யில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்ப தன் ஊடாக தமது அரசியல் அபிலாஷை களை அடைந்து கொள்ள சிலர் முனை கின்றனர். தேங்காய் பூவும் பிட்டும் போல் இருந்த தமிழ் - முஸ்லிம் மக்க ளிடையே தற்போது பாரிய விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனைச் சீர்செய்து பழைய நிலைக்கு இரு சமூகங்களுக் கிடையிலான உறவை கொண்டு செல் வதற்கு சமூக தலைவர்கள், அரசியல் வாதிகளுக்கு பாரிய பொறுப்புள்ளது.

எனினும், போரால் விரிசலடைந்த தமிழ் - முஸ்லிம் மக்களிடையிலான உறவை பலப்படுத்துவதற்கான முயற்சி கள் சரியான முறையில் மேற்கொள்ளப் படவில்லை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன வித்தை

• லத்தீப் பாரூக்




சீனாவுக்கு அதன் இந்து சமுத்திர கடல் பாதையைப் பாதுகாக்க ஹம்பாந்தோட்டை துறைமுகம் தேவைப்படுகின்றது. ஆபிரிக்கா கண்டத்துடன் சீனாவின் வர்த்தகம் அதிகரித்து வருகின்ற நிலையிலும், சீனா தனக்கான எரிபொருள் விநியோகத்தை தங்கு தடையின்றி சீராகப் பெற்றுக் கொள்ளவும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் அதற்குத் தேவைப்படுகின்றது.

ஆனால் இலங்கையைப் பொறுத்த மட்டில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிடம் கையளிப்பதற்காக செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை ஒரு தேசிய அழிவு. பல தலைமுறைகளுக்கு இது எதிர்பாராத பல விளைவுகளை ஏற்படுத்தும். ஊழல் அரசியல்வாதிகளாலும் அவர்களுக்கு எந்த வகையிலும் குறைவில்லாத ஊழல் அதிகாரிகளாலும் நிர்வகிக்கப்படும் இலங்கைக்கு, யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டு கடன் சுமைகளில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு பில்லியன் கணக்கான டொலர் தொடர்புடைய ஹம்பாந்தோட்டை துறைமுகத் திட்டமானது அவசியமற்ற ஒன்றாகும். மேலும் அது நாட்டுக்கு வேறு வழிகளில் அழிவையே கொண்டு வரும். குறிப்பாக சரிவடைந்து வரும் இன்றைய பொருளாதார நிலையில் இது நாட்டுக்கு உகந்ததல்ல.

1979 டிசம்பரில் முன்னாள் சோவியத் யூனியன் சரிவடைந்த பிறகு அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் அகண்ட இஸ்ரேலை உருவாக்குவதற்கு மத்திய கிழக்கில் யுத்தங்களையும் மோதல்களையும் ஏற்படுத்துவதில் மிகவும் சுறுசுறுப்பாக செயற்பட்டு வருகின்றது. இந்த நிலைமையைப் பயன்படுத்தி சீனா ஆபிரிக்கா கண்டத்தை தனது பிடிக்குள் வளைத்துப் போடும் முயற்சியில் இறங்கியுள்ளது. சீனா தனது உற்பத்திகளுக்கு ஆபிரிக்கா கண்டத்தில் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் அதே வேளை ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் அபிவிருத்தி முயற்சிகளிலும் ஈடுபட்டு, அதற்கான ஒப்பந்தங்கள் பலவற்றிலும் கைச்சாத்திட்டுள்ளது.

இவற்றின் விளைவாக ஆபிரிக்காவுடனான சீனாவின் வர்த்தகம் 2002 ஆம் ஆண்டில் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு பத்து பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. 2006 ஆம் ஆண்டில் அது மேலும் அதிகரித்து 200 பில்லியன் டொலர்களாகக் காணப்படுகின்றது. சீனாவின் நான்கு டிரில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகத்தோடு சம்பந்தப்பட்ட தினசரி ஏழு மில்லியன் பீப்பாய் எண்ணெய் போக்குவரத்து இந்து சமுத்திர கடல் பிராந்தியத்தின் ஊடாகவே இடம்பெறுகின்றது.

இந்த வகையில் இந்து சமுத்திரம் தற்போது சீனாவால் தவிர்க்க முடியாத ஒரு பிராந்தியமாக மாறியுள்ளது. ஆனால் மலாக்கா நீரிணை பிராந்தியத்தை சீனாவுக்கு எதிரான சில சக்திகள் முடக்குவதன் மூலம் இந்த கடல் வழி வர்த்தகப் பாதையில் சீனாவுக்கு தடங்கல்கள் ஏற்படுத்தப்படலாம் என்ற ஒரு அச்சமும் சீனாவிடம் காணப்படுகின்றது.

இந்த அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்காக சீனா அதன் நீண்டகால விசுவாசத்துக்குரிய நட்பு நாடான பாகிஸ்தானுடன் ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டது. பாகிஸ்தானுடன் இணைந்து ஒரு மாற்று வழி வர்த்தகப் பாதையை நிர்மாணிக்கும் முயற்சியில் அது இறங்கியும் உள்ளது. சீனாவின் பண்டைய பட்டுப் பாதையை ஒத்த இந்தத் திட்டம் 46 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சீனா பாகிஸ்தான் பொருளாதார நுழைவாயில் (China–Pakistan Economic Corridor – CPEC) என்ற பெயரில் இந்தத் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த CPEC திட்டமானது சீனாவையும் பாகிஸ்தானையும் மிகக் குறுகிய வழிகள் ஊடாக கடலுடன் இணைக்கின்றது. இந்த ஒட்டு மொத்தத் திட்டத்தின் கீழ் சீனா தென் பகுதி பட்டுப் பாதை என்ற பெயரில் ஒரு பாரிய வலையமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. வரலாற்று முக்கியத்துவம் மிக்க மத்திய ஆசியப் பிராந்திய பட்டுப் பாதையையும் உள்ளடக்கிய 21 ஆம் நூற்றாண்டின் கடல்வழி பட்டுப் பாதையாக இந்த CPEC அமையும்.

சீனாவின் 'ஒரே மண்டலம் ஒரே பாதை' (One belt One Road - OBOR) திட்டத்துக்கும் இது முக்கியமானதாக அமையும். ஆசிய மற்றும் ஐரோப்பிய பெரு நில பரப்புக்களைச் சேர்ந்த சுமார் 60 நாடுகளை ஒன்றிணைக்கும் திட்டமே இதுவாகும்.

இந்தத் திட்டத்தின் ஒரு கட்டமானது பாகிஸ்தானின் மூலோபாய முக்கியத்துவம் கொண்ட பாரசீக வளைகுடா பிராந்தியத்தின் குவாதர் துறைமுகத்தை சீனாவின் சின்ஜியாங் பிராந்தியத்துடன் இணைக்கும் பாரிய நெடுஞ்சாலைகள் மற்றும் ரயில் பாதைகள் வலையமைப்பைக் கொண்டதாகும். இதில் இந்தப் பிராந்தியத்தை உள்ளடக்கிய ஒட்டு மொத்த போக்குவரத்து உட்கட்டமைப்பு, ரயில் பாதைகள், துறைமுகங்களின் விஸ்தரிப்பு, எண்ணெய் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான எண்ணெய் குழாய் பாதைகள் என பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாதைத் திட்டமானது சீனாவின் இன்றைய மரபு வழி வர்த்தகப் போக்குவரத்துப் பாதையிலும் பார்க்க பத்தாயிரம் கிலோ மீற்றர் தூரம் சுருக்கமானதாகும். மேலும் இந்தத் திட்டம் பிராந்தியத்தின் ஒட்டு மொத்த அரசியல் மற்றும் புவியியல் நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது.

இங்கு ஒரு விடயத்தை நம்மில் யாரும் மறந்து விடக் கூடாது சோவியத் ரஷ்யாவின் கட்டமைப்பு குலைந்த பின்னர் பாரசீக வளைகுடாவின் இதமான வர்த்தக சுகங்களை தொடர்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கில் தான் ரஷ்யா ஆப்கானிஸ்தானுக்கு படைகளை அனுப்பி பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைந்தது.

கேந்திர முக்கியத்துவம் மிக்க பாகிஸ்தானின் குவாதர் துறைமுக அபிவிருத்தி அங்கு அமைக்கப்படவுள்ள நவீன விமான நிலையம் என்பன தற்போது வளைகுடா ஷேக்மார்கள் அல்லது ஆட்சியாளர்கள் மத்தியிலும் சலசலப்பை உருவாக்கியுள்ளது. தெஹ்ரான், மொஸ்கோவில் இருந்து வொஷிங்டன் வரை, லண்டன், பாரிஸ், டெல்அவிவ் மற்றும் புதுடில்லி என பல இடங்களின் கவனத்தை இந்தத் திட்டம் ஈர்த்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து அதன் வட பிராந்திய கடல் பகுதிகளோடு தொடர்புடைய நட்பு நாடுகளின் துறைமுகங்கள் பலவற்றை உள்ளடக்கிய இந்து சமுத்திர கடல் வலய மூலோபாயம் ஒன்றை சீனா ஏற்கனவே வகுத்துள்ளது. இதில் இலங்கை பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் என்பன ஏற்கனவே உள்ளடங்குகின்றன. இந்த கண்ணோட்டத்தில் தான் ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்கு எந்தளவு முக்கியத்துவமானது என்பதையும் எவ்வாறு இலங்கை அதற்குள் சிக்க வைக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் நோக்க வேண்டும்.

இங்கு இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். தாய்லாந்துக்கும் மியன்மாருக்கும் தென்பகுதியில் அமைந்துள்ள கிரா இஸ்துமுஸ் எனப்படும் மலாய் பிராந்திய கடல்வழி பிரதேசம் ஊடாக ஒரு கால்வாயை அமைக்கவும் சீனா திட்டமிட்டுள்ளது. இது இந்து சமுத்திரத்தை சீனாவின் பசுபிக் கடல் பிராந்தியத்தோடு இணைக்கும் திட்டமாகும். கிட்டத்தட்ட பனாமா கால்வாயை ஒத்த ஒரு திட்டமாகும். இது ஆசியாவின் அதிகார பலத்தை சீனாவின் பக்கம் மேலும் சாய வைக்கும் ஒரு திட்டமாகும். சீனாவின் கடல்வழி வர்த்தக ஆதிக்கம் உட்பட கடற்படை ஆதிக்கத்தையும் இது வலுவடையச் செய்யும். கிழக்கு ஆபிரிக்கா, கொரியக் குடா, ஜப்பான் போன்ற பகுதிகளில் இருந்து இலகுவாக சீனாவை கடல் வழியாக இந்தத் திட்டம் இணைக்கும்.

இந்தத் திட்டங்களை அமுல் செய்யும் அதே காலப்பகுதியில் சீனா பிராந்திய நாடுகளுடனான வர்த்தக உறவுகளை மிகத் துரிதமாக மேற்கொண்டு வருவதோடு அந்த நாடுகளுக்கு பல உதவிகளை வழங்கி அவற்றுடனான வர்த்தக மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் செய்து வருகின்றது. இந்திய கடற்படை வெகு விரைவில் உலகில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்த படியாக மூன்றாவது கடற்படையாக வளர்ச்சி காணவுள்ளது. சீனாவின் இராணுவ விரிவாக்கத்துக்குப் பிரதான சவாலாக இது அமையவுள்ள நிலையிலேயே சீனா இந்த மாற்று வழிகளை உருவாக்குவதில் அதிக அக்கறை கொண்டுள்ளது.

### பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கான ஒரேயொரு கடல் வழி இந்து சமுத்திரத்திலேயே உள்ளது. பாகிஸ்தானை அண்டிய பிரதேசங்களில் இந்திய ஆதிக்கத்தை வலுவிழக்கச் செய்வதற்கு அப்பால் பாகிஸ்தானின் சக்தி வள விநியோகத்துக்கும் வர்த்தகத்துக்கும் இது மிகவும் பிரதானமானது.

ஈரானிலிருந்து தாய்லாந்து வரைக்கும் கடல் வழியாகவும் தரை வழியாகவும் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த வேண்டும் என்ற அதீத ஆர்வத்தை இந்தியா கொண்டுள்ளது. அந்த வகையில் CPEC ஐ ஒரு சாதகமான விடயமாகப் பார்க்க இந்தியாவால் முடியாது. ஆப்கானிஸ்தான் முதல் தாய்லாந்து வரைக்குமான தனது எல்லைகளை விஸ்தரிக்க வேண்டும் என்பதே தனது அபிலாஷை என்று பி.ஜே.பி அரசு வெளிப்படையாகவே தெரிவித்துள்ளது.

### அமெரிக்கா

இந்தியாவும் சீனாவும் பிரதான பொருளாதார சக்தியாகவும் இராணுவ பலமாகவும் இந்து சமுத்திரத்தில் உருவெடுத்து வருகின்றமை இந்தப் பிராந்தியத்தில் பல தசாப்தங்களாக அமெரிக்கா கொண்டுள்ள ஆதிக்கத்துக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

பிராந்திய சக்திகளை அமெரிக்கா தனது தேவைக்கு ஏற்ப கையாண்டு வருகின்றமையும் சீன முகாமிலிருந்து அவற்றை விலக்கி வைத்து வருகின்றமையும் பொதுவாக அறியப்பட்ட ஒரு விடயம். தென் சீன கடல், கிழக்கு சீன கடல் பிரதேசங்களில் சீன விரிவாக்கத்தை தடுக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் பிரதான குறிக்கோள். எந்தவொரு தனிநாட்டினதும் செல்வாக்கில் இந்தப் பிராந்தியம் இருக்கக் கூடாது என்பதே அமெரிக்காவின் பிரதான இலக்கு. காரணம் அது அமெரிக்காவின் நீண்டகால பொருளாதார இலக்குகளை சீர்குலைப்பதோடு பிராந்தியத்தின் அதிகார சமநிலையையும் குழப்பிவிடும் என்பதே அமெரிக்காவின் எண்ணம்.

ஒரு பொருளாதார மையப் புள்ளியை மேற்கில் இருந்து தெற்கிற்கு நகர்த்தும் ஒரு கண்ணோட்டத்திலேயே இவை அனைத்தும் நோக்கப்படுகின்றன. இது ஏதாவது ஒரு ஆசிய நாட்டால் கட்டுப்படுத்தப்படுமானால் இந்து சமுத்திரம், மலாக்கா நீரிணை, ஹோர்முஸ் நீரிணை, பாப் அல் மண்டேப் உட்பட பல பிராந்தியங்களின் அதிகார சம நிலையை பாதிக்கும்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் பஹ்ரேன், ஜிபோத்தி, டியாகோ கார்ஷியா ஆகிய பிராந்தியங்களில் அமெரிக்கா தனது கடல்படை நிலைகளைக்

(பக்.14)

---

# மீண்டும் தலைக்கேறுமா துருக்கித் தொப்பி?

• நேசன்



துருக்கி என்றதுமே நம்மவருக்கு நினைவு வருவது அறிஞர் சித்திலெப்பையின் தலையிலுள்ள துருக்கித் தொப்பி தான். இலங்கை முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்தில் துருக்கித் தொப்பிப் போராட்டம் முக்கிய வகிபாகம் பெறுகிறது.

1905 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் நாள் சட்டத்தரணி எம்.சீ. அப்துல் காதர் அவர்கள் துருக்கித் தொப்பி அணிந்து கொண்டு நீதியரசர் லாய்ட் முன்னிலையில் ஒரு வழக்கில் ஆஜரானார். அவர் அவ்வாறு அந்த வழக்கில் வாதாடுவதை எதிர்த்த நீதியரசர் லாய்ட் நீதிமன்றுக்கு மரியாதை செலுத்தும் முகமாக அவர் அணிந்திருந்த துருக்கித் தொப்பியை அல்லது காலணியை கழற்ற வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அப்போது தொப்பி அணிந்து வாதாடுவது தான் நீதிமன்றுக்கு செய்யும் இஸ்லாமிய மரியாதை எனவும் அதனை கழற்ற முடியாது எனவும் மறுத்து சட்டத்தரணி அப்துல் காதர் அவர்கள் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார். அவரது துணிகரமான இச்செயல், தனது தொழிலை விடவும் சமூக உரிமை காப்பதின் கடமைப்பாட்டை உணர்த்தியதோடு விழிப்பற்றிருந்த சமூகத்தினை செயலாற்றவும் செய்தது. ஈற்றில் 21 முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று ஆங்கில ஆட்சியாளர்களிடம் இருந்து துருக்கித் தொப்பிக்கான போராட்டத்தை வென்றெடுத்தனர்.

இது நடந்தது உஸ்மானிய சாம்ராஜ்யம் துருக்கியை தலைமையகமாகக் கொண்டு கோலோச்சிய காலம். உலகை ஆட்சி செய்த முஸ்லிம்களுடைய கலாசார விழுமியங்களை உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தது. துருக்கியின் நாகரிகம்தான் உலக நாகரிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

1924 ஆம் ஆண்டில் துருக்கியில் உஸ்மானிய சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்ததில் இருந்து உலகின் ஒழுங்கு சீர்குலைந்து, அநாகரிகமே நாகரிகமாக மாறி நிலை குலைந்து போனது. இந்த நிலையில் ஜனநாயகம், நாகரிகம் என்பவற்றை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் துருக்கி நவீன உலகுக்கு மீண்டும் பாடம் கற்பித்து வருகிறது.

இந்த எழுச்சியின் சிற்பிகளுள் ஒருவரான முன்னாள் பிரதமரும் இந்நாள் பிரதமரின் ஆலோசகருமான அஹமத் தாவூத் ஒக்லூ தான் அண்மையில் குடும்பத்துடன் இலங்கை வந்து சென்றார்.

தமது தாயகத்தில் இருந்து தலைவர் ஒருவர் வந்தது போன்று இலங்கை முஸ்லிம்கள் பூரித்தனர். உஸ்மானிய சாம்ராஜ்யத்திலிருந்து வந்த [illegible] வரவேற்பது போலவே நாடு [illegible] வரவேற்றது. 1864 இல் உஸ்மானியப் பேரரசின் இலங்கைக்கான உயரிஸ்தானிகராக நியமிக்கப்பட்டவரின் வருகைக்குப் பின்னர் துருக்கியிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்த முதல் தலைவராக இவர் கருதப்படுகிறார்.

இலங்கையின் முதல் பிரஜையான ஜனாதிபதியும், பிரதமரும் அவர்களை சந்தித்து வரவேற்றனர். முதன்மை மதமான பௌத்த பீடத்தின் மல்வத்து மகாநாயக்க தேரரின் வரவேற்பும் உரையும் முக்கியமானதாக இருந்தது.

இலங்கையின் [illegible] அவர்களை [illegible] சந்தித்தனர்.

முதலில் முஸ்லிம்கள் காலடி வைத்த பேருவளைக்கு அவர் விஜயம் செய்தார். இலங்கையின் முதற்தர இஸ்லாமிய பல்கலைக்கழகமான ஜாமிஆ நளீமியாவிலே அவர் உரையாற்றினார். இலங்கை முஸ்லிம்களின் முன்னோடி ஆளுமை நளீம் ஹாஜியாரின் அடக்கஸ்தலத்தை அவர் பெருமையுடன் தரிசித்தார்.

இலங்கை முஸ்லிம்களில் முதல் தடவையாக நாட்டின் முதற் பிரஜையாக இருந்து சில நாட்கள் ஆட்சி செய்த பாக்கிர் மாக்கார் அவர்களின் நினைவுப் பேருரையை அவர் நிகழ்த்தினார். இந்த எல்லா வகையிலும் அவரது விஜயம் முதன்மையானதாக இருந்தது.

இலங்கையின் பல்லின மக்களாலும் மதிக்கப்படும் முன்னாள் சபாநாயகர் பாக்கிர் மாக்காரின் நினைவாக உரையாற்றுவதற்கு, இலங்கையின் எல்லா இனங்களையும் அரவணைத்துச் செயற்படுகின்ற இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் ஒழுங்கமைப்பில் இலங்கை வந்த பேராசிரியர் தாவூத்ஒஃலு அவர்களின் உரைகள் அனைத்தும் பன்மைத்துவம் தொடர்பிலேயே அமைந்திருந்தமை அருமையான நிகழ்தகவாயிருந்தது.

பெரும்பான்மை முஸ்லிம்களுடன் பௌத்தர்கள் சிறுபான்மையாக வாழும் மலேசியாவில் தாம் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் தான், பெரும்பான்மை பௌத்தர்களுக்கு மத்தியில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற இலங்கைக்கு வருவதற்கு தன்னைத் தூண்டியது என்று ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

இறைதூதர் காலடிவைத்த பின்னர் உருவாக்கப்பட்ட மதீனா நகர் முதல் இன்றைய முஸ்லிம் நகரங்களான ஸ்தன்பூல், பக்தாத், டமஸ்கஸ், கெய்ரோ என எல்லாமே பன்மைத்துவத்தை சான்று பகரும் நகர்களாகவே இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். யெமன், கத்தார், ஐ.எஸ். விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளித்த விதத்திலிருந்து உலக நிலைமைகள் தொடர்பான அவரது ஈடுபாடும் அக்கறையும் அனுபவங்களும் ஐ.நா. செயலாளர் ஒருவர் தெரிவிக்கின்ற கருத்துக்களையும் விஞ்சுவதாக அமைந்திருந்ததை அறிய முடிந்தது.

உலக நாடுகளின் பிரச்சினைகளைக் கையாள்வதில் துருக்கியின் அனுபவங்களைப் பகிர்ந்து

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDITORIAL

49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# கூட்டரசாங்கத்தின் கூட்டுப் பணி

ஊழல், மோசடி, அராஜகத்தில் இருந்து நாட்டை மீட்டு புதியதொரு இலங்கையைக் கட்டியெழுப்பும் கோஷத்துடன் 2015 ஆம் ஆண்டு முதல் நாட்டில் கூட்டரசாங்கம் உருவாக்கப்பட்டது. தேசிய அரசாங்கம் என இது அழைக்கப்பட்ட போதும் இரண்டு கட்சிகளின் கூட்டாகவே இந்த அரசாங்கம் நிலைபெற்றுள்ளது. ஜனாதிபதி ஒரு கட்சியிலும் பிரதமர் ஒரு கட்சியிலுமாக இழுபறியிலான நிலைமையிலேயே கூட்டரசாங்கம் பயணிப்பது தெரிகிறது.

இருவருமே பொறுப்பாளர்கள் என்ற நிலையைத் தாண்டி, யாருமே பொறுப்பாளர்களல்ல என்ற நிலைமைக்கு நாடு சென்று விட்டதோ என்று சிந்திக்கத் தூண்டும் அளவுக்கு நாட்டின் முக்கியமான பல விவகாரங்களில் அசட்டைப் போக்கு நிலவுகிறது.

நாட்டின் விவகாரங்களில் ஜனாதிபதிக்குப் பொறுப்பிருப்பது போலவே பிரதமருக்கும் பாரிய பொறுப்பிருக்கிறது. இந்த வகையில் வெளிநாடுகளுக்கு உள்நாட்டுச் சொத்துக்களை குத்தகைக்கு விடுவது, சொத்துக்களை விற்பது, நாட்டை அடகு வைத்து வெளிநாடுகளிடம் இருந்து கடன் பெறுவது என்ற பல விவகாரங்களுக்கு அப்பால் உள்நாட்டில் எரியும் பிரச்சினைகள் தொடர்பிலும் பிரதமருக்குப் பொறுப்பு இருக்கிறது.

இந்நாட்டு முஸ்லிம்களது பிரச்சினைகள் உணர்வு நிலையைத் தாண்டி உரிமைப் பிரச்சினைகளாக உருவெடுத்து வருகின்றன. வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அபகரிக்கப்பட்ட மறிச்சுக்கட்டி காணிகள் உட்பட இன்னும் பல முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலங்கள் தொல்பொருள் திணைக்களத்தாலும், வனஜீவராசிகளுக் கெனவும் பறித்தெடுக்கப்படுகின்றன. முல்லைத்தீவு மக்களின் மீள்குடியேற்றத்தில் எழுந்துள்ள தடைகள், வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் சம்பந்தமான அரசின் பாராமுகத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. நாவலடியிலும் இன்னும் பல பிரதேசங்களிலும் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை மீட்டுத் தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இப்படிப் பல அநீதிகள் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டு வரும் நிலையில் பிரதமரால் முன்வைக்கப்படவுள்ள புதிய அரசியல் யாப்பிலும் முஸ்லிம்களை இலக்கு வைத்த பல விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த நிலையில் முஸ்லிம்களின் இந்த உரிமைப் பிரச்சினைகளில் தலையிட்டு அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டிய கடப்பாடு பிரதமர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு இருக்கிறது.

இலங்கை முஸ்லிம்கள் பாரம்பரியமாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து வந்தவர்கள். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தோற்றிய எல்லாத் தேர்தல்களிலும் இலங்கை முஸ்லிம்களின் பெருவாரியான வாக்கினைப் பெற்றவர். இந்த நிலைமையில் தமக்கு ஆதரவளித்த ஒரு சமூகத்தை நட்டாற்றில் விடுவது நேர்மையான ஒரு அரசியல் தலைவருக்கு உகந்ததல்ல.

ஜனாதிபதி ஊடாக தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இலங்கை முஸ்லிம்கள் எடுத்த முயற்சிகள் கைகூடாத வேளைகளில் எல்லாம் அடுத்த கட்டமாக பிரதமர் தமக்குக் கைகொடுப்பார் என்றே முஸ்லிம்கள் நம்பினர். ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்து தமது பிரச்சினைகளை பிரதமரின் முன் எடுத்துச் செல்வர் என்று முஸ்லிம் சமூகம் எதிர்பார்த்தது. ஆனாலும் முஸ்லிம்களின் எந்தப் பிரச்சினையும் இதுவரை பிரதமரின் தலையீட்டால் தீர்த்து வைக்கப்பட்டதாக இல்லை.

தேர்தல்கள் பற்றிய அறிவித்தல்கள் வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் கூட்டரசாங்கத்தின் கட்சிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியாவது முஸ்லிம்களின் பிரச்சினைகளை உரிய இடங்களுக்கு நகர்த்துவதில் முஸ்லிம் அரசியல்வாதிகள் அக்கறை காட்ட வேண்டும்

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

[illegible]

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி 011-5353635
பெக்ஸ் 011-5335500
ஈமெயில் [illegible]@pccsl.lk
இணையத்தளம் www.pccsl.lk

# அரசியல்வாதிகளை பீடித்திருக்கும் 'மறதி' நோய்

• ஹெட்டி ரம்ஸி

இலங்கை அரசியல்வாதிகள் கடந்த காலத்தை மறக்கும் கொடிய நோய்க்கு இரையாகிக் கொண்டுள்ளனர். அன்று மஹிந்தவின் காலப் பகுதியில் பாரத லக்ஷ்மன் உள்ளிட்ட சிலரை சுட்டுக் கொன்ற துமிந்த ஸில்வாவுக்கும் இந்நோய் இருந்தது எமக்கு நினைவிருக்கிறது. அவரும் அவருடைய சட்டத்தரணிகளும் தெரிவித்தவைகளை நோக்கும்போது அவருக்கு அச்சம்பவம் நினைவில்லையாம். ஆனால் மற்றவையெல்லாம் நினைவிருக்கிறது.

பிரகீத் எக்னலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பில் ஐ.நா. சபைக் கூட்டத் தொடரொன்றில் பொய் கூறிய முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், தான் சொன்னவை ஒன்றும் நினைவில் இல்லை என்பதாக நீதிமன்றில் கூறினார். இதுபோன்று பலருக்கு 'எனக்கு நினைவில்லை' என்கிற வியாதி பீடித்திருந்தது எமக்கு நினைவிருக்கிறது. ஏதாவதொரு சம்பவம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கையிலிருந்து 'எனக்கு நினைவில்லை', 'எனக்குத் தெரியாது' எனக் கூறி தப்பித்துக்கொள்ள முனைவதே இதன் அர்த்தமாகும்.

தற்பொழுது இந்நோயினால் பீடிக்கப் பட்டவரே ரவி கருனாநாயக்க. பிணைமுறி ஊழல் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் முன்னிலையிலேயே தம்பட்டம் அடிக்கின்ற போது, நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு மக்கள் வரமொன்று இல்லை எனக் கூறுகின்றபோது, ஊழல் அதிகாரிகளை உயர் பதவிகளில் நியமிக்கின்ற போது, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இக்கடந்த காலம் எவ்வளவு அவசரமாக மறந்து போயுள்ளது என்பது விளங்குகிறது.

வியப்புக்குரிய விடயம் என்னவெனில், ஒரு காலகட்டத்தில் அதிகாரத்தில் இருந்து கொண்டு பித்துப் பிடித்தவராய் செயற்பட்ட மஹிந்தவுக்கும், அவருடைய உறவினர்களுக்கும், அடிவருடிகளுக்கும் தற்பொழுது தங்களது கடந்த காலம் மறந்துபோயுள்ளது என்பது. ராஜபக்ஷாக்கள் முன்னின்று உருவாக்கிய சைட்டம் கல்லூரிக்கு சஹேலி கமகேவினை அழைத்துச் சென்ற விதம் மறந்துபோயுள்ளது. ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அதனை அண்டிய நிலங்களை சீனாவுக்கு வழங்கத் தயாரானது மறந்து போயுள்ளது.

உமா ஓயா எனும் நாசகரமான திட்டத்தை ஆரம்பித்து அதன் மூலம் கோடிக்கணக்கான கொமிஸ்களை அடித்தது மறந்துள்ளது. துறைமுக நகரம் போன்ற மிகப்பெரும் அழிவை ஆரம்பித்தது மறந்துள்ளது. தமது புதல்வர்கள் தளதா மாளிகையைச் சுற்றி கார் ரேஸ் நடாத்தியது, அத்துடன் அவர்கள் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புற்று பித்துப் பிடித்தவர்களாக நடந்துகொண்டது, டொன்களுக்கும் எல்லாம் மறந்துபோயுள்ளது. வினோதமானதொரு விடயம் இது.

தற்பொழுது இத்தூய மனிதர்கள் எல்லோரும் சேர்ந்து ரவியின் பிணைமுறி மோசடி விவகாரத்தை கிளறி அலாதியானதொரு இன்பத்தை அடைகிறார்கள். சதாவும் ஒரு சதமேனும் திருடாதவர்களை போன்றே ரவியை சுற்றி தாக்குதல் நடாத்துகிறார்கள்.

மஹிந்தவின் காலத்தில் அமைச்சர்களின் இதுபோன்ற எத்தனை ஊழல் மோசடிகள் அம்பலமானது? அது தொடர்பில் முறைப்பாடுகளை செய்ய எத்தனை பேர் ஆணைக் குழுக்களை நாடிச் சென்றார்கள் என்பது தொடர்பில் ஒருவருக்கும் நினைவில்லை போலும். ரவிக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு மஹிந்த ஏன் கைச்சாத்திடவில்லை? ரவியின் நிதியமைச்சுப் பதவி பறிபோன சமயத்தில் உடனடியாக மஹிந்த ரவியை தொடர்பு கொண்டு தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளார். எப்படியேனும் திருடர்களுக்கு திருடர்கள் ஒன்றிணைவது வழக்கம். ஒரே வகையான பறவைகள் ஒரே கிளையில் தங்குமல்லவா அது போன்றுதான்.

முழு அரசாங்கத்திற்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரவே மஹிந்த முயற்சித்தார். அதற்குப் பல காரணங்கள் உள்ளன. ரவிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியளித்தாலும் இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றிபெற முடியாது. பிணைமுறிச் சம்பவத்தில் சிக்கியுள்ள ரவியையும் அர்ஜூனையும் காப்பாற்றுவது மஹிந்தவின் குறிக்கோளாக உள்ளது. சிலவேளை பிரேரனை வெற்றியளித்தால் அரசாங்கம் வீழ்ந்து விடும். வென்றாலும் தோற்றாலும் மஹிந்தவின் நோக்கம் நிறைவேறுகிறது.





இவருக்கு இம்மறதி ஏற்பட்டிருக்கிறது. ரவியை போன்று அச்சம்பவத்தில் குற்றவாளியாக உள்ள அர்ஜூன் அலோசியஸூக்கும் தனது தொலைபேசி இலக்கம் நினைவில்லையாம். ஆனால் எப்படியோ அவர்களது திருட்டுச் செயல்கள் அம்பலாகியுள்ளது.

மஹிந்த அரசாங்கம் தோல்வியடைந்ததன் காரணத்தினால் பல வருடங்களுக்குப் பிறகு நீதிமன்றம் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை வழங்கியது. தொடர்ந்தும் மஹிந்த ஆட்சியில் நீடித்திருப்பின் இத்தீர்ப்பு வேறொரு வகையில் அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையின் சட்டத்துறைக்குள் செல்வந்தர்களை கவனிக்கும் 'சமத்துவம்' காரணமாக இன்று சிறைச்சாலை மருத்துவமனையில் சொகுசாக இருந்து கொண்டு பழைய நினைவுகளை மீட்டிப் பார்க்கும் துமிந்தவுக்கு சிலபோது அவரது பாவங்கள் நினைவுக்கு வரலாம்.

எந்தவொரு அரசியல்வாதிக்கும் கடந்த காலம் வெகு சீக்கிரமாக மறந்து விடுகிறது. இந்நாட்டு மக்களுக்கும் அப்படித்தான். மக்கள் தம்மை எதற்கு தெரிவு செய்தார்கள் என்கின்ற விடயம் நல்லாட்சி அரசில் உள்ளோருக்கு -குறிப்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மறந்துபோயுள்ளது.

திறைசேரி முறிகள் சம்பவத்தில் தமது சகபாடிகள் பலகோடிக் கணக்கிலான பொது நிதியை திருடும் பொழுது, தாம் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக நிறுத்திவிடுவதாகக் கூறிய உமா ஓயா, போட் சிடி, சைட்டம் போன்ற விடயங்களை வெட்கமின்றி முன்னெடுத்துச் செல்லும் போது, குற்றவாளிகளையும் கொலைகாரர்களையும் இராணுவ முத்திரை குத்தி பாதுகாக்கின்றபோது, முஸ்லிம்களின் பள்ளிவாயல்களுக்கு குண்டு வீசி மீண்டும் இனவாத யுத்தமொன்றை உருவாக்கிவிட முயற்சிக்கும் காட்டுமிராண்டித் தேரர்களை பாதுகாக்கின்றபோது, வடபுல மக்கள் இன்னும் தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வின்றி கவலைப்படுகின்ற போது, மலையக மக்கள் இருப்பிடங்களின்றி மண்சரிவி [illegible] கணக்கிலான தங்கத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றியது, கோத்தாபய போன்றோர் வெள்ளை வானில் ஆட்களை கடத்தியது, கொலை செய்தது, பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை ஈடுபடுத்தி உரிமை கோரிய மக்களை சுட்டுக் கொன்றது, சகல திட்டங்களிலிருந்தும் பசில் 10 வீதம் பெற்று வந்தது, புதையல் தோண்டியது, கோடிக்கணக்கில் கடன் பெற்றது இவையெல்லாம் மறந்து போயுள்ளது.

ஆட்சி செய்த காலத்தில் தமக்கு மறந்து போயிருந்த ஜனநாயகம், நீதி, நியாயம் போன்ற ஒரு சில விடயங்கள் மாத்திரம் தற்பொழுது நினைவுக்கு வந்திருப்பது விளங்குகிறது. தற்பொழுது சைட்டம் அவர்களுக்கு வெறுப்பாகியுள்ளது. பல்கலைக் கழக மாணவர்களுக்கு பொலிஸார் அடிக்கும் பொழுது அவர்களது உள்ளம் வலிக்கிறது. அரசாங்கத்தில் உள்ளவர்கள் திருடும் பொழுது, ஒரு சில சம்பவங்கள் இடம் பெறுகின்ற பொழுது ''எமது காலத்தில் அப்படியிருக்கவில்லை சங்கைக்குரிய தேரரே'' என அடித்தொண்டையால் மக்களை பற்றி நினைத்த, மக்களுக்கு அன்பு காட்டிய தலைவர் ஒருவரைப் போன்றே கதைக்கிறார். ''அங்கத்துவ பட்டாபிஷேகம்'' என்பதாக புதியதொரு வசனத்தை உருவாக்கிக் கொண்டு மீண்டும் மக்களை மடையர்களாக்கும் போராட்டத்தை மஹிந்த தரப்பினர் ஆரம்பித்துள்ளார்கள்.

மறுபுறத்தில் ராஜபக்ஷாக்களின் ஊழல் மோசடிகள் தொடர்பில் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கூக்குரலிட்ட மைத்திரிபால இன்று ஜனாதிபதியாக அவரைச் சூழ வைத்துக் கொண்டிருப்பவர்கள் யார்? மஹிந்தவின் காலத்தில் பாரியளவிலான ஊழல், மோசடிக் குற்றங்களில் தொடர்புற்ற அமைச்சர்கள், எம்.பிக்கள் மாத்திரமல்லாமல், அரச உயர் அதிகாரிகள் கூட இன்று மைத்திரியின் அரவணைப்பிலேயே உள்ளனர். தனது பக்கம் வந்த காரணத்தினால் அந்தத் திருடர்களை நன்றாக உபசரித்து, வெள்ளாடை உடுத்தி, பிரித்களை ஓதி ஊதி, அன்று பிறந்த பாலகர்களைப் போல் மாற்றியுள்ளார் மைத்திரி.

'நாங்கள் மஹிந்தவின் அரசாங்கத்தில் [illegible]லை. எல்லாவற்றையும் ராஜபக்[illegible]களே செய்தார்கள்.' தற்பொழுது இவர்

நாட்டில் மிகவும் பலம் பொருந்திய அமைச்சொருவராக காணப்பட்ட ரவியை ஆணைக்குழுவொன்றின் முன்னிலையில் ஆஜர்படுத்தி, கடுமையான முறையில் விசாரணை செய்வதற்கு வாய்ப்பு கிடைத்தது ஒருவகையில் சிறந்ததொரு அடையாளம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மஹிந்தவின் காலத்தில் இதுபோன்றதொரு நிகழ்வு இடம்பெறும் என்று கனவிலும் நினைத்திருக்க முடியாது.

மக்கள் ஜனவரி 8 ஆம் திகதி ஊழல் மோசடிகளுக்கு எதிராக எடுத்த தீர்மானத்தின் பெறுபேறாக இருக்கும் இந்நிலையை தங்களது அரசியல் சுய இலாபத்திற்கு எடுத்துக் கொள்ள மஹிந்த தரப்புக்கு எவ்வித உரிமைகளும் கிடையாது.

திறைசேரி முறிகள் தொடர்பான சம்பவத்தின் பிரதான குற்றவாளியாக இருப்பவர் அர்ஜூன் மஹேந்திரன். அவர் மத்திய வங்கியின் அதிபதியாக செயற்பட்ட முறை தொடர்பில் அற்புதமான கருத்துக்களை ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்து வருகின்றார். இவரை இப்பதவியில் நியமித்தது மாத்திரமல்லாமல், இவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு வந்தபோது பிரதமர் ரணில் அவரை தொடர்ந்தும் பாதுகாத்து வந்தார். தற்பொழுதும் அவர் ரணிலின் பாதுகாப்பின் கீழேயே உள்ளார்.

எனவே ரவி தவறிழைத்திருப்பதை போன்று அதைவிடவும் மிகப் பாரியளவிலான தவறை பிரதமர் ரணில் இழைத்துள்ளார் என்பது தெளிவானது. இவ்வாணைக் குழுவிற்கு பிரதமரையும் அழைத்து விசாரிக்கும் அளவுக்கு பலமுள்ளதா என்பதை நம்ப முடியாது. எல்லாப்' பாவங்களையும் ரவி என்னும் தனிமனிதனின் மேல் சுமத்திவிட்டு பிரதமர் தப்பித்துக் கொள்ளும் விடயமே புலப்படுகிறது. (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்

நல்லாட்சி அரசியல்

# ரவியின் பதவி விலகல்

# சின்ன மீனும் சிக்கப் போகும் பெரிய மீன்களும்



கடந்த வாரம் முழுவதும் இலங்கை அரசியலின் பிரதான பேசுபொருள் ரவி விவகாரமாகும். சடுதியாக அறிவிக்கப்பட்ட ரவியின் ராஜினாமா, இலங்கையின் அரசியல் எதிர்காலம் குறித்த நம்பிக்கையைத்தான் அதிகம் அளிக்கின்றது. இதுவோர் அரசியல் நாடகமாக இருப்பினும், அதன் விளைவு நல்லாதாக இருக்கும் என்றே நாம் நம்புகின்றோம். தேசிய நல்லாட்சி அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் மக்களிடம் ஒரு நம்பகத் தன்மையை இது உருவாக்கியுள்ளது.

ரவி கருணாநாயக்க தொடக்கத்தில் நிதியமைச்சராக இருந்தவர். பின்னர் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டவர். மத்திய வங்கி பிணைமுறி குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட அவர் மீது குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதனால் ராஜினாமா செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இலங்கையின் முன்னணி வர்த்தகரான நெஹில் விஜேசூரியவின் மகள் அனிதா விஜேசூரிய, ரவியின் குடும்பம் குத்தகைக்குப் பெற்றிருந்த மொனார்ச் குடியிருப்பு வீடு தொடர்பான தகவல்களை வழங்கியதன் பிரகாரமே ரவி மீதான குற்றச்சாட்டு வலுவடைந்தது. பிணைமுறி வழக்கின் நடுநாயகமாக உள்ள அர்ஜுன அலொய்சியஸிற்குச் சொந்தமான கம்பனியொன்றின் மூலமே ரவிக்கான வீடு குத்தகைக்குப் பெறப்பட்டிருந்தது.

அலொய்சியஸ் மற்றும் ரவிக்கிடையிலான நிதிப் பரிவர்த்தனைகள் குறித்த தொலைபேசிப் பதிவுகள் தெளிவாகப் பெறப்பட்டதன் பின்னணியில் ரவி குற்றச்சாட்டை எதிர்கொண்டார். அதன் பிரகாரமே அவர் பதவி விலக வேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்தது.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தனது பதவி விலகலை அறிவித்த ரவி, ''எனக்கான இடத்தை வரலாறு தீர்மானிக்கும். அச்சத்தாலோ அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் பயந்தோ பதவி விலகவில்லை. புதியதொரு அரசியல் கலாசாரத்திற்கு முன்னுதாரணமாகத் திகழும் வகையிலேயே பெருமையுடன் பதவி துறக்கின்றேன்'' என்றார். தேசிய நல்லிணக்க அரசாங்கத்தையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் குற்றம் சாட்டுவதற்கு இணைந்த எதிர்க்கட்சியினர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முனைந்தனர் எனவும் ரவி தெரிவித்திருந்தார்.

உண்மையில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இந்த விசாரணை, விரைவுபடுத்தப்பட்ட தீர்மானம், ரவியின் பதவி விலகல், தொடர்ந்து ஜனாதிபதியும் பிரதமரும் அரசியல் கூட்டங்களில் தெரிவித்து வந்த கருத்துக்கள், -குறிப்பாக ஜனாதிபதி மைத்ரிபால அமைச்சரவைக் கூட்டத்தில் விடுத்த சூளுரை இவற்றையெல்லாம் உன்னிப்பாக நோக்கும்போது நடந்து முடிந்தது ஒரு அரசியல் நாடகம் போன்றும் தோன்றுகிறது.

இதனால்தான், ரவி பதவி விலகாவிட்டால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என இணைந்த எதிர்க்கட்சியினர் கர்ச்சித்தபோது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மௌனமாக இருந்தார். ஏதோ ஒரு கெட்ட சகுனம் இடம்பெறப் போகின்றது என்பதை மஹிந்த முன்னுணர்ந்திருக்கலாம். அவரது திருட்டுத் தனமான யோசனை முறையும் அரசியல் தந்திரமும் அவருக்கு இதை உணர்த்தியிருக்கலாம்.

இது உண்மையில் ஒரு அரசியல் நாடகம்தானா இல்லையா என்ற வாத விவாதத்தைக் கடந்து, குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட ஓர் அரசியல் தலைவர் பதவியிலிருந்து விலகியிருக்கிறார் என்பது வெளிப்படையில் ஜனநாயகம் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை வலுப்படுத்துகின்றது. ஆனால், மத்திய வங்கி பிணைமுறி ஊழலில் தொடர்புபடும் ரவி சுயமாகப் பதவி விலகியமை மாத்திரமே அவருக்கான தண்டனையாக இருக்க முடியாது. விசாரணைகள் நன்கு முடிவுறுத்தப்பட்டு, தகுதியான தண்டனை அவருக்கு வழங்கப்பட வேண்டும். அதுவே, நல்லாட்சி அரசாங்கத்தின் இலட்சணமாக இருக்கும். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாகவும் இருக்கும்.

அவரது பதவி விலகல் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கு இணங்வே நிகழ்ந்திருந்தால் மீளவும் அவர் ஒரு அமைச்சுப் பதவியைக் கையேற்கக் கூடும். அப்போது நடந்து முடிந்தது நாடகம்தான் என்ற ஊகம் உண்மைப்பட்டு விடும். இது நாடகம்தான் என்று வைத்துக் கொண்டால் அதன் உள்நோக்கம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் கடந்து விட்டன. தேர்தலில் வாக்களித்தபடி பெருத்த ஊழல் பேர்வழி எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. கடந்த பல மாதங்களுக்கு முன்பாக முன்னைய ஆட்சியில் முக்கிய பதவி வகித்த பசில் ராஜபக்ஷ மீதான பல்வேறு வழக்குகளில் மூன்று வழக்குகள் மீதான விசாரைணை முழுமையாக நிறைவடைந்துள்ளதை கோப்புகளின் இலக்கத்தைச் சுட்டிக்காட்டி சண்டே டைம்ஸ் அரசியல் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அது அடுத்த கட்ட ஆலோசனைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. இன்றுவரை சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 100 சீரியஸான வழக்குகள் அப்படியே நிலுவையில் உள்ளன. எந்த நியாயமும் கோர முடியாத தாமதத்தை, சட்டமா அதிபர் திணைக்களம் கடைப்பிடித்து வருகின்றது. இந்நிலையிலேயே ''எனது விடயத்தில் காட்டிய விரைவினை ஏனையவற்றிலும் காண்பிக்க வேண்டும்'' என சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவுரை பகர்கிறார் ரவி.

பதவி விலகிய அவர், இவ்வாறான செயற்பாடுகளைச் செய்ய அழுத்தம் கொடுப்பவர்கள் மறு தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்தில் இருக்கின்ற எம்மால் கூட இந்த விடயங்களை அறிந்து விசாரணைகளை காலம் தாழ்த்துவதற்கான வாய்ப்பு எமக்குக் கிடைக்கவில்லை. எனவே, எனது விவகாரத்தை முன்னுதாரணமாகக் கொண்டு எதிர்காலத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் செயற்பட வேண்டும் என்று ரவி கோரிக்கை விடுத்துள்ளார்.

48 மணித்தியாலத்தில் எனது விவகாரத்தில் அவர்களால் தீர்மானத்தை அறிவிக்க முடியுமாயின், மற்றைய விடயங்களிலும் அவ்வாறே செயற்பட வேண்டியது மிக அவசியமாகும் என்றும் ரவி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற குழுவொன்று சட்டமா அதிபர் திணைக்களம் குறித்து முறைப்பாடு செய்வதற்கு பிரதமரையும் ஜனாதிபதி யையும் சந்திக்கவுள்ளது. முன்னாள் ஆட்சியாளர்களின் எல்லையற்ற ஊழல் மோசடிகள், நிதி முறைகேடுகள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் காட்டும் தாமதம் பற்றி முறைப்பாடு செய்யவே அவர்கள் முன்வந்துள்ளனர்.

இதுவரை ஏன் இந்த விசாரணைகளை நிறைவு செய்வதில் விரைவு காண்பிக்கப் படவில்லை என அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். தமது கோரிக்கைக்கு சட்டமா அதிபர் திணைக்களம் பதலளிக்காவிடின், அதற்கெதிராக வீதியார்ப்பாட்டங்களில் இறங்கப் போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

ரவியின் பதவி விலகல் சட்டமா அதிபர் திணைக் களத்தின் மீதான குற்றச்சாட்டு, ராஜபக்ஷவின் நீண்ட மௌனம் என்பவற்றின் ஒத்திசைவை நோக்கும்போது உறுதிப்பட்டு வரும் ஊகத்தை ஜனாதிபதியின் கூற்று வலுப்படுத்தியுள்ளது. அவர் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி, அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உதவியாளர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் தாமதமடைவது பற்றி தனது ஆழ்ந்த அக்கறையையும் கவலையையும் வெளியிட்டுள்ளார்.

ரவி கருணாநாயக்கவின் பதவி விலகலால் கூட்டு எதிரணியினர் குதூகலமடையலாம். ஆனால், முன்னாள் ஆட்சியாளருக்கும் அவரது குடும்பத்திற்கும் என்ன நடக்கப் போகின்றது என்பதை எதிர்பார்த்திருங்கள் என்று ஜனாதிபதி உணர்ச்சிகரமாக கூறியுள்ள கருத்துக்கள் கிட்டிய எதிர்காலத்தில் ஓர் விறுவிறுப்பான நாவல் போல இலங்கை அரசியலில் ஏதோ நடக்கப் போகின்றது என்பதை உணர்த்தி நிற்கின்றது.

ரவி எனும் சின்ன மீனைப் போட்டு ராஜபக்ஷ குடும்பத்தின் பெரிய மீன்களை சட்டத்தின் பொறியில் சிக்க வைப்பதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் வடிவமைத்த அரசியல் நாடகமே அரங்கேறி வருவதாக சண்டே டைம்ஸ் பத்திரிகையின் அரசியல் பத்தியாளர் ஆதாரபூர்வமாக வாதிக்கின்றார்.

பொதுமக்களின் பில்லியன் கணக்கான ரூபாய்கள் கொள்ளையிடப்பட்டு, பெருந்தொகை வெளிநாட்டு வங்கிகளில் ரகசியமாக வைப்பிலிடப்பட்டுள்ளன என்றும், இது குறித்த விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றும் மைத்ரி மீண்டும் கோரியுள்ளார். கடந்த வாரம் நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்தக் குற்றச்சாட்டுக்களை மைத்ரி மிக ஆணித்தரமாக முன்வைத்துப் பேசியுள்ளார்.

இது தொடர்பில் ராஜபக்ஷவும் அவரது குடும்பமும் மிக விரைவில் தீர்ப்புகளை எதிர்கொள்வார்கள் என்றும் மைத்ரி குறிப்பிட்டிருந்தார். அவரது உரையின் வேகத்தை நோக்கும்போது எதிர்வரும் ஓரிரு வாரங்களில் கடந்த கால ஆட்சியின் ஊழல் பெருச்சாளிகளுக்கு ஏதோ நேரப் போகின்றது என்பது மட்டும் தெளிவாகின்றது.



கருணாநாயக்கவின் பதவி விலகல் குறித்து கூட்டு எதிரணியினர் மகிழ்ச்சியடையலாம். முன்னைய ராஜபக்ஷ ஆட்சியில் நடந்த பில்லியன் பகற்கொள்ளைகளுக்கான விளைவினை அவர்கள் விரைவில் கண்டுகொள்வார்கள் என்று மைத்ரி அங்கு சூளுரைத்தார்.

இந்தப் பின்னணியைப் புரிந்துகொண்ட மஹிந்த, இப்போது செயற்கையாக சிரிக்கத் தொடங்கியுள்ளார். ரவி கருணாநாயக்கவை இவ்வளவு அவசரமாக ரணிலும் மைத்ரியும் பதவி விலக்குவார்கள் என்று அவர் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. அது நிகழ்ந்து விட்ட உடனேயே அவரை அச்சம் அப்பிக்கொண் டுள்ளது. நரிகளுக்கே நரிகளைப் பற்றி நன்கு புரியும் என்பார்கள். ரவி மீளவும் காப்பாற்றப்பட போகும் ஒரு சிறிய மீன் அவ்வளவுதான். சிக்க வைக்கப்படப் போகும் பெரிய மீன்கள் குறித்து அதிர்ந்து போயிருக்கிறார் மஹிந்த.

எதிர்வரும் வாரங்கள் தேசிய அரசியல் அதிர்ச்சியளிக்கக் கூடிய சில திருப்பங்களைக் காணப் போகின்றது என்பதை ஜனாதிபதி மட்டுமன்றி, பிரதமரும் குறிப்புணர்த்தியுள்ளார். அவர் கடந்த 13 ஆம் திகதி கலந்துகொண்ட கூட்டமொன்றில் சட்டமா அதிபர் திணைக்களம் ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட் டுள்ள [illegible]ளிகள் தொடர்பாக உடனடி [illegible]க்க முன்வர வேண்டும் என்று கேட்டுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்கனவே விசாரணைகள் நிறைவுபெற்றுள்ள 80 முக்கியமான வழக்குகள் குறித்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஆணைப் பிறப்பித்துள்ள பிரதமர், இது குறித்து தனது அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும் உறுதியளித்தார்.

தலதா மாளிகையில் மதத் தலைவர்களை சந்தித்த போதும் இவ்விடயம் குறித்து அவர் மதத் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தினார். சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்துள்ள வழக்குகள் குறித்தேனும் அது நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை தனக்குள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் பெருச்சாளிகளுக்கு எதிராக இதுவரை நிறைவுற்ற வழக்குகள் குறித்து நடவடிக்கை எடுப்பது தொடர்பான தாமதத்திற்கு சட்டமா அதிபர் திணைக்களமே காரணம் என்பது திட்டமிட்டுப் பேசுபொருளாக்கப்படுகின்றது.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக பொது மக்களாலும் சிவில் நிறுவனங்களாலும் முறைப்பாடுகள் மூலம் முன்வைக்கப்பட்ட அரசியல் வாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து கணிசமான விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. ஆயினும் யாரும் சட்டத்தினால் தண்டிக்கப்படவில்லை. இது சட்டமா அதிபர் திணைக்களம் குறித்த சந்தேகத்தை எழுப்பியிருந்த சூழலில் தற்போது அதற்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்படுகின்றன.

திணைக்களம் அவற்றை மறுத்தபோதும் ஏதோ ஓர் இடத்திலிருந்து வரும் அழுத்தங்களுக்கு அது தலை சாய்ப்பது போல் தெரிகின்றது. சிவில் செயற்பாட்டாளர் குழுக்களும் உயர் நீதிமன்றத்தில் பாரிய ஊழல் குறித்து தாம் தாக்கல் செய்த வழக்குகள் மீதான விசாரணையை துரிதப்படுத்துமாறு சமீபத்திய தொலைக்காட்சி நேர்காணலொன்றில் வலியுறுத்தின. இங்கிருந்துதான் நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவிற்கு எதிரான கருத்துக்களையும் இந்த சிவில் செயற்பாட்டாளர் குழுக்கள் முன்வைக்கின்றனர். அவருக்கு எதிராக ஆளும் கட்சி அரசாங்கமே நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டு வர எத்தனிக்கின்றது.

காரணம், பாரிய ஊழல் மோசடி வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் விசாரிப்பதாயின் அதற்கு தற்போதைய அரசியல் அமைப்பில் இடமில்லை என்றும் அதில் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்றும் நீதியமைச்சர் வாதிக்கின்றார். ஆக, ஊழல் குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ள ராஜபக்ஷாக்களை நீதியமைச்சும் அவரது அதிகாரத்திற்கு உட்பட்ட சட்டமா அதிபர் திணைக்களமும்தான் பாதுகாப்பது போன்ற ஒரு புலக்காட்சி இங்கு சிவில்

அமைப்புக்களாலும் ஜனாதிபதி, பிர தமர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களாலும் உரு வாக்கப்படுகின்றது.

இத்தனைக்கும் மத்தியில் ராஜபக்ஷ ஆட்சியின்போது இடம்பெற்ற பாரிய ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு ஒன்று அல்ல பத்து ஆணைக் குழுக்களைக் கூட நியமிக்கத் தான் தயார் என்று ஜனாதிபதி சிறிசேன தெரிவிக்கின்றார்.

முன்னாள் இலங்கையின் முன்னணி அரசியல் புள்ளிகள் மூன்று பேர் டுபாயில் NBD வங்கியில் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வைப்பிலிட்டுள்ள தாக ஊடகங்கள் அறிக்கைப்படுத்தியுள்ளன. இதனை முன்னிறுத்தியே கருணாநாயக்கவின் விவகாரம் மற்றும் பணப் பரிவர்த்தனை விவகாரம் முன்னாள் ஆட்சியின் போது கொள்ளையிடப்பட்ட பில்லியன்களில் ஒரு துளியாகும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கூறுகின்றார்.

எது எவ்வாறிருப்பினும், மர்மங்களால் சூழ்ந்துள்ள இலங்கை அரசியலில் அடுத்த கட்டம் என்ன நிகழும் என்பதை ஊகிப்பது சிரமமானதுதான். நடந்து முடிந்தது ஒரு நாடகம்தான் என்ற ஊகத்தை உறுதி செய்வதற்கு மக்கள் ஆவலோடு காத்திருக்கும் ஒரே சாட்சியம் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த யாரேனும் மிகக் கிட்டிய எதிர்காலத்தில் நீதி விசாரணைத் தீர்ப்பொன்றுக்கு முகம்கொடுப்பதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாடுவது நலம்

இல்லியாஸ் பக்கீர் மாக்கார்

# கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்த வேண்டும்

இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி இந்நாட்டு மக்கள் வரலாற்று சிறப்புமிகு தீர்மானத்தை எடுத்திருந்தார்கள். அதன் மூலம் இந்நாட்டு அரசியலில் மிக முக்கியமான இரண்டு மாற்றங்கள் ஏற்பட்டது. ஒன்று, இந்நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டினதும் கூட்டிணைவு. இரண்டாவது, இந்நாட்டின் எதிர்க்கட்சி தலைமைப் பதவி தமிழ் தலைவர் ஒருவருக்கு வழங்கப்பட்டது. இன்று அவரின் கீழ் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஓரணியாக திரண்டுள்ளார்கள்.

கடந்த தினம் எதிர்க்கட்சி தலைவர் ஆர். சம்பந்தன் பேரினம் விரும்பாத எந்தவொரு தீர்மானத்திற்கும் இந்நாட்டின் தமிழ் மக்கள் உடன்படாது என்பதாகத் தெரிவித்தார். இதன் அர்த்தம், பேரினம் உடன்படும் தீர்மானத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பை சூழவுள்ள மக்கள் உடன்படும் என்பதாகும். இது எமது நாட்டின் எதிர்கால நல்லிணக்கம் தொடர்பில் இதுவரையில் தெரிவிக்கப்பட்ட முக்கியமான கருத்தொன்றாகும் எனக் கூறினால் பிழையாகாது.

வரலாற்றில் முன்பொருபொழுதும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் உடன்பாட்டில் அரசியலமைப் போன்று உருவாக்கப்படவில்லை. தற்போது நல்லாட்சி அரசின் கீழ் அதற்கான சிறந்ததொரு சூழல் உருப்பெற்று வருகிறது. தற்பொழுது யாராவது அரசியல் இலாபம் கருதி அதை புறக்கணிப்பதாக இருந்தால் அது நாட்டிற்காக வேண்டி அவர்கள் செய்யக்கூடிய பொறுப்புக்களை மீறுவதாகவே அமையும். அது நாட்டிற்கு செய்யும் துரோகமாகும். இந்நாட்டில் வாழும் பல்லின மக்களுக்கு மத்தியில் அச்சம், சந்தேகங்களை ஏற்படுத்தி தமது அரசியலை போசித்துக்கொள்ள இடமளிக்க விடாமல் சகல அரசியல் தலைவர்களும் உன்னிப்பாக இருக்க வேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்பக் கிடைத்துள்ள இச்சந்தர்ப்பத்திலிருந்து பிரயோசனம் பெற்றுக் கொள்ள சகல அரசியல் தலைவர்களும் அதை தமது பொறுப்பாகக் கருதி செயற்பட வேண்டும். உலக வரலாற்றில் இது போன்ற பொன்னான சந்தர்ப்பங்களிலிருந்து உரிய பிரயோசனத்தை பெறாததன் காரணத்தினால் ஏற்பட்ட கவலைக்கிடமான சம்பவங்களிலிருந்து நாம் படிப்பினை பெற வேண்டும். போராட்டங்களுக்கு பிந்திய காலங்களில் மேற்கொண்ட தவறான தீர்மானங்களினால் குறித்த நாடுகளுக்கு செல்வங்களை இழக்க நேரிட்டது. ஈராக், யூகோஸ்லாவியா, லிபியா, சிரியா போன்ற நாடுகளிடமிருந்து நாம் படிப்பினை பெற வேண்டும். அதுபோன்று போராட்டங்களுக்கு பிந்திய காலங்களில் நாட்டை சரியான பாதைக்கு இட்டுச்சென்ற மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளை பார்த்து எமது எதிர்காலத்தை திட்டமிட முயற்சிப்பது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும்.

பல்வகைமை எமது நாட்டின் வளமேயன்றி சுமையல்ல. தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் இந்நாடு முன்பிருந்த நிலையையும் ஏனைய நாடுகள் முன்பு எப்படியிருந்தது என்பதையும் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும். யுத்தம் இல்லையெனக் கூறுவது சமாதானம் இல்லையென்பதை புரிந்துகொள்ள அன்றிருந்த ஆட்சியாளர்களுக்கு முடியாமல் போனது துரதிஷ்டமே. யுத்தத்திற்கு பிந்திய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த பல்வேறு விடயங்களை சரியான முறையில் விளங்காமையினால் நாட்டில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பக் கிடைத்த பொன்னான தருணத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இழந்துகொண்டார்.

அதுபோன்று 2001 மற்றும் 2004 காலப்பகுதிகளில் பிரதமர் ரணில், ஜனாதிபதி சந்திரிக்கா ஆகியோருக்கு பொதுவானதொரு நிகழ்ச்சி நிரலின் கீழ் இந்நாட்டு மக்களை ஐக்கியப்படுத்துவதற்கு சிறந்ததொரு சந்தர்ப்பம் உருவாகியிருந்தது. ஆனால் துரதிஷ்டசமாக அச்சந்தர்ப்பமும் கைநழுவிப் போனது. வரலாற்றை நோக்கும்போது எதிர்காலத்தில் இதுபோன்ற சந்தர்ப்பங்கள் மீளவும் உருவாகும் என எமக்கு நினைக்க முடியாது. அதனால் நல்லாட்சி அரசின் கீழ் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்குரிய வாய்ப்பை கைநழுவிச் செல்ல இடமளிப்பதற்கு ஒருவருக்கும் உரிமையில்லை.

நல்லிணக்கத்தை உருவாக்கும் பயணத்தில் நாம் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, மரியாதை வழங்கி முன்செல்ல வேண்டும். கடந்த இரண்டு வருடங்களுக்குள் அதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான தைரியத்தை மக்கள் கொடுத்துள்ளார்கள். இவ்வாய்ப்பின் மூலம் நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப வேண்டும். 2005 ஆகஸ்ட் 17ஆம் திகதி பெற்ற வெற்றியை தனியொரு கட்சி பெற்ற வெற்றியொன்றாக குறுகிய நோக்கில் அர்த்தம் கற்பிக்க முடியாது. அதற்கு பல காரணங்கள் உள்ளன.

இது நல்லாட்சி விழுமியங்களின் அடிப்படையில் கிடைத்த வெற்றி. சட்டம் சகலருக்கும் சமமாக அமைய வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்க பட வேண்டும். நல்லாட்சியை கொண்டு வர வாக்களித்த மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. எனவே இவ்வாய்ப்பை கைநழுவ விட்டால் எதிர்கால சந்ததி எம்மிடம் கேள்வி எழுப்பும்.

# வில்பத்து விவகாரம்:



# பூர்வீக இடங்களை முஸ்லிம்கள் இழக்கும் அபாயம், தென்னிலங்கை அரசு போன்றே வட மாகாண சபையும் பாரபட்சம்

• மஸிஹுஉத்தீன் இனாமுல்லாஹ்

1990 ஆண்டு வடக்கிலிருந்து முற்றாக விடுதலைப் புலிகளால் முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட பொழுது மன்னார் முசலி பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் புத்தளம் உட்பட நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று அகதிகளாகக் குடியேறியமை நாடறிந்த, உலகறிந்த விடயமாகும்.

வடக்கிலிருந்து விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை விரட்டியடித்தமை ஒரு வரலாற்றுத் தவறு என்றும், அதற்காக வருந்துவதாகவும் தமிழ்த் தலைமைகள் கூறினாலும் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களது மீள்குடியேற்றத்தின் பொழுது முஸ்லிம்கள் மீள்குடியேறுவதைத் தடுப்பதற்கான சகல வழிமுறைகளையும் தமிழ்த் தலைமைகள் உட்பட வட மாகாண சபை மேற்கொண்டமை கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் உதவிய பொழுது முஸ்லிம்களை பழைய அகதிகள் என வகைப்படுத்தி பாகுபாடு காட்டுவதில் தென்னிலங்கைத் தலைமைகளும் வடபுல தமிழ்த் தலைமைகளும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். இன்னும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் அரசாங்கத்தின் பங்காளிகளாக இருந்த முஸ்லிம் கட்சிகளும் அமைச்சர்களும் ஊடகங்களில் அரசியல் போர் நடத்திய பொழுதும் மக்களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்கத் தவறியுள்ளனர். தற்பொழுது முஸ்லிம்களுக்குச் சொந்தமான சுமார் 85% காணிகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இன்றுவரை, மேற்படி பிரதேசங்களில் இருந்து விரட்டப்பட்ட மக்களின் சரியான புள்ளிவிபரங்கள், அவர்களது காணிகள் வதிவிடங்கள் இழப்புக்களின் தரவுகள், ஆவணங்கள், கடந்த 27 வருடங்களில் அவர்களது சனத்தொகை அதிகரிப்பு, அவர்களில் மீள்குடியேற விருப்புபவர்களது விபரங்கள் என எதுவுமே எந்தவொரு தரப்பினாலும், அரசியல் கட்சியினாலும், அரச யந்திரத்தினாலும் முழுமையாக ஆவணப்படுத்தப்படவோ, முறையாக அரசினதோ சர்வதேச அமைப்புக்களினதோ கவனத்திற்கு கொண்டுவரப்படவோ இல்லை என்பதே மிகவும் கசப்பான உண்மையாகும்.

இந்த வருடம் குறித்த விடயம் தொடர்பாக ஆராய ஜனாதிபதியினால் ஒரு உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த உபகுழு பல்வேறு விடயங்களை ஆய்வு செய்து சில தீர்வுகளை முன்வைத்த பொழுதும் அவை முழுமையாக பறிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் பூர்வீக இடங்களை பெருக் கொடுப்பதற்கான எத்தகைய முன்மொழிவுகளையும் முன்வைக்கவில்லை.



வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களின் பூர்வீக இடங்களை அரச படைகள் மாத்திரமன்றி, தமிழ் ஆயுதக் குழுக்களும் ஆக்கிரமிப்பாளர்களும் கைப்பற்றியமையும் இன்று வரை அவற்றை மீளப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றமையும் அண்மைக் காலமாக பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

விவகாரம் இவ்வாறு இருக்க, மன்னார் மாவட்ட முசளிப் பிரதேச மக்களின் பூர்வீக இடங்களான மறிச்சிக்கட்டி, பாலைக்குழி, கொண்டச்சி, கரடிக்குழி ஆகிய கிராமங்களை அரச வர்த்தமாணி அறிவித்தல்கள் மூலம் வில்பத்து வனப் பிரதேசத்துடன் 2009, 2012, 2017 ஆகிய காலப்பகுதிகளில் அரசாங்கம் இணைத்துள்ளமை முஸ்லிம் சமூகத்தின் மீது நிகழ்த்தப்பட்டுள்ள பாரிய அராஜகமாகும்.

அனுராதபுர மாவட்டத்திற்கு உட்பட்ட வில்பத்து வனப்பிரதேசத்தின் கிழக்குப்பகுதி ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்டு காடழிப்பு இடம்பெற்றுள்ள நிலையில், (அங்கு காட்டு யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று இதுவரை சுமார் 43 யானைகள் கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதனைக் கண்டுகொள்ளாத அரசும் சூழலியலாளர்களும் வில்பத்து வனத்திற்குள் சேராத மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட முசளிப் பிரதேச மக்களின் பூர்வீக இடங்கள் விடயத்தில் கைக்கொள்ளும் அநீதியான நிலைப்பாடுகள் [illegible] காட்டப்படும் கொடூரமான பாரபட்சமாகும்.

மாறாக கீழ்க்காணும் ஐந்து பிரதான அம்சங்களுக்குள் மக்களிடம் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது:

1. தற்பொழுது இருக்கின்ற குடியிருப்புக்களில் தொடர்ந்தும் மக்கள் இருக்கலாம்.
2. தற்பொழுது இருக்கின்ற வதிவிடங்களுக்கு மேலதிகமாக விவசாய மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளுகாக காணிகள் தேவைப்படின் அரசுடன் வேண்டுகோள் விடுக்கலாம்.
3. வனப்பிரதேசங்களில் குடியிருப்புக்களை அமைக்காது சேனைப்பயிர்ச் செய்கைகளில் ஈடுபடலாம்.
4. அரச படைகள் கைப்பற்றியுள்ள நிலப்பிரதேசங்களுகு மாற்றீடாக காணிகள் தேவைப்படுவோர் அத்தாட்சிப்படுத்தல்களோடு விண்ணப்பிக்கலாம்.
5. கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக இடங்கள் தேவைப்படுவோர் விண்ணப்பிக்கலாம்.

உண்மையில் தமது பறிபோயிருக்கின்ற பூர்வீக இடங்களை மீளப்பெற்றுக் கொள்ள தமக்கிருக்கின்ற உரிமை மறுக்கப்பட்டு, அரசின் தயவில் சலுகையடிப்படியிலேயே மேற்படி தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அந்தப் பிரதேச மக்கள் மேற்படி உபகுழுவின் முடிவுகளைக் கருதுகின்றனர்.

கவலைக்குரிய விடயம் என்னவென்றால், எதிர்வரும் 21/08/2017 திங்கட்கிழமை மேற்படி உபகுழு தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தமது விண்ணப்பங்களை மேற்படி குழுவினரிடம் இதுவரை சமர்ப்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை, அந்த மக்கள் சார்பாக எந்தவொரு சிவில் அமைப்பும் அரசியல் கட்சியும் தரவுகள் அத்தாட்சிப்படுத்தல்களுடன் கூடிய ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பிரதேச மக்களிடம் கேட்கின்ற பொழுது அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைக் கூறுகின்றார்கள். தத்தமது பூர்வீக இடங்களில் அல்லது தரப்படவுள்ள இடங்களில் சென்று குடியேறுவதற்கான எந்த விதமுறையான ஏற்பாடுகளும் திட்டமிடல்களும் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளும் அங்கு இல்லை.

அங்கு இருக்கின்ற புதிய அரச அதிகாரிகளுக்கு எங்களை அறிமுகம் செய்வதிலும் எமது அத்தாட்சிப்படுத்தல்களை முன்வைப்பதிலும் பல சிக்கல்களும் நெருக்கடிகளும் காணப்படுகின்றன. எமது பூர்வீக இடங்களுக்கான உரிமைப் பத்திரங்கள் மற்றும் அரச அனுமதிப் பத்திரங்களை சமர்ப்பிப்பதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அனுமதிப் பத்திரங்கள் காலாவதியாகிவிட்ட காரணங்கள் கூறப்படுகின்றன என இன்னோரன்ன பிரச்சினைகளை அவர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறான கையறுநிலையில் அப்பிரதேச மக்கள் பல கோரிக்கைகளை முன்வைக்கின்றார்கள்:

1. எமது பூர்வீக இடங்களை வில்பத்து வனப் பிரதேசமாக பிரகடனம் செய்துள்ள வர்த்தமாணி அறிவித்தல்களை இரத்துச் செய்யுங்கள்.
2. முசலிப் பிரதேச மக்களின் மீள்குடியேற்றத்திற்கான முறையான திட்டமிடல்களை வகுத்து உட்கட்டமைப்புக்கள் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துங்கள்.
3. அந்தப் பிரதேசங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டவர்கள் மாத்திரமன்றி, இன்று வரை சனத்தொகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புக்களை கணக்கீடு செய்து அவற்றுக்கேற்ப மீள்குடியேறும் உரிமையினை அத்தாட்சிப்படுத்துங்கள்.
4. பதிக்கப்பட்ட மக்களின் காலடிக்கு அரச யந்திரத்தினை கொண்டு சென்று எம்மைப் பற்றிய தரவுகளையும் எங்களுக்குச் சேர வேண்டிய வதிவிடங்கள் காணி நில உரிமைகள் குறித்த அவனப்படுத்தல்களை செய்து தாருங்கள்.
5. விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட வடபுல மக்களின் மீள்குடியேற்றத்திற்காக வடமாகாண சபை தெளிவான வேலைத் திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும்.
6. முஸ்லிம் (பழைய அகதிகள்) மீள்குடியேற்றத்திற்கான விஷேட செயலணியை அமைத்து பழைய அகதிகள் என பாகுபாடு காட்டப்படும் புலிகளால் வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களின் மீள் குடியேற்ற ஏற்பாடுகளை செய்யுங்கள்.
7. முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், உட்கட்டமைப்பு வசதிகள், அரச நிர்வாக கட்டமைப்புகள், அடிப்படை பொதுவசதிகளை குறிப்பிட்ட அமைச்சுகளின் வரவு-செலவுத் திட்டங்களின் கீழ் கொண்டு வந்து உள்நாட்டு வெளிநாட்டு நிதியுதவிகளை கிடைக்கச் செய்யுங்கள்.
8. எதிர்வரும் 21/018/2017 அன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள உப குழுவின் அறிக்கையை காலம் தாழ்த்தி, அது சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அரச யந்திரங்களூடாக அல்லது விஷேட செயலணியூடாக பதிக்கப்பட்ட மக்களின் தரவுகளை விண்ணப்பங்களினை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள்.

இந்த நாட்டின் சம அந்தஸ்துள்ள, சம உரிமையுள்ள, வரியிருப்பாளர்களான பதிக்கப்பட்ட மக்கள், மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பிரதமர் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளுராட்சி உறுப்பினர்கள், அரச யந்திரங்கள், உநாட்டு வெளிநாட்டு உதவிகள் என சகல தரப்பினரதும் சேவைகளைப் பெற உரித்துடையவர்கள் என்ற வகையில் அவர்கள் விடயத்தில் சகல தரப்புக்களும் பாகுபாடு கட்டுவதனை ஒரு பொழுதும் அங்கீகரிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி மஹீஸ் அவர்கள் குருநாகல் மாவட்டத்திலுள்ள குளியாப்பிட்டிய பிரதேசத்தைப் பிறப்பிடமாக கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை குளியாப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயத்திலும் உயர்நிலை கல்வியை சியபலாகஸ்கொடுவ மதீனா தேசிய பாடசாலையிலும் கற்றுள்ளார். பேராதனை பல்கலைக்கழகத்தில் சிறப்பு கலைமாணிப் பட்டத்தையும் (BA), கொழும்பு பல்கலைக்கழகத்தில் சூழலியல் துறையில் முதுமாணிப் பட்டத்தையும் (MA), நெதர்லாந்து பல்கலைக்கழகத்தில் 'மஹாவலி நதியின் நீர் மாசடைவு' குறித்து கலாநிதிப் பட்டத்தையும் (PhD) பூர்த்திசெய்துள்ளார்.

கடந்த 16 ஆண்டுகளாக பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் இவர், கொழும்பு பல்கழைக்கலகத்தின் சமூகவியல் கற்கைப் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், சிரேஷ்ட மாணவர் ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார். காலநிலை மாற்றம், வனவிலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான பிரச்சினை, இயற்கை அனர்த்தம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வரும் விரிவுரையாளர் மஹீஸ் அவர்கள், முஸ்லிம் சமூகத்தின் கல்விநிலை குறித்து மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி இங்கு தரப்படுகிறது.

# முஸ்லிம்களின் கல்விமுறை இன்று பிழையான வழியில் செல்கின்றது

**கலாநிதி மஹீஸ்**
சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்

நேர்காணல்: ஹேட்டி ரம்ஸி

- **இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்வி நிலை குறித்த உங்களது மனப்பதிவு எவ்வகையிலுள்ளது?**

முஸ்லிம் சமூகத்தில் கல்விக்குரிய பெறுமதி வழங்கப்படவில்லை. ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம் சமூகத்தில் ஒரு பிரபல்ய கல்விமுறையே காணப்படுகின்றது. 1970 முதல் 1990 தசாப்தங்களில் முஸ்லிம்கள் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கல்வியில் சிறந்து விளங்கினார்கள். உலகமயமாக்கலுடன் கணினித் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழிப் பரவலைத் தொடர்ந்து முஸ்லிம்கள் அறிவு ரீதியான கல்வியிலிருந்து நீங்கி தொழில்நுட்ப ரீதியான கல்வி முறைக்கு மாறினார்கள். இதுவொரு ஆபத்தான நிலையை தோற்றுவித்தது.

முஸ்லிம்கள் செறிவாக வாழும் பகுதிகளில் சர்வதேசப் பாடசாலைகள் உருவாகின. ஆங்கில மொழியைத் தெரிந்தால் எல்லாவற்றையும் அடையலாம் என முஸ்லிம்கள் கருதுகிறார்கள். மொழியால் எல்லாவற்றையும் செய்ய முடியாது. சீனா, ஜேர்மன், பிரான்ஸ் போன்ற தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றமடைந்த நாடுகளில் பெரும்பாலானவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. எமது பிள்ளைகளுக்கு சரியான முறையில் தமிழ் பேச முடியாது. ஆனால் ஆங்கிலம் கற்பிக்கிறார்கள். ஆங்கிலம் கதைப்பதை ஆடம்பரமாக நினைக்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் எமது தாய் மொழி தமிழாகவோ ஒன்றில் சிங்களமாகவோ இருக்க வேண்டும்.

முஸ்லிம்களின் கல்விமுறை இன்று பிழையான வழியில் சென்று கொண்டிருக்கிறது. ஆண் பிள்ளைகள் இன்று தொழில்நுட்ப கல்வியின் பின்னால் செல்கிறார்கள். அறிவு ரீதியான கல்வியே எமக்கு தேவைப்படுகிறது. எமது சமூகத்தில் இன்று எத்தனை இரசாயனவியலாளர்கள் உள்ளார்கள்? எத்தனை பேர் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களாக உள்ளார்கள்? உளவியலாளர்களாக எத்தனை பேர் உள்ளார்கள்? எனவே இதுவொரு கவலைக்கிடமான விடயம்.

இன்று முஸ்லிம்களின் கல்வி முழுமையாக பெண்களின் கல்வியாக மாறியுள்ளது. ஒரு பல்கலைக்கழகத்தில் 100 பேர் இணைந்தால் அதில் 90 பேர் பெண்கள். இதுவொரு ஆபத்தான அடையாளம். ஒரு சிலரே இன்று அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ளார்கள். இன்னும் 15 வருடங்களில் தனியார் துறை ஊழியர்களும் ஆசிரியைகளுமே அதிகம் காணப்படுவார்கள்.

கொழும்பு மாவட்டத்தில் 50 சிறந்த பாடசாலைகளுள் ஒரு முஸ்லிம் பாடசாலை கூட இல்லை. பல்கலைக்கழகத்திற்கு நுழையும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைவு. முஸ்லிம்களுக்கென ஒதுக்கப்பட்ட கல்விக் கோட்டாவை கூட அடைந்துகொள்ள முடியாத அளவுக்கு இவர்கள் பலவீனமாக உள்ளார்கள். வெளிப்படையாகப் பார்க்கும்போது முஸ்லிம் மாணவர்கள் கற்பது போன்றே விளங்கும். ஆனால் உள்ளார்ந்த ரீதியில் அப்படியில்லை.

- **கல்வி பற்றிய எமது சமூகத்தின் மனப்பதிவுகள் எவ்வகையிலுள்ளது?**

எமது சமூகத்தில் பெரும்பாலானவர்கள் கலைப் பட்டதாரிகளை மதிப்பதில்லை. ஒவ்வொரு முஸ்லிம் கிராமத்திலும் தனிப்பட்ட அரசியல் உள்ளது. ஒவ்வொரு கிரமத்திலும் உள்ள நிர்வாக சபைகள் அந்தக் கிராமத்தில் படிக்கக்கூடியவர்களை ஊக்குவிக்கும் கலாசாரமொன்று காணப்படுகிறதா? அதாவது கல்விசார் துணைக் கலாசாரமொன்று ஒவ்வொரு கிராமத்திலும் வர வேண்டும். முன்னர் அப்படிக் காணப்பட்டது.

முன்னர் வறுமையிலும் கற்றார்கள். வறுமை கல்வியை ஊக்குவிக்கும் சாதனமாகக் காணப்பட்டது. ஒரு சவால் ஒன்று இருந்தது. ஆனால் இன்று அப்படியில்லை. இன்றைய வாலிபர்களை குறைசொல்ல முடியாது. அவர்கள் சமூகத்தில் உள்ளவற்றையே எடுத்துக்கொள்கிறார்கள். முஸ்லிம் கிராமங்களில் படிக்கும் வசதியுள்ள ஆண் பிள்ளைகளுள் பெரும்பாலானவர்கள் இன்று தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். இன்னும் அதிக மானவர்கள் முச்சக்கர வண்டி ஓட்டுகிறார்கள்.

- **எமது சமூகத்தில் ஆண் பிள்ளைகள் கல்வியில் ஈடுபாடு காட்டாமைக்குரிய காரணங்கள் என்ன?**

இரும்பு தீப்பிடித்து எரியும்போது பஞ்சைக் காப்பாற்ற முடியாது. அது இயல்பாகவே எரியும். சமூகத்தில் கல்விக்கான வெகுமதி வழங்கப்படாதபோது பாடசாலையிலோ, பல்கலைக்கழகத்திலோ, ஊடகங்களிலோ கல்விக்கான பெறுமதியை வழங்க முடியாது. ஜப்பான், லண்டன் போன்ற செல்வந்த நாடுகளுக்கு தொழில் நிமித்தம் சென்று வந்தவர்களுக்கும், வாகனங்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்குமே சமூகம் மதிப்பளிக்கிறது. இவ்வாறு இருக்கும்போது எந்தவொரு மாணவனும் பல்கலைக்கழகம் செல்வதைப் பற்றியோ, படிக்க வேண்டும் என்பது பற்றியோ அவனுக்குள் ஒரு பெறுமதி ஏற்படாது.

- **ஆண்கள் படிப்பில் ஆர்வம் செலுத்தாமல் இருப்பதால் ஏற்படும் சமூக பாதிப்புக்கள் என்ன?**

ஆண் பிள்ளைகள் படிக்காததனால் பாரியதொரு தாக்கம் சமூகத்தில் ஏற்பட்டுள்ளது. இன்று முஸ்லிம் சமூகத்தில் தலைமைப் பொறுப்பு ஆண்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்னும் 15 வருடங்களில் படித்த ஆண்களின் எண்ணிக்கை குறைவடையும். அதே நேரம் படித்த பெண் பிள்ளைகளுக்கு பொருத்தமான கணவர்கள் இல்லாமல் போகும். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் பெண் பிள்ளையின் குடும்பத்தில் பல்கலைக்கழகம் அனுப்புவதா? திருமணம் முடித்துக் கொடுப்பதா? என்கின்ற பிரச்சினை ஏற்படுகின்றது. எனவே சாதாரணமாக வியாபாரம் செய்பவர்கள் அல்லது முச்சக்கர வண்டி ஓட்டுபவர்களுக்கு அல்லது வெளிநாடு சென்று வந்தவர்களுக்கு திருமணம் முடித்து வைக்கிறார்கள்.

100 பேர் உயர்தரப் பரீட்சை எழுதினால், அதில் ஐவரே பல்கலைக்கழகம் வருகிறார்கள். இவர்களுக்கு முழு சமூகமும் பொறுப்பாக இருக்க வேண்டும். இவர்களைப் பாதுகாக்கும் போதே சமூகம் பாதுகாக்கப்படும். இன்று பாடசாலைகளில் போதியளவு [illegible] அதிபர்களும் குறைவு [illegible]

- **முஸ்லிம் சமூகத்தின் இன்றைய சுகாதார நிலைமைகள் எவ்வகையிலுள்ளது?**

முஸ்லிம் திருமண வீடுகளின் ஒரு சாதாரண மனிதனுக்கு சாப்பிட முடியுமான உணவுகள் இல்லை. இன்று அதிகமான முஸ்லிம்கள் துரித உணவுகளுக்கு அடிமைப்பட்டுள்ளனர். முன்னர் நோன்பு பிடித்தால் ஒரு 10 கிலோவாவது எடை குறையும். இப்போது அதிகமான உணவுகளை உட்கொள்வதால் உடல் எடை அதிகரிக்கிறது.

இன்று ஒவ்வொரு கிராமத்திலும் 60 வயதை தாண்டிய எத்தனை ஆண்கள் உள்ளார்கள்? இன்று அதிகமாக மன அழுத்தத்திற்கு உட்படுபவர்கள் ஆண்கள். சக்கரை வியாதி மற்றும் இருதய நோயால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் ஆண்கள். இன்று முஸ்லிம் சமூகத்தில் சக்கரை வியாதி ஒரு பெருமைக்குரிய நோயாக மாறியுள்ளது.

இன்று பள்ளிவாயல்களின் மூலமாக முஸ்லிம்களின் கல்வி, சுகாதாரம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். இன்று சில கிராமங்களில் 16 வயது பிள்ளைகளுக்கும் சக்கரை வியாதி. இன்னும் 50 வருடங்களில் சக்கரை வியாதி பரம்பரை நோயாக மாறும் அபாயம் உள்ளது.

- **அந்நிய சமூகத்தினரிடம் முஸ்லிம்கள் பற்றிய மனப்பதிவு எவ்வகையிலுள்ளது?**

இஸ்லாத்தைச் செயலால் காண்பித்து அந்நிய மக்களை கவர்ந்துகொள்ள வேண்டிய இடங்களில் நாம் அதை இல்லாமல் செய்து கொள்கிறோம். இன்று முஸ்லிம்களின் நடத்தைகளில் அந்நியர்கள் சந்தேகம் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. முஸ்லிமான ஒருவர் 1000 ரூபாவை கொடுத்தால் அது கள்ளப் பணமா என்று பார்ப்பார்கள். மருந்து வாங்கச் செல்லும் இடங்களிலோ அல்லது வரிசையில் நிற்க வேண்டிய இடங்களிலோ அல்லது ஒழுங்கு முறைப்படி செய்ய வேண்டிய விடயங்களில் முஸ்லிம்கள் குறுக்கு வழிகளை பின்பற்றுகிறார்கள். லஞ்சம் கொடுத்தாவது காரியத்தை செய்து முடிக்கப் பார்க்கிறார்கள். அறிவு நுட்பமின்மையே இதற்குரிய காரணமாகும்.

- **முஸ்லிம் சமூகத்தின் இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வாக நீங்கள் முன்வைக்கும் விடயங்கள் என்ன?**

எமது சமூகத்தின் தலைமைத்துவத்தில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும். பள்ளி நிர்வாக சபை தலைவர்கள் படித்தவர்களாக இருக்க வேண்டும். அடிக்கடி தகவல்கள் திரட்டப்பட்டு சமூகம் விழிப்பூட்டப்பட வேண்டும். இன்று மத்ரஸாக்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அதுபோன்று பாடசாலைக் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அடிக்கடி மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டும். அரசாங்கம் 13 வருடக் கல்வியை கட்டாயப்படுத்தியுள்ளது. அதுபோன்று எமது சமூகத்திலும் கல்வியை கட்டாயப்படுத்த வேண்டும். பாடசாலையை விட்டு இடை நிற்பவர்களை தேடி அவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

படித்தவர்களுக்கு மரியாதை கொடுக்கும் சூழலை உருவாக்க வேண்டும். மூளை வளர்ச்சியுடன் உள வளர்ச்சியையும் மையப்படுத்திய கல்விமுறைகளை வழங்க வேண்டும். மன அழுத்தங்களின்றி நாம் சமூகத்தில் வாழ வேண்டும். உலமாக்களை ஒரு தலைமைத்துவத்தின் கீழ் [illegible] வேண்டும்.

(பக்.14)



## எழுவாய், பயமில்லை

அபூ ஷாமில்

# தொழுகாடை

இப்பொழுது மக்தப் என்றும் மத்ரஸாக்கள் என்றும் அழைக்கப்படும் முன்னைய பள்ளிக் கூடங்களில் அஹ்காமுஷ் ஷாபியில் இருந்து தொழுகையின் ஓதல்களும் சட்டங்களும் பெயர்த்தெடுக்கப்பட்ட தொழுகாடை எனும் கிதாபு பாடமாக்குவதும் ஒரு விடயமாக இருந்தது. அரபுத் தமிழில் தொழுகை அடைவு என்று பொறிக்கப்பட்டுள்ள இந்தச் சிறிய கிதாபிலே படித்து நடைமுறைப் படுத்தும் உமாக்கள் இன்னும் நமது நாட்டிலே இருக்கிறார்கள்.

இதே பாரம்பரியத்தைத் தான் தொழுகையின் ஆடையிலும் பிரயோகிப்பதற்கு சில ஆலிம்கள் முயற்சிக்கிறார்கள்.

தொழுகை என்பது படைத்த எஜமானுடன் அடியான் தொடர்பு கொள்கின்ற உன்னதமான செயற்பாடு. இந்தத் தொழுகையின் போது மறைக்கப்பட வேண்டிய குறைந்த எல்லையாக தொப்புளும் முழங்காலும் வரையறுக்கப்பட்டிருந்தாலும், தொழுகையின் போது இந்த அளவான ஆடைக்குள் யாருமே தங்களைச் சுருக்கிக் கொள்வதில்லை. நீளமான உடைகளால் கை, கால் உட்பட மேனியை முழுதுமாய் மறைத்து, பேணுதலுக்காக தலைமுடியையும் மறைக்கும் அளவுக்கு தொழுகையின் ஆடையை வரையறுத்துத் தொழுபவர்களும் நம்மில் அநேகர் இருக்கிறார்கள்.

இதற்கு மறுதலையாக அவ்ரத்தை மறைத்தல் என்பதற்கு மேலதிகமான எந்தக் கரிசனையுமின்றி உடுத்தியிருந்த ஆடையுடனே ஓடி வந்து தொழுகையில் இணைந்து கொள்பவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.

தொழுகை என்பது ஒரு நாளின் மாறுபட்ட வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மனிதனின் அன்றாடச் செயற்பாடுகளுக்கூடே நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு கடமை. ஒவ்வொருவரும் தமது அன்றாடச் செயற்பாடுகளுக்குரிய ஆடை அமைப்பில் தான் தமது வழமையான அலுவல்களிலே ஈடுபடுவார்கள். இந்த அலுவல்களுக்கு மத்தியில் அதான் ஒலிக்கின்ற போது பள்ளிவாசலுக்கு ஓடி வருபவர்களை உட்காரவைத்து, தொழுகைக்குரிய ஆடை என்று நாங்கள் வரையறுத்திருக்கின்ற ஆடையில்தான் பள்ளிவாசலுக்கு வர வேண்டும் என்று பயான் செய்தால், அவன் எப்படி இயல்பான தொழுகையாளியாக மாறுவான்?

தொழுகைக்குரிய ஆடையில் சொல்லப்பட வேண்டிய பல பகுதிகள் இருக்கின்றன. அடுத்தவர்களது கவனத்தை ஈர்க்கின்ற விதமாக அணிகின்ற ஆடைகள், ருகூவிலும் ஸுஜூதிலும் அவ்ரத்தை வெளிப்படுத்துகின்ற ஆடைகள் என தவிர்க்க வேண்டிய சில ஆடை அமைப்புக்கள் இருக்கின்றன. இவற்றைத் தவிர இந்த விதமாகத்தான் தொழுகைக்குரிய ஆடை இருக்க வேண்டும் என்று இஸ்லாம் வகுக்கவில்லை. இதற்கு மாற்றமாக தொழுகாடைக் கலாச்சாரத்துக்கு மக்களை திருப்பி அழைப்பது, மக்களை குறிப்பாக இளைஞர்களை பள்ளிவாசலை விட்டும் தூரமாக்கும் செயலாகவே அமையும்.

இப்படி உடுத்தால் தான் ஒருவனை தக்வாதாரியாகக் கருத முடியும் என்றொரு எடுகோள் சமூகத்திலே நிலைபெற்றுள்ளது. அதனையே முழுமொத்த சமூகத்துக்குமான சீருடையாகவும் பலரால் போதிக்கப்பட்டும் வருகிறது. டீஷேர்ட்டும், பொட்டமும் அணிந்து பள்ளிவாசலுக்கு வருபவனை இளக்காரமாகக் கருதி அவனுக்கும் வேஷமிட்டுப் பார்க்க நினைக்கிறது. டீஷேர்ட்டுக்குள்ளால் தக்வா இல்லை என்று சொல்வதற்கு இல்லை. அரை நிஜாருக்குள்ளால் தான் தக்வா இருக்கிறது என்று சொல்வதற்கும் இல்லை.

இதனால் ஆடையின் நீளம் தான் தக்வாவின் அளவைத் தீர்மானிக்கிறது என்ற வெற்று வாதங்கள் சமூகத்தில் மேலோங்காமல் கவனித்துக் கொள்ள வேண்டும். மக்களுக்கு மார்க்கத்தை இலகுபடுத்துவதல்லாமல் மார்க்கத்தின் பெயரால் இல்லாத வரையறைகளை வகுத்து மக்களைக் கட்டிப் போடாமல் காக்க வேண்டும்.

அதேபோல தொழுகைக்காக வருபவர்களும் குறிப்பாக ஜமாஅத் தொழுகைக்கு வருபவர்கள் தாம் ஒரு முக்கியமான சபைக்கு வருகிறோம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இலகுபடுத்தலுக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு மேலாக தம்மை தொழுகைக்காக அலங்கரிப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். ஜும்ஆத் தொழுகைக்காக தங்களை அலங்கரிப்பது எப்படி என்று மார்க்கம் சொல்லித் தந்திருக்கிறது. ஜும்ஆவுடைய நேரத்துக்காக ஒரு நாள் முன்னரே தயாராக வேண்டிய நிலையில் ஜும்ஆவுக்கான ஆடை அன்றாட அலுவல்களின் போது அணிகின்ற ஆடையாக இருக்க முடியாது.

கலாச்சாரங்கள் மக்களது மனமாற்றத்தின் அடியாகவே பிறக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கின் ஷீஆ தலைவர் அமீரகத்திற்கு விஜயம்



ஈராக்கின் பிரபல ஷீஆ தலைவர் முக்ததா சத்ர் அமீரகத்திற்கு கடந்த வாரம் விஜயம் செய்தார். மத்திய கிழக்கிலுள்ள சுன்னி அரசாங்கங்களோடு உறவுகளைப் பலப்படுத்துவதே தனது நோக்கம் என சத்ர் தெரிவித்துள்ளார். ஜூலை கடைசிப் பகுதியில் சவூதி அறேபியாவில் இளவரசர் முஹம்மத் பின் ஸல்மானை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமீரகம் ஈராக்கிலிருந்து சத்ரை அழைத்து வருவதற்கு விமானமொன்றை அனுப்பி வைத்திருந்தது. ஈரான் ஆதரவு அரசாங்கங்களுக்கு எதிராகச் செயல்படும் சத்ர், ஈராக்கின் முன்னாள் பிரதமர் மாலிகி தற்போதைய சிரிய ஜனாதிபதி அஸத் ஆகியோரின் பரம எதிரியாகக் கருதப்படுகின்றவர். இவரோடு சவூதி இளவரசரும் அமீரகத் தலைவர்களும் நடத்திய இரகசிய பேச்சுவார்த்தைகளின் விபரம் இதுவரை ஊடகங்களில் கசியவில்லை.

ஷீஆயிஸத்தை கடுமையாக விமர்சித்து வரும் சவூதி அறிஞர்கள், சவூதி அரசாங்கம் மற்றும் அமீரகம் என்பன ஷீஆ மதகுருவான சத்ரை வரவழைத்துப் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து எவ்விதக் கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை. இது பிராந்தியத்தில் பாரிய சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றது என அறபு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## சர்வதேசப் பார்வை

# ரபா சதுக்கப் படுகொலையின் நான்காண்டு நிறைவு



அஸ்மா பல்தாஜி

2013 ஒகஸ்ட் 14 இல் எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலுள்ள ரபா சதுக்கத்தில் ஒன்றுகூடியிருந்த மக்கள் மீது இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 1000 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதோடு, பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். இப்படுகொலையின் 4 ஆண்டு நிறைவை எகிப்தியர்கள் ஒகஸ்ட் 14 இல் நினைவு கூர்ந்தனர்.

2013 ஜூலை 03 இல் எகிப்தின் சட்டபூர்வ ஜனாதிபதி முர்ஸியை இராணுவப் புரட்சி மூலம் பதவி கவிழ்த்ததை அடுத்து இலட்சக்கணக்கான மக்கள் ரபா அல் அதவிய்யா சதுக்கத்திலும் அந் நஹ்ழா சதுக்கத்திலும் ஒன்றுகூடி முர்ஸியை மீண்டும் பதவிக்குக் கொண்டு வருமாறு அமைதிக் கோரிக்கை விடுத்தனர்.

47 நாட்களாகத் தொடர்ந்த பொது மக்களின் அமைதி ஒன்றுகூடல் மீது எகிப்திய இராணுவம் ஒகஸ்ட் 14 இல் அதிகாலை 6.00 மணிக்கு காட்டுமிராண்டித் தனமாக துப்பாக்கி ரவைகளைத் தீர்த்தது. அதில் பெண்கள், ஆண்கள், மாணவர்கள், வயோதிபர்கள் என 1000 பேர் கொல்லப்பட்டதோடு, 800 பேரை இராணுவம் கைதுசெய்தது.

சகோதரத்துவ இயக்கத்தின் முக்கிய அங்கத்தவர்கள் பலர் குறிவைத்துக்





கொல்லப்பட்டனர். அவர்களுள் அவ்வியக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான பல்தாஜியின் மகள் அஸ்மா பல்தாஜியை எகிப்திய இராணுவம் திட்டமிட்டு சுட்டுக் கொன்றது. 17 வயதான அஸ்மான ரபா அல் அதவிய்யாவில் அமைதிப் பேரணியில் கலந்து கொண்டவர்.

கொல்லப்பட்டோர் தொகை 1000 என இராணுவம் அறிவித்தபோதும், சகோதரத்துவ இயக்கத்தின் கணிப்பீட்டின்படி 2600 பேர் கொல்லப்பட்டனர். அதில் திட்டமிட்டு இனங்காணப்பட்டு ஸ்னைபரினால் கொல்லப்பட்ட அஸ்மா பல்தாஜியின் நினைவுகளை அவரது தாய் சமீபத்திலே இரைமீட்டினார்.

அனாதுலு செய்திச் சேவைக்கு அவர் வழங்கிய பேட்டியில், எகிப்திய இராணுவம் எனது கணவன் மீது கொண்டிருந்த கோபத்தை மகள் மீது காட்டினர். மிகக் குரூரமாக எனது மகள் கொல்லப்பட்டார். அஸ்மா எகிப்தின் வெற்றிக்காகவும் கண்ணியத்திற்காகவும் வளமான எதிர்காலத்திற்காகவும் தனது வாழ்வைத் தியாகம் செய்தார் என்று கண்ணீர் மல்கக் கூறினார் அவரது தாய்.

மகளைக் கொன்ற காட்டுமிராண்டி இராணுவம், பல்தாஜியைக் கைதுசெய்து, அவர் நான்காண்டுகளாக சிறைவாசம் அனுபவிக்கின்றார். அவரது மகன்மார்களான அனஸ், காலித் ஆகியோர் இராணுவக் கும்பலால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 13 வயது நிரம்பிய ஹுஸாமையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. எனது குடும்பத்தில் அனைவரையம் இழந்த நான், நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டேன் என்று அஸ்மா பல்தாஜியின் தாய் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரபா அல் அதவிய்யாவில் வைத்தியராகப் பணியாற்றிய dr. ஹனான் அல் அமீன் அங்கு நடந்த காட்சிகளை வர்ணிக்கும்போது, அங்கு ஒன்று கூடியிருந்த பொதுமக்களை இறந்த நிலையிலும் உயிருடனும் இராணுவம் எரித்தது. இதைச் செய்த இராணுவம், மனிதர்கள்தானா என்று என்னால் நம்ப முடியாதுள்ளது.

ஒகஸ்ட் 14 இல் அந்த துப்பாக்கிச் சூடுகளிலிருந்து நான் உயிர் தப்பினேன். அது ஆச்சரியமான ஓர் அனுபவமே. ஏனெனில், எனக்கு முன்னாலும் பின்னாலும் இருந்த பலர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி துடிதுடித்து மரணிக்கும் காட்சியை என் கண்களால் கண்டேன் என்று தனது அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார்.

# ஷபாபின் பிரதித் தலைவர் இராணுவத்திடம் சரண்



அபூ மன்ஸூர் என அறியப்படும் ஷபாப் இயக்கத்தின் முன்னாள் பிரதித் தலைவரும் பேச்சாளருமான ஷெய்க் முக்தார் சோமாலிய இராணுவத்திடம் சரணடைந்துள்ளார். இச்செய்தியை சோமாலிய இராணுவ வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன. அனாதுலு செய்திச் சேவைக்கு பாக்கொல் பிராந்திய கவர்னர் தொலைபேசி மூலம் தெரிவித்த செய்தியிலும் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது அவர் தலைநகர் மொகாதிஷுவுக்குக் கொண்டு வரப்பட்டு விசாரிக்கப் படுகின்றார்.

அஷ்ஷபாப் இராணுவ இயக்கம் சோமாலியாவின் அரச படைகளோடு கடந்த பல ஆண்டுகளாக போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்து. அபூ மன்ஸூர் பிரதமரையும் ஜனாதிபதி அப்துல்லாஹ்வையும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவிக்கின்றது. 2013 இல் மன்ஸூர் ஷபாபிலிருந்து வெளியேறினார். தற்போது இராணுவத்திடம் சரணடைந்துள்ளார்.

# ஈரானுடனான உறவைச் சீர்செய்ய ஈராக்கின் உதவியை நாடும் சவூதி அறேபியா



தெஹ்ரானுடனான உறவைச் சீர்செய்ய ரியாத் ஈராக்கியப் பிரதமரின் உதவியை நாடியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஈராக்கின் உள்விவகார அமைச்சர் காஸிம் அல் அராஜி ஈராக்கின் செட்டர்லைட் தொலைக்காட்சி சேவையான கதீரை மேற்கோள் காட்டி, சவூதி இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான், ஈரான்-சவூதி அறேபியாவுக்கிடையில் மத்தியஸ்தம் வகிக்குமாறு ஈராக்கிய பிரதமர் அபாதியை கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாம் சவூதி அறேபியாவுக்கு விஜயம் மேற்கொண்டபோது எம்மிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது என்று அராஜி மேலும் தெரிவித்தார். ஈராக் தாஇஸ்களை வெற்றி கொண்டதன் பின்னர் சவூதி அறேபியா ஈராக்குடனான உறவுகளை வலுப்படுத்தத் தொடங்கியுள்ளது.

அராஜி தெஹ்ரானுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது தனது சவூதி அறேபிய விஜயம் குறித்து கலந்துரையாடியதாக அறபு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இஸ்னா எனப்படும் ஈரானிய செய்திச் சேவை நிறுவனம் ஈரானுடனான பதட்டத்தைத் தவிர்ப்பதற்கு முஹம்மத் பின் ஸல்மான் விரும்புவதாகத் தெரிவித்துள்ளது.

# ஜெருசலத்திற்குச் சொந்தமான ஆதன உறுதிப் பத்திரங்களை இஸ்ரேல் திருடுகின்றது

கடந்த மாதம் மஸ்ஜிதுல் அக்ஸாவை இஸ்ரேல் மூடியிருந்தபோது அதன் ஆக்கிரமிப்பு இராணுவம் அக்ஸா பள்ளிவாயலில் இருந்த முக்கிய ஆவணங்களை கையகப்படுத்தியுள்ளதாக பலஸ்தீன் இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. மஸ்ஜிதுல் அக்ஸாவுக்குச் சொந்தமான சொத்துக்களின் உறுதிப் பத்திரங்களும் வக்ப் சொத்துக்கள் பற்றிய ஆவணங்களுமே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

ஜெரூசலம் சர்வதேச நிறுவனத் தலைவர் ஹஸன் காதிர் இது குறித்துத் தெரிவிக்கையில், மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாயல் அறைகள், நூலகங்கள், ஆவணக் காப்பகங்களிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் ஆவணங்களைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவித்தார்.

ஜெரூசலம் பழைய நகரம் மஸ்ஜிதுல் அக்ஸாவிற்குச் சொந்தமான பொதுச் சொத்து என்பதை நிரூபிக்கும் ஆவணங்களையும் இஸ்ரேல் இராணுவம் எடுத்துச் சென்றுள்ளது. இதனை அழித்து விட்டு ஜெரூசலம் பழைய நகரம் தொடர்பான போலி ஆவணங்களை இஸ்ரேல் தயாரிக்க முடியும் என்றும் காதிர் அச்சம் வெளியிட்டுள்ளார். ஜெரூசலம் பழைய நகரத்தை யூதமயமாக்கும் திட்டத்தில் இஸ்ரேல் தீவிரமாக இறங்கியுள்ளது.

# இஸ்ரேல் புதிய குடியேற்றத் திட்டங்களை நிறுத்தும் வரை பேச்சுவார்த்தைகள் இல்லை



இஸ்ரேல் சட்டவிரோத புதிய குடியேற்றத் திட்டங்களை நிறுத்தும் வரை அதனுடன் எந்த வகையான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடப் போவதில்லை என பலஸ்தீன அதிகார சபை தெரிவித்துள்ளது. அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில், அதன் நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் ஹனா அமீரா சுதந்திர பலஸ்தீன் அரசாங்கத்தை நிறுவுவதற்கு இஸ்ரேல் ஆதரவளிக்க வேண்டும். அவ்வாறாயின், குடியேற்றத் திட்டங்களை உடன் நிறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பலஸ்தீன் அதிகார சபையின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் கடந்த வாரம்நடைபெற்ற போதே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இஸ்ரேலின் சட்டவிரோத குடி[illegible] குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் PLO வின் அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேள்விக்குறியாகும் லிபியாவின் அரசியல் எதிர்காலம்

• றவூப் ஸெய்ன்

கேர்ணல் முஹம்மர் கடாபியின் வீழ்ச்சிக்குப் பின்னர் லிபியாவில் என்ன நடக்கும் என்ற கேள்வி பலராலும் பல்வேறு கோணங்களில் எழுப்பப்பட்டது. உலகப் புகழ்பெற்ற மானிடவியல் ஆய்வாளர் மஹ்மூத் மும்தானி ஆபிரிக்காவில் கடாபியின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஏற்படக் கூடிய பல்வேறு தீமைகள் குறித்து எச்சரித்திருந்தார். அவற்றுள் மிகவும் ஆபத்தானது லிபியாவின் கோத்திர மோதலாகும்.

வெறும் 6 மில்லியன் மக்களைக் கொண்ட லிபியா உலக எண்ணெய் வளத்தில் முதன்மையான நாடாகும். பெற்றோலிய வளம் மிகச் சரியாக முகாமை செய்யப்பட்டிருந்தால் லிபியாவில் அறபு வசந்தம் தோன்றியிருக்காது என சில அரசியல் ஆய்வாளர்கள் கூறுவர்.

2011 இல் ஏற்பட்ட அறபு வசந்தம் ஏனைய அறபு நாடுகளை விட லிபியாவில் ஏற்படுத்திய தாக்கம் வித்தியாசமானது. இறுதியில் நேட்டோ உள்ளிட்ட மேற்கு நாடுகளின் இராணுவம் கடாபியை வீழ்த்துவதில் களமிறங்கிய போதே லிபியாவின் எதிர்காலம் குறித்த சந்தேகங்கள் எழுந்தன. இன்று அந்த சந்தேகங்களெல்லாம் உண்மைப்படுவது போன்ற நிகழ்வுகள் லிபியாவில் நடந்து கொண்டிருக்கின்றன.

கடாபியின் வீழ்ச்சிக்குப் பின்னர் லிபியாவில் இரு எதிர் எதிர் அரசாங்கங்கள் உருவாகின. இப்போது மூன்றாவது அரசொன்றை ஸ்தாபிப்பதற்கான இராணுவப் போர் நிகழ்கின்றது. லிபியாவின் சமூகக் கட்டமைப்பில் இன்று வரை செல்வாக்குச் செலுத்தி வரும் கோத்திர அமைப்பை அதிகார மோகம் கொண்ட சிலர் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர். அவர்களுள் ஒருவரே கலீபா ஹப்தர்.

பெங்காஷியிலிருந்து சில கி.மீற்றருக்கு அப்பாலுள்ள தெர்னா நகரத்தை ஹப்தரின் தேசிய இராணுவம் முற்று கையிட்டுள்ளது. அதனால் மிகப் பெரும் மனிதாபிமான நெருக்கடிகளை தெர்னா சந்தித்து வருவதாக எச்சரிக்கப்படுகின்றது.

தெர்னாநகரம் எதிர்நோக்கியிருக்கின்ற மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து லிபிய தேசிய நல்லிணக்க அரசாங்கத்தின் தலைமைத்துவ சபை கண்டனம் வெளியிட்டுள்ளது. ஹப்தர் படையின் ஆக்கிரமிப்பினால் தெர்னாவில் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், உணவு விநியோகம் என்பவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தெர்னா நகர மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர். இந்த முற்றுகை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என இந்த அரசாங்கம் வேண்டியுள்ளது.

திரிப்போலியைத் தளமாகக் கொண்ட இந்த அரசாங்கத்தையே ஐ.நா. அங்கீகரிக்கின்றது. இதேவேளை, உள்ளூரில் இடம்பெற்ற தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் தப்ரூக்கை தளமாகக் கொண்டு செயல்படு கின்றது. மக்களின் வாக்குகள் மூலம் சுதந்திரமான தேர்தலொன்றினூடாக தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் தாமே எனவும், தமக்கு எதிராக சர்வதேச சக்திகளால் உருவாக்கப்பட்டுள்ள திரிப்போலியைத் தளமாகக் கொண்ட தேசிய நல்லிணக்க அரசாங்கத்தை தாம் ஏற்க முடியாது என்றும் தப்ரூக் அரசாங்கம் கூறி வருகின்றது. இரு அரசாங்கங்களுக்கும் இடையிலான சொற் போர் சிலபோது ஆயுத வன்முறையாகவும் மாறுகின்றது.







இந்நிலையில் கோத்திர உணர்வைத் தூண்டி, அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் மூன்றாவது அணியொன்று முன்னாள் இராணுவத் தளபதி கலீபா ஹப்தர் தலைமையில் பெங்காஷியை அடுத்துள்ள பகுதிகளைக் கைப்பற்றுவதற்குப் போராடி வருகின்றது.

பெங்காஷியைத் தளமாகக் கொண்ட ஓர் அரசாங்கத்தை நிறுவுவதே ஹப்தரின் நோக்கம். அவர் பெங்காஷியில் லிபிய தேசிய இராணுவம் எனும் படையை வழிநடத்துகின்றார். அவரது படைக்கெதிராகப் போராடும் ஆயுதக் குழுக்கள் ஏற்கனவே பெங்காஷியில் நிலைகொண்டுள்ளன. கிழக்கு லிபியாவின் மிகப் பெரும் நகரம் எனக் கருதப்படும் பெங்காஷியையும் புறநகர்ப் பகுதியையும் கட்டுப்படுத்துவதற்கு ஹப்தர் கடந்த சில மாதங்களாகப் போராடி வருகின்றார். தற்போது தெர்னா நகரத்தை அவரது படை சுற்றிவளைத்துள்ளது.

2011 இல் லிபியத் தலைவர் முஹம்மர் கடாபியை வீழ்த்துவதற்கு களமிறங்கிய ஆயுதக் குழுக்களின் பல்முனைத் தாக்குதல்களுக்கு ஹப்தரின் படை முகம் கொடுத்துள்ளது. ஹப்தர் கடாபியின் கோத்திரத்தைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகின்றது.

எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெறும் வடஆபிரிக்கா நாடான லிபியாவில், அரசியல் ஸ்திரப்பாட்டை ஏற்படுத்துவதற்கு திரிப்போலியைத் தளமாகக் கொண்ட ஐ.நா. ஆதரவு அரசாங்கம் முயற்சிப்பதாகக் கூறுகின்றது. ஆனால், அதனால் உறுதியாக நின்றுபிடிக்க முடியவில்லை.

இந்த அரசாங்கத்தை நிராகரிக்கும் ஹப்தர், கிழக்கு லிபியாவில் வேகமாக முன்னேறி வருகின்றார். கடந்த மாதம் பெங்காஷி நகரை முழுமையாக மீட்டெடுத்ததாக தொலைக்காட்சி உரையில் ஹப்தர் பிரகடனம் செய்திருந்தார். அவரது லிபியத் தேசிய இராணுவம் முழு கிழக்கு லிபியாவையும் கைப்பற்றி விடும் என்று சூளுரைக்கின்றார்.

ஆயினும், இஸ்லாமியவாதிகள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களின் கூட்டமைப்பான மஜ்லிஸ் ஷூறா துவாத் எனும் அமைப்பிலிருந்து ஹப்தரின் படை கடும் எதிர்ப்பை சம்பாதித்து வருகின்றது. கிழக்கு பெங்காஷியைக் கைப்பற்றும் யுத்தத்தில் எகிப்தும் அறபு அமீரகமும் கலீபா ஹப்தருக்கு இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றது.

தற்போது முற்றுகையிடப்பட்டுள்ள தெர்னா நகரம் இன்னும் இஸ்லாமியவாதிகளின் கூட்டமைப்பான தெர்னா முஜாஹிதீன் ஸூறா கவுன்ஸில் அமைப்பின் கீழேயே உள்ளது. தெர்னா கிழக்கு பெங்காஷியிலிருந்து 380 கி.மீ. தொலைவில் உள்ளது.

கேர்ணல் கடாபியின் 4 தசாப்த ஆட்சியின் பின்னர் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற மோகம் கொண்டிருந்த ஹப்தர் கிழக்கு லிபியாவைக் கைப்பற்றும் ஆயுதப் போரில் இறங்குவதற்கு அமெரிக்காவோ தூண்டுதல் அளித்ததாக குற்றம் சாட்டப்படுகின்றது.

ஹப்தருக்கும் அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் ஹப்தரின் படையைப் பலப்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. ஹப்தரின் படையணிக்கு ஜெட் விமானங்கள், கிடைக்கப் பெற்றமை அமெரிக்காவின் ஆதரவுடன்தான் என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது.

தற்பொதைய பெங்காஷியின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கிழக்கு பெங்காஷி இஸ்லாமியவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கக் கூடாது என்று கருதும் எகிப்திய ஜனாதிபதி ஸீஸி மற்றும் ஐக்கிய அறபு அமீரகத்தின் மன்னர் ஆகியோர் ஹப்தருக்கு ஆதரவளித்து வருகின்றனர். தெர்னா ஏற்கனவே எகிப்திய விமானப் படைத் தாக்குதலுக்கு இலக்கானது.

ஸீஸி, பெங்காஷியில் நிலைகொண்டுள்ள தாஇஷ் பயங்கரவாதிகளுக்கு எதிராகவே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறிய போதும், இஸ்லாமியப் படையை இலக்கு வைத்தே அந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சமீபகாலங்களில் ஐக்கிய அறபு அமீரகத்தோடும் ஹப்தர் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

லிபியாவின் மோதலுக்கு தீர்வு காணும் முயற்சியில் ஹப்தரின் தேசிய இராணுவம் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று ஹப்தர் கூறி வருகின்றார். அவரது நோக்கம் எகிப்து, அமீரகம் போன்று மதச்சார்பற்ற அரசாங் கமொன்று லிபியாவில் உருவாக்கப்பட வேண்டும் என்பது. அதற்காக அவரது லிபிய தேசிய இராணுவம் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

தற்போது தெர்னா நகருக்குள் யாரும் நுழையவோ அங்கிருந்து யாரும் வெளியேறவோ முடியாத நிலை தோன்றியுள்ளது. பல்லாயிரம் மக்கள் பசியினால் வாடி வருகின்றனர். மருந்துப் பொருட்கள் தீர்ந்து விட்டன. உணவுப் பொருட்களும் முடிந்து விட்டன. ஐ.நா. அகதிகள் நிறுவனம் தமக்கு எதுவும் செய்ய முடியாது என்று கையை விரித்து விட்டது. இத்தனைக்கும் மத்தியில் ஹப்தரின் தேசிய இராணுவம் தாக்குதல்களை தொடர்ந்தபடியே உள்ளது.

நகரின் உள்ளகப் போக்குவரத்து முற்றாக முடங்கி விட்டது. எரிபொருள் விநியோகம் துண்டிக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும். பொது மக்களின் அவசரத் தேவைகளை நிறைவு செய்ய அனைத்துத் தரப்பினரும் வழிவிட வேண்டும் என திரிப்போலியைத் தளமாகக் கொண்ட தேசிய நல்லிணக்க அரசாங்கம் வேண்டு கோள் விடுத்துள்ளது. அதற்குப் பதிலளிக்கும் வகையிலான எந்த முன்னெற்றங்களும் தென்படவில்லை.

லிபியாவின் சிவில் யுத்தத்தினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வாழும் மக்களிடையே பயங்கரமான உள நெருக்கீடுகள் தோன்றியுள்ளதாக எச்சரிக்கப்படுகின்றது. இதேவேளை, லிபியாவின் காலனி நாடான இத்தாலியை நோக்கி இடம் பெயரும் லிபியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பல்லாயிரம் மக்கள் பாதுகாப்பற்ற படகுகள் மூலம் கடல் வழியாக ஐரோப்பா செல்ல எத்தனிப்பதும் இடைநடுவே படகுகள் கவிழ்ந்து பலர் உயிரிழப்பதும் அன்றாட வாடிக்கையாகி விட்டது.

பல்வேறு கோத்திரங்கள் குலக் குழுக்களைக் கொண்ட லிபியாவில் 40 ஆண்டுகள் ஆட்சி செய்த கேர்ணல் கடாபி, அனைத்து முரண்பாடு களையும் முடக்கி, இராணுவ சர்வதிகாரத்தின் மூலம் அரசியல் ஸ்திரப்பாட்டை தக்க வைத்து வந்தார். அறபு வசந்தத்திற்குப் பின்னர் ஒரு ஜனநாயக அரசியல் மாற்றம் அங்கு ஏற்படும் என்ற மக்களின் எதிர்பார்ப்பில் அமெரிக்காவும் பிற ஏகாதிபத்திய சக்திகளும் மண்ணை வாரி விட்டன. அதன் மோசமான விளைவுகளை இன்று லிபியர்கள் அனுபவிக்கின்றார்கள்.

சமூக நல்லிணக்கம், அரசியல் ஸ்திரப்பாடு, தேசிய ஒற்றுமை என்பவற்றைக் கடந்து, அதிகார மோகம் அங்கு தலைவிரித்து தாண்டவமாடுகின்றது. இது தான் இன்றைய லிபியாவின் ஆணிவேர் பிரச்சினையாகும்.

---



# 2019 இற்கு முன்னர் கட்சிக்குள் பாரிய மாற்றம்

2019 தேர்தலுக்கு முன்னர் நீதிக்கும் அபிவிருத் திக்குமான கட்சிக்குள் பல்வேறு மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் கொண்டு வரப்போவதாக துருக்கி ஜனாதிபதி ரஜப் தையிப் அர்தூகான் தெரிவித்துள்ளார். 10.08.2017 அன்று கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அர்தூகான் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கட்சி ஆரம்பிக்கப்பட்டு கடந்த 16 ஆண்டுகளாக நாம் தொடர்ச்சியான போராட்டத்தில் உள்ளோம். கடந்த 15 ஆண்டுகளாக நாம் இந்த நாட்டை ஆட்சி செய்துள்ளோம் எனவும் அர்தூகான் அங்கு தெரிவித்தார். சென்ற மாதம் கருங் கடலில் அமைந்துள்ள கிரஸூல் மாகாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலும் அர்தூகான் இக்கருத்தினை வெளியிட்டுள்ளார்.

நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் சிறப்பம்சம் அது தன்னை மீளமைத்துக் கொள்கின்ற ஆற்றல் கொண்டிருப்பதுதான் என அர்தூகான் அங்கு மேலும் குறிப்பிட்டார். 2019 தேர்தல்கள் துருக்கியைப் பொறுத்தமட்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும் தெரிவித்த அர்தூகான், நாம் ஒரு போராட்டமயமான வரலாற்றுக் காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி சிலரோடு முடிந்து விடுவதை நாம் விரும்பவில்லை. இந்நிறுவனத்தை நாம் ஆரம்பித்த காலம் தொட்டு மிக சீரியஸான மாற்றங்களையும் புனர்நிர்மாணங் களையும் ஏற்படுத்தி வந்துள்ளோம். கட்சிக்குள் குறிப்பிட்ட சில குழுக்கள் ஊடுருவ முயல்கின் றன. அவற்றை நாம் விரும்பவில்லை என்றும் அர்தூகான் குறிப்பிட்டார்.

2017 மே 21 இல் இடம்பெற்ற கட்சியின் சிறப்புக் கூட்டத்தில் அர்தூகான் மீண்டும் அதன் தலைமைத்து வத்தை ஏற்றார். அதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக கட்சித் தலைமைத்துவத்திலிருந்து அவர் விலகியிருந்தார். கட்சியின் யாப்பு மாற்றத்தைத் தொடர்ந்து இந்தத் தடை நீக்கப்பட்டது.

2001 இல் கட்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 13 ஆண்டுகளாக அர்தூகானே அதற்குத் தலைமை வகித்து வருகின்றார். 2003 தொடக்கம் 2014 வரையான காலத்தில் நடைபெற்ற இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களிலும் அர்தூகானின் AKP கட்சியே வெற்றியீட்டியது.

இவ்வருடம் இடம்பெற்ற அரசியலமைப்பு மாற்றம் குறித்த அபிப்பிராய வாக்கெடுப்பில் அர்தூகானின் AKP வெற்றியீட்டியது. அது பாராளுமன்ற ஆட்சி முறையிலிருந்து ஜனாதிபதி ஆட்சி முறைக்கு துருக்கியை இட்டுச் செல்லப் போகின்றது.

2019 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்த லில் அர்தூகான் களமிறங்கவுள்ளார். அதன் மூலம் துருக்கியின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்கப் போகின்றார். இரண்டாவது முறையும் அவர் தேர்தலில் குதித்தால் 2029 வரை அர்தூகான் ஜனாதிபதியாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அர்தூகான் முதல் நிறைவேற்று ஜனாதிபதியாக 2019 தேர்தலில் வெற்றி பெறுவாராயின் பெரும்பாலும் அவரது கட்சியும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளது. இதனால் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் ஆட்சி 2029 வரை நீடிக்கலாம்.

இதேவேளை, இவ்வாண்டில் துருக்கியில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு மாற்றம் குறித்த சர்வஜன வாக்கெடுப்பு மிகுந்த சர்ச்சையையும் உருவாக்கியிருந்தது.

பாராளுமன்ற அரசியல் முறையிலிருந்து தனிநபரிடம் அதிகாரத்தைக் குவிக்கின்ற நிறைவேற்று அதிகார முறைமை மீதான வாக்கெடுப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெறவில்லை. மிகக் குறைந்தளவிலான வாக்குகள் மூலமே அர்தூகானின் கட்சி வெற்றி பெற்றது. அதேவேளை, அர்தூகான் தன்னள வில் ஓர் மிதவாத, இஸ்லாம் ஆதரவு தலைவர் என்பதனால் அவரது ஆட்சிக் காலம் துருக்கிய மக்களுக்கு மிகுந்த நன்மைகளைக் கொண்டு வரும் என வாக்களித்த மக்கள் நம்புகின்றனர். இரண்டாம் வரிசைத் தலைமை அவருக்குப் பின்னர் நிறைவேற்று அதிகார முறையை எப்படிக் கையாளும் என்பது ஒரு சிக்கலான கேள்வியே.

முன்னாள் பிரதமர் தாவூத் ஒக்லுவுக்கும் அர்தூகானுக்கும் இடையில் ஏற்பட்ட அதிகாரத்தைப் பிரயோகித்தல் தொடர்பான கருத்து வேறுபாட்டின் உடனடி விளைவே நடந்து முடிந்த சர்வஜன வாக்கெடுப்பு என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரியாழ் ஹஸரத்தின் ஞாபகார்த்தமாக பெண்களுக்கான தொழுகை அறை

• ஹெட்டி ரம்ஸி

இலங்கையின் மிகப்பெரும் நகரமாகவும், வர்த்தகத் தலைநகரமாகவும் விளங்கும் கொழும்பில் பல்லின மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். 2012 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி கொழும்பு மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 2,309,809 (11.40%) ஆகும். இதில் 271,719 (11.76%) பேர் முஸ்லிம்களாவர்.

அன்றாடம் கொழும்புக்கு வரும் ஆண்கள் ஏதாவது பள்ளிவாசலுக்குள் நுழைந்து தொழுகையை நிறைவேற்றிய போதிலும் பெண்களுக்கு அவ்வாறு தொழுகையை நிறைவேற்ற முடியாது.


மக்களின் வேண்டுகோளாகவும் நீண்ட காலத் தேவையாகவும் காணப்பட்ட கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கான பெண்கள் தொழுகை அறையின் நிர்மாணப் பணிகள் தற்பொழுது முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, நேற்று (17 ஆம் திகதி) மர்ஹூம் ரியாழ் ஹஸரத்தின் பெயரில் அர்ப்பணிக்கப்பட்டது.

### பெண்களுக்கான தொழுகை அறை

கொழும்பு பெரியபள்ளிவாசலில் பெண்களுக்கான தொழுகை அறையின் கட்டுமானப் பணிகள் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை காலமும் பெண்கள் பள்ளிவாசலுக்கு வந்து திரை போடப்பட்ட நிலையிலேயே தொழுது வந்தார்கள். திரை விலகும்போது கூட பெண்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வந்தார்கள்.

தற்பொழுது 15 x 15 இட அளவிலான அறை தொழுமிடமாக அமைக்கப்பட்டுள்ளது. தூரப் பிரதேசங்களிலிருந்து வருகின்றவர்களுக்கு தாராளமாக தொழுவதற்கும் ஓய்வெடுப்பதற்குமான வகையில் இவ்வறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உணவுகளை உட்கொள்வதாக இருந்தாலும் அங்கு மேசை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வுழுச் செய்வதற்குரிய தனியான குழாய் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கருகில் 6 கழிவறைகள் கட்டப்பட்டுள்ளது. ஆடைகளை மாற்றுவதற்குரிய அறையும் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொழுகையறையில் வெளிநாடுகளில் உள்ளதை போன்று பெண்கள் உடலின் மேல் அணிந்து கொண்டு தொழுவதற்குரிய பிரத்தியேக ஆடையும் வைக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் நிர்வாகத்தின் பணத்தைக் கொண்டே இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் எவ்வாறு பள்ளிவாசலை பயன்படுத்துகிறார்களோ அதேபோன்று பெண்களும் பள்ளிவாசலை பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே இக்கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 20 பேர் நின்று தொழக்கூடிய வகையில் 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கட்டிடம் பிறைக் குழுத் தலைவர் ரியாழ் ஹஸரத்தின் நினைவாக அமைக்கப்பட்டுள்ளமை விஷேடமானதாகும்.



### மர்ஹூம் ரியாழ் ஹஸரத் (பாரி)

மர்ஹூம் ரியாள் ஹஸரத் 1950ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்தின் உடுகொடையில் பிறந்தார். 1959இல் கஹடோவிட்ட அரசினர் ஆண்கள் பாடசாலையில் முதலாம் வகுப்பில் சேர்க்கப்பட்ட இவர், 1962 ஆம் ஆண்டு உடுகொடையில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும் அங்கு 3 ஆம் தரத்தில் சேர்க்கப்பட்டார். 1966 ஆம் ஆண்டில் 6 ஆம் தரத்துடன் பாடசாலைக் கல்வியை விட்டு மார்க்க கல்வி பெறும் நோக்கத்துடன் மர்ஹூம் ஆ.இ. அப்துஸ் ஸமது ஆலிம் அவர்களின் வழிகாட்டலுடன் பானந்துறை தீனியா அரபுக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார்.

இவரது தந்தை ஒரு வியாபாரி. எனினும் இவர் வியாபாரத்தில் ஈடுபாடு காட்டவில்லை. தீனியா அரபுக் கல்லூரியின் அதிபர் அப்துஸ் ஸமது ஆலிம் அங்கிருந்து விலகிச் சென்றதன் பின்னர் வெலிகம மத்ரஸதுல் பாரி அரபுக் கல்லூரியில் இணைந்து அல் ஆலிம் கற்கையை பூர்த்தி செய்து பட்டம் பெற்றார். அதன் பின் சிறிது காலம் கல்ஹின்ன அரபிக் கல்லூரியில் போதனாசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் அங்கிருந்து விலகிச் சென்று காலி கிந்தோட்டை பள்ளிவாசல் மத்ரஸாவில் சிறிது காலம் பணியாற்றியுள்ளார்.

மர்ஹூம் அல்ஹாஜ் மசூத் ஆலிம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1987 ஆம் ஆண்டு கால நடுப்பகுதியில் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இயங்கிக் கொண்டிருந்த மதீனதுல் இல்ம் அரபிக் கலாசாலையில் போதனாசிரியராக கடமையாற்றினார். இக்கலாசாலையில் அதிபராகக் கடமை புரிந்த அல்ஹாஜ் M.Z.M. ஹுஸைன் மௌலவி 1988 இல் அங்கிருந்து விலகிச் சென்ற பின்னர் மதீனதுல் இல்ம் அரபிக் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்று தான் மரணிக்கும் வரை அங்கு கடமையாற்றினார்.

மதீனதுல் இல்ம் அரபுக் கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியவர்களுள் இவரும் ஒருவர். உஸ்தாத் அப்துஸ் ஸமத் அவர்களால் வகுக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையிலேயே போதனைகளை ஆரம்பித்தார். தகுதி வாய்ந்த உலமாக்களை மத்ரஸாவின் விரிவுரையாளர்களாக இணைத்துக் கொண்டார்.

மார்க்கக் கல்விக்கு மேலதிகமாக மாணவர்கள் உலகக் கல்வியையும் பெற வேண்டும் என்ற நோக்கில் பாடசாலைக் கல்வியை போதிக்கும் பகுதி நேர வகுப்புக்களையும் ஆரம்பித்தார். இம்மத்ரஸாவில் கல்வியை முழுமையாகப் பூர்த்தி செய்து பட்டம் பெற்ற மாணவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள பள்ளிவாயல்களில் இமாம்களாகவும், மத்ரசாக்களில் விரிவுரையாளர்களாகவும் கடமையாற்றி வருகின்றார்கள்.

மர்ஹூம் ரியாழ் மௌலவி அவர்கள் தொழுகை நேரங்களை கணிக்கும் பிறை சம்பந்தப்பட்ட விடயத்தில் மர்ஹூம் அப்துஸ் ஸமது ஆலிம் அவர்களின் கொள்கையையே பின்பற்றினார்கள். ஒவ்வொரு மாதமும் அம்மாத்தின் 29



ஆம் நாள் 30 ஆம் இரவு பின்னேரம் பிறை பார்க்கும் பழக்கத்தை தம் வாழ் நாளில் கடைபிடித்து வந்தார்கள். நோன்பு, பெருநாள் ஆகிய தினங்களை தீர்மானிப்பதில் இவரின் கொள்கையை ஏற்றுக் கொண்ட உலமாக்கள் இவரை பிறைக் குழுவின் தலைவராக ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். சென்ற ரமழான் முடிவில் (2017) நோன்பு பெருநாள் தினத்தைத் தீர்மானிக்கும் மாநாட்டில் தனது சுகவீனத்தையும் பொருட்படுத்தாது அதில் கலந்துகொண்டு துஆப் பிரார்த்தனை செய்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் வாழ்ந்த காலத்தில் உடுகொடையில் மார்க்க சம்பந்தமான பல பிரச்சினைகள் எழுந்த போதிலும் அவற்றை தனது சாதுரியத்தினால் தீர்த்து வைப்பதற்காக மர்ஹூம் அப்துஸ்ஸமது ஆலிம் அவர்களின் போதனைகளை பின்பற்றினார். தன்னை தெரிந்தவர்களிடம் பகைமை பாராட்டாது அவர்களுடனும் பண்பான முறையில் பழகியமை இவர்களின் நற்குண, நல்லொழுக்கத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மார்க்க விடயத்தில் ஏதாவதொன்றை ஜமாத்தார்களுக்கு அறிவிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் தன்னை விட வயதில் முதிர்ந்தவர்களுடன் கலந்துரையாடியே அவற்றை அறிவிப்பார்கள். இவ்வாறான பல சிறந்த பண்புகளை கொண்ட மர்ஹூம் ரியாள் மௌலவி அவர்கள் தனது வாழ்நாளை கண்ணியமாக கழித்து தனது 67 ஆவது வயதில் வபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

### புதிய பிறைக்குழுத் தலைவராக அப்துல் ஹமீத் பஹ்ஜி

இலங்கை பிறைக் குழுத் தலைவராக செயற்பட்ட ரியாள் ஹஸரத் அவர்கள் கடந்த நோன்பின் போது சுகவீனமுற்றிருந்த நிலையில் இலங்கை பிறைக் குழுவின் இடைக்கால தலைவராக கலீபதுஷ் ஷாதுலி அப்துல் ஹமீத் பஹ்ஜி நியமிக்கப்பட்டிருந்தார். ரியாழ் ஹஸரத்தின் வபாத்தினை தொடர்ந்து தற்பொழுது அப்துல் ஹமீத் பஹ்ஜி உத்தியோகபூர்வத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பிறை பார்க்கும் மாநாடு பெரிய பள்ளிவாசலின் தலை மையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை, முஸ்லிம் சமயவிவகார திணைக்களத்தின் ஒத்துழைப்பில் முன்னெடுக்கப்படுகிறது.

பிறை பார்ப்பதற்கென முன்னர் அமைக்கப்பட்டிருந்த பழமை வாய்ந்த ஹமீதிய்யா மண்டபத்திற்குப் பகரமாக நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபமொன்றும் தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளது.

## வேட்பாளர்களில்... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்தச் சட்டமூலம் அடுத்த வாரமளவில் பாராளுமன்றத்துக் குச் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதுடன், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின் அது குறித்த ஆட்சேபனை களை முன்வைப்பதற்கு 14 நாட்கள் அவகாசம் வழங்கப்படும். அதன் பின்னர் அது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு சட்டமாக இயற்றப்படும்.

மாகாண சபைத் தேர்தல்களில் போலவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் இந்த விகிதாசாரம் பேணப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதன் மூலம் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், குறிப்பாக முஸ்லிம் கட்சிகள் முஸ்லிம் பெண்களையோ அல்லது வேறு பெண்களையோ நியமனப்பத்திரத்தில் உள்ளடக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

இதனூடாக முஸ்லிம் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கின்றபோதும், இதனை எதிர்கொள்வது தொடர்பில் முஸ்லிம் சமூகத்தில் பல்வேறு ஐயங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. அருகிலுள்ள முஸ்லிம் நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் ஏற்கனவே இந்த நடைமுறையைப் பின்பற்றி வருகின்றன என்ற நிலையில் இது தொடர்பான தெளிவையும் வழிகாட்டலையும் முஸ்லிம் சமூகம் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவிடம் இருந்து எதிர்பார்க்கிறது.

## ஹஜ்ஜாஜிகள்... (01 ஆம் பக்கத் தொடர்)

மக்கா ஹரம் ஷரீபின் விஸ்தரிப்பு வேலைகளுக்காக இந்தக் கட்டடம் உடைக்கப்பட்டதனால் அதற்குரிய பெருந்தொகையிலானதொரு நஷ்டஈடு சவூதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. நீண்ட காலத்துக்குப் பின்னர் அந்தத் தொகையை முதலிடவும் மீண்டும் சிலோன் ஹவுஸை மக்காவில் நிர்மாணிக்கவும் என கமிட்டி ஒன்றை நியமிப்பதற்கான முன்மொழிவொன்று முஸ்லிம் விவகார அமைச்சர் ஹலீமினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சிலோன் ஹவுஸ் இலங்கை முஸ்லிம்களுக்குப் பொதுவான சொத்தாகும். இந்தச் சொத்தைக் கையாள்வதற்கென நியமிக்கப்பட்ட நிர்வாகிகளான டாக்டர் கலீல், எம்.எஸ்.மரிக்கார் பாவா, டாக்டர் ஸுலைமான், பழீல் ஏ கபூர், எம்.எச்.எம். நைனா மரிக்கார் உட்பட சவூதிப் பிரஜையான உமர் வலி ஆகிய எவருமே இந்த நஷ்டஈடு வழங்கப்படும் சமயம் உயிருடன் இருக்கவில்லை. இந்த நிலையில் முஸ்லிம் சமூகத்துக்குச் சொந்தமான இந்த நஷ்டஈட்டுத் தொகையை தனிநபர்களின் கைகளில் செல்லவிடாது முஸ்லிம் சமய விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## பாலியல்... (01 ஆம் பக்கத் தொடர்)

செயலகத்துக்குப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகளை, இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் செயலகம், சம்பந்தப்பட்ட பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு அனுப்பியுள்ளது.

இரகசியம் பேணல், எழுதுதல், அறிக்கையிடுதல் தொடர்பான பத்திரிகை ஆசிரியர் ஒழுக்கக் கோவையையும் சட்ட ஏற்பாடுகளையும், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, பத்திரிகை ஆசிரியர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வாணைக்குழு, சுயகட்டுப்பாட்டு முறைபற்றியும் வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சட்ட ஏற்பாடுகளில்,

**சட்டக்கூறு 06.** பொதுவான செய்தியிடல், எழுதுதல் **உபவிதி 6.1:** கொடுஞ் செயல், வன்முறை, போதைப்பொருள் துஷ்பிரயோகம், கொடுமையில் இன்பம், ஆபாசம் பாலியல் முறைகேடு போன்ற உளரீதியாக வேதனை தரும் சமூகப் பிரச்சினைகளைக் கையாளும்போது, ஊடகங்கள் நடந்ததைக் கூறுதல், அபிப்பிராயங்கள் கூறுதல், புகைப்படம் மற்றும் விளக்க வரைவுகள் என்பவை தொடர்பில் விசேட கவனம்செலுத்த வேண்டும்.

**மேலும், உபவிதி 6.2:** குற்றச்செயல் பற்றிய செய்திகளை எழுதும்போது, ஊடகங்கள், பொதுமக்களின் நலன் சார்ந்ததாகவும் சட்டப்படி அனுமதிக்கப்பட்டதாகவும் இருந்தால் மட்டுமன்றி- பாலியல் குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவரின் பெயரைக் குறிப்பிடுதல் ஆகாது.

பொதுமக்களின் நலன்சார்ந்தது என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு, குறித்த பத்திரிகையுடையதாகும்.

**சட்டக்கூறு 07 இரகசியம் பேணல் உபவிதி 7.1:** ஒரு தனியாளின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கை, அவர்களது வீடு, ஆரோக்கிய நிலை, தொடர்பாடல்கள் என்பவற்றை மதித்து எழுதுவதில், பத்திரிகை மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். இவ்வாறான தனியார் இரகசியங்கள் தொடர்பில் உரிமை மீறல், இவற்றை மீறிய பொதுநலன் என்பதனால் மட்டுமே நியாயப்படுத்தப்படும்.

**உபவிதி 7.3:** மனத்துன்பம், அதிர்ச்சி சம்பந்தப்படும் நிகழ்வுகளில், விசாரணைகள் மற்றும் அணுகுதல்கள் தற்றுணிவின் அடிப்படையில் உணர்வுகளை நோகடிப்பதாக இல்லாதிருப்பது, உறுதி செய்யப்பட வேண்டும்.

மேலே கூறிய விடயங்களின் பின்னணியில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு செயலகம், பத்திரிகை ஆசிரியர்கள், தமது ஊடகவியலாளர்கள் பத்திரிகை ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவையை நிலை நிறுத்திச் செயற்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளது.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு என்பது, பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை புதினப் பத்திரிகை சமூகம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் என்பவற்றால், 14 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட சுதந்திரமான சுயகட்டுப்பாட்டுப் பொறிமுறையாகும்.

## மத்தள... (01 ஆம் பக்கத் தொடர்)

தொடர்ச்சியான நஷ்டத்தை ஈடுசெய்யும் நோக்கில் முதலீடுகளைப் பெறுவதற்காக 2016 டிசம்பரில் அமைச்சரவை வழங்கிய அங்கீகாரத்துக்கு இணங்க அக்கறையை வெளிப்படுத்துவதற்கான (EOI) அழைப்பு அமைச்சினால் விடுக்கப்பட்டது. இதன்போது 8 உள்நாட்டு முதலீட்டாளர்கள் முன்மொழிவுகளை வைத்த போதும் அவை தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக இருக்கவில்லை.

மத்தள விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான இந்திய முன்மொழிவில், இயக்கம், முகாமைத்துவம், பராமரிப்பு, அபிவிருத்தி என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. அத்துடன் விமானம் திருத்துதல், பழுது பார்த்தல், விமானப் பயிற்சி நிலையம் அமைத்தல் என்பனவும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதற்கென 205 மில்லியன் டொலர்களை முதலிட இந்தியா இணக்கம் தெரிவித்திருந்தது.

முதலீட்டின் அளவைப் பொறுத்து இந்த விடயங்கள் தீர்மானிக்கப்படவிருக்கின்றன. இதற்குரிய காலக் கெடுவும் தீர்மானிக்கப்பட வேண்டும் என போக்குவரத்து அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர தெரிவித்துள்ளார்.

## மன்னார்... (01 ஆம் பக்கத் தொடர்)

மன்னார் மாவட்டத்தின் முசலி, மடு, மாந்தை மேற்கு பிரதேச சபைகளில் மீள்குடியேற்ற ஏற்பாடுகளைச் செய்வதற்கான அறிக்கை தற்போது தயார் நிலையில் இருக்கிறது. இதற்குத் தேவையான ஆவ ணங்களைச் சமர்ப்பிக்கக் கோரி நாங்கள் பத்திரிகை வாயிலாக அறிவித்தல் விடுத் தோம். போதுமான தகவல் கிடைக்காமையினால் மேலும் 20 நாட் [illegible] இருந்த [illegible] இடம்பெயர்ந்த



வர்களிடம் இருந்து போதுமான தகவல்கள் எமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த தகவல்களை வைத்து நாங்கள் அறிக்கையை தயார் செய்திருக்கிறோம்.

இம்மாதம் 21 ஆம் திகதியுடன் அந்த அறிக்கையை பூர்த்தி செய்வதற்கான காலக்கெடு முடிவடை கிறது என அவர் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவதற்காக தகவல்களைத் திரட்டுவதில் இடம் பெயர்ந்த மக்கள் போதுமான ஒத்துழைப்பைத் தரவில்லை. முன்வருகின்ற பலரிடம் தேவையான ஆவணங்கள் இருப்பதில்லை. அரசியல்வாதிகளும் இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை என அறிக்கையிடலில் தாம் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றிக் கூறும் போது அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• இஸ்பஹான் சாப்தீன்

# திறமையுள்ளவர்கள் தமது திறமையை வெளிக்காட்ட முயற்சி எடுத்தால் நிச்சயம் வாய்ப்புக் கிடைக்கும்

'ஓவியம்' வரைதல் என்பது ஒரு தியானம். அதற்கு அதிகம் பொறுமை தேவை.' இந்த வாசகங்களை எங்கோ வாசித்த ஞாபகம். ஓவியக் கலைஞர் திருமதி ஸம்சியா கலீலை சந்தித்தபோது இதனை அதிகம் உணர முடியுமாக இருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை (06.08.2017) அவரது ஓவியக் கண்காட்சி நடைபெற்ற கொழும்பு-7, லயனல் வென்ட் காட்சிக் கூடத்தில் அவரைச் சந்தித்து உரையாடினேன். கடந்த நான்கு வருட காலப்பகுதிக்குள் தான் வரைந்த 38 ஓவியங்களை அவர் இங்கு காட்சிக்கு வைத்திருந்தார். ஆகஸ்ட் 3 ஆம் திகதியில் இருந்து தொடர்ந்து மூன்று நாட்கள் இக்கண்காட்சி நடைபெற்றது.

Nature's Odyssey-ii எனும் மகுடத்தில் இந்த ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இது திருமதி ஸம்சியா கலீலுடைய இரண்டாவது கண்காட்சி. முதலாவது கண்காட்சி தனது 54 ஆவது வயதில் 2012 ஆம் ஆண்டு ஜூலை 14,15,16 ஆம் திகதிகளில் Nature's Odyssey எனும் தலைப்பின் கீழ் கொழும்பு-3, நெழும்பொக்குண மாவத்தையிலுள்ள இலங்கை தேசிய கலாபவனத்தில் நடைபெற்றது. அதன்போது எண்ணெய் வர்ணத்தில் வரைந்த தனது 40இற்கும் மேற்பட்ட ஓவியங்கள் காட்சிக்கு வைத்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

Odyssey என்றதும் ஹோமரின் கவிதைகளை நினைவுபடுத்தின. ஏன் இந்தப் பெயரை வைத்தீர்கள் என்று கேட்க முற்பட்டபோது அவரே குறிப்பிட்டார். 'ஒடிசி என்பது ஒரு பிரேஞ்சு மொழிச் சொல். இயற்கை சார்ந்த விடயங்களைக் குறிக்க பலரும் இச்சொல்லை உபயோகிக்கிறார்கள்.' இதே அர்த்தம் இக் கண்காட்சியிலும் இருந்த ஓவியங்களிலும் புலப்பட்டன.

இயற்கை சார்ந்த ஓவியங்களை மாத்திரம்தான் வரைவீர்களா என்று கேட்டதற்கு, 'உருவங்கள் வரைவது குறைவு. மார்க்க வரையறைகளைக் கருத்திற் கொண்டுதான் இயற்கை சார்ந்த ஓவியங்களை அதிகம் வரைகிறேன். Figure Drawing மற்றும் Portrait போன்றவற்றை கற்ற போதிலும் அவை விருப்பம் குறைவு. இயற்கைக் காட்சிகளை வரைவதில் ரசனை சார்ந்த ஆர்வம் அதிகம்' என்றும் எதிர்காலத்தில் Modern Art சார்ந்து வரைய முயற்சியெடுக்க இருப்பதாகவும் குறிப்பிட்டார்.



அவரது ஓவியங்களைப் பார்த்துக் கொண்டு செல்கையில் பெரும்பாலானவை Impasto Style சார்ந்தவையாக இருப்பதை அவதானிக்க முடிந்தது. Impasto என்பது ஒரு குறிப்பிட்ட மேற்பரப்பில் வர்ணப் பூச்சு அடர்த்தியாக உபயோகிப்பதைக் குறைக்கும். அதிகமான நிறங்கள் பல நிறங்களை கலவை செய்து பெறப்பட்டவை என்பது புரிந்தது. நேரடி நிறங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது குறைவாகவே இருந்தது.

திருமதி ஸம்சியா கலீல் யாழ்ப்பாணம் இணுவிலில் பிறந்தவர். வேம்படி பெண்கள் மேல்நிலைப் பாடசாலையில் கல்வி கற்றவர். கணிதப் பிரிவில் உயர்தரம் கற்றவர். 1980 இல் தனது 23 வயதில் திருமணம் முடித்தது முதல் கல்கிசையில் வசித்து வருகிறார். 60 வயதை நெருங்கியுள்ள நிலையில், தற்போது ஒரு சர்வதேச பாடசாலையில் சித்திரப் பாட ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

ஐந்து வயது முதல் ஓவியம் வரைவதில் தனக்கு ஆர்வம் ஏற்பட்டதாகவும் குடும்பத்தினர் தன்னை வேறு துறையில் கற்கும்படி கூறியதால் பாடசாலையில் கற்கும் போது சித்திரத்தை ஒரு பாடமாகக் கற்க முடியவில்லை என்றும், அதன் பின்னர் இளமைப் பருவத்திலும் இதனை ஒரு துறையாக கற்க முடியவில்லை என்றும் தெரிவித்தார். ஆனால், ஓவியம் வரையும் ஆர்வம் குறையவில்லை என்றும் சுயதேடலாலும் நூல்களை பார்த்துப் பயிற்சி எடுத்தும் தன்னை வளர்த்துக் கொண்டதாகக் குறிப்பிட்டார்.

'ஓவியங்கள் எனக்கு, ஒருவகையில் குழந்தை மாதிரி. ஓவியங்களுக்குப் பெயர்களும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர்கள் ஓவியங்களை வாங்கிச் செல்லும்போது கவலையாக இருக்கும். ஒரு ஓவியத்தை வரைய சுமார் 24 மணி நேரம் தேவை. வீட்டு வேலைகளுக்கு மத்தியில் நேரம் கிடைக்கும் போது அவற்றை வரைகிறேன். சில ஓவியங்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை. ஒரு முறை எனக்கு பிடித்தமான ஒரு ஓவியத்தை ஒருவர் வாங்கிச் சென்றார். எனக்குக் கவலையாக இருந்தது. உடனே அதே போன்று ஒன்றை மீண்டும் வரைந்தேன். அதுவும் விற்பனையானது. மூன்றாவதாக அதே போன்று இன்னுமொரு ஓவியம் வரைந்தேன். சிறிய சில வேறுபாடுகள் இருந்தன. முதல் ஓவியத்தை வாங்கிச் சென்றவர் இம்முறை அதே போல் இன்னொரு ஓவியம் இருப்பதைக் கண்டு அவர் வாங்கிய ஓவியத்தை கொண்டு வந்து குடும்பம் சகிதம் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். என் திறமைக்கு கிடைக்கும் இப்படியான அங்கீகாரங்கள் எனக்கு அதிக சந்தோசத்தைத் தருகின்றன.

இவரது தந்தையின் உற்சாகமும் வழிகாட்டலுமே முதன் முதலில் ஓவியம் வரைவதற்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது. தந்தையும் ஓவியங்கள் வரையக் கூடியவர். அவருக்கு அரச உத்தியோகம் கிடைக்கும் வரை ஓவியங்கள் வரைந்து வந்துள்ளார். பிறகு அவர் பயன்படுத்திய Sketch Books ஐ வைத்து தாம் வரையப் பழகியதாகவும் அதனைக் கண்ணுற்ற தந்தை சிறிய விடயமாக இருந்தாலும் உற்சாகமூட்டி தேவையான உபகரணங்களை கொண்டு வந்து தருவதாகவும் அதுவே இந்தளவு தூரம் வருவதற்கு காரணம் என்றும் குறிப்பிடுகிறார்.

தனது தந்தையே இவருடைய முதல் குரு. தனது 51 ஆவது வயதில்தான் இத்துறை சார்ந்த அறிவைப் பெரும் வாய்ப்புக் கிடைத்ததாகக் குறிப்பிடும் இவர், ஆர்வம் இருந்தால் வயது ஒரு தடையல்ல என்பதை உறுதியாகக் குறிப்பிடுகிறார். சித்திரக் கலையை முதலில் கலாசூரி ஜய சிறி கமகேயிடம் ஒருவருடம் கற்றுள்ளார். பின் தனது தோழி கொடுத்த தகவலின் படி 2009 ஆம் ஆண்டு முதல் இலங்கை தேசிய கலாபவனத்தில் இணைந்து சில வருடங்கள் முறையாக இக்கலையை கற்றுள்ளார். தனது ஆர்வத்தினாலும் விடா முயற்சியினாலும் இன்று இலங்கையில் ஓர் தேர்ச்சி பெற்ற ஓவியராகத் திகழ்கிறார் திருமதி ஸம்சியா கலீல்.

'வீட்டில் நான் வரைந்த இரண்டு ஓவியங்களை தொங்கவிடுவதற்கு முறையாக கற்க வேண்டும் என்றுதான் வகுப்புகளுக்குச் சென்றேன். கண்காட்சி செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கவில்லை. அப்போது, இலங்கை கலாபவனத்தில் கற்றுக்கொண்டிருந்தவர்களுள் நான் மட்டுமே ஒரு முஸ்லிம் பெண்மணி. அங்கிருந்த பணிப்பாளர் ஒருவர் நீங்கள் கண்காட்சி ஒன்று செய்தால் என்ன என்று கேட்டார். ஒரு ஓவியம் வரைவதற்கே கடினமாக இருக்கும், 50 வயதுக்குப் பிறகுதான் முறையாக கற்கவும் ஆரம்பித்திருக்கிறேன் இப்படியிருக்கயில் நான் எப்படி கண்காட்சி செய்வது என்று யோசித்தேன். நான் சேர்ந்து ஒரு மாதத்தில் ஓவியப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போட்டியில் வீட்டில் பயிற்சிக்காக வரைந்த ஒரு ஓவியத்தை கொண்டுபோய் காட்சிக்கு வைத்தேன். அதற்குப் பரிசொன்று கிடைத்தது. அந்த படத்தை விற்காமல் ஞாபகார்த்தமாக பாதுகாத்து வருகிறேன்.

இதை வைத்து தந்தையும் உற்சாகமூட்டவே எனக்கும் கண்காட்சி செய்யும் ஆர்வம் ஏற்பட்டது. இன்று இரண்டாது முறையாக தனியாக கண்காட்சியை நடாத்துகிறேன். பயிற்சியே எல்லாவற்றுக்கும் காரணம் என்று எண்ணுகிறேன் என தனது கண்காட்சிப் பயணத்தைப் பற்றி விவரிக்கிறார் திருமதி ஸம்சியா கலீல்.

அது தவிர வருடம்தோரும் ஜனவரி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை 'கலா பொல' எனும் பெயரில் நடைபெறும் கண்காட்சியில் 2010 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தனது ஓவியங்களை காட்சிப் படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

'இலங்கையை விட வெளிநாடுகளில் அதிகமான Art Galleries காணப்படுகின்றன. ஆனால், இலங்கையில் ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்வதே கடினமான ஒரு விடயம். ஓவியங்களை ஒரு இடத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பதே ஒரு கடினமான வேலை. வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்வது இதைவிட கடினமாக இருக்கும். அத்தோடு Art Galleries எங்களுக்கு ஏற்றவையாகவும் இருக்க வேண்டும். இருப்பினும் வெளிநாட்டில் எனது ஓவியக் கண்காட்சி ஒன்றை நடாத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு உள்ளது' என தனது எதிர்காலக் கனவு பற்றி மனம் திறந்தார்.

'திறமையுள்ளவர்கள் தமது திறமையை வெளிக்காட்ட முயற்சி எடுத்தால் நிச்சயம் வாய்ப்புக் கிடைக்கும். முஸ்லிம் பெண்கள் இந்தத் துறைகளை திறமையிருந்தும் தெரிவு செய்வது குறைவு. ஆசையோடு ஒரு வேலையை செய்தால் அதில் மகிழ்ச்சி இருக்கிறது. தொழுகை நேரம், நோன்பு காலம், அன்றாட வீட்டு வேலைகள், வைபவங்கள், பயணங்கள் எல்லாவற்றையும் செய்துகொண்டுதான் இதனைச் செய்கிறேன். ஓவியம் வரைவதற்காக மேற்சொன்னவற்றை விடுவதில்லை.

ஓவியங்கள் வரைவதால் குடும்பம் சார்ந்தோ சமூகம் சார்ந்தோ இதுவரை எந்தத் தடையும் வரவில்லை. ஆதரவு வழங்குதே அதிகம். இந்தத் துறைக்கு வருபவர்களுக்கு எனது இந்த வார்த்தைகளே போதுமானவை' என இளம் தலைமுறையினருக்கு தனது செய்தியை முன் வைத்தார் திருமதி ஸம்சியா கலீல்.

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

# ஷூரா எனும் பொறிமுறையைப் பலப்படுத்துவோம் (02)

### ஷூரா செய்வதற்கு ஆரோக்கியமான சூழல் அவசியம்

ஷூரா எனும்போது பொது விவகாரங்களில் பொருத்தமான முடிவைப் பெற்றுக் கொள்வதற்காக கருத்துக்கள் கலந்துரையாடப்படும் இடமாகும். பொருத்தமான முடிவுகள் பெறப்படும் போது காலம், சூழல், இடம் என்ற வேறுபாடுகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு காலத்தில் எடுக்கப்படும் முன்மொழிவுகள் இன்னொரு காலத்திற்குப் பொருத்தமற்றதாகக் காணப்படலாம். அதேபோன்று ஒரு இடத்திற்கு பொருத்தமான முடிவு இன்னொரு இடத்திற்குப் பொருத்தமில்லாது இருக்கலாம். எடுக்கப்படக் கூடிய முடிவுகள் அதன் விளைவுகளைக் கருத்திற் கொண்டு எடுக்கப்படுவது மிக முக்கியமானது.

இந்த இடத்தில் ஷூரா நடைபெறும் சபை கருத்துக்கள் சொல்லப்பட சாதகமான சூழலாக இருப்பது மிக முக்கியமானது. அனைவரும் எந்தவிதமான அழுத்தங்களும் இல்லாது சுதந்திரமாக தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கான உத்தரவாதம் அங்கு நிலவ வேண்டும்.

கருத்துத் திணிப்புக்கள், கருத்து ஆக்கிரமிப்பு இருப்பது ஷூரா செய்தல் என்ற அடிப்படைக் கொள்கைக்கு முரண்படும் ஒரு பண்பாடாகும். சமூகத்தில் இப்படியான நோய்கள் இருப்பதை ஆங்காங்கு அவதானிக்க முடியுமாக இருக்கின்றது. இது ஷூராவின் நோக்கத்தையே இல்லாமல் செய்கின்றது.

ஏனவே தான் தயாராகி வந்த கருத்தை எவ்வாறாவது பிறர் ஏற்கும் வகையில் சொல்வதில் சிலர் அக்கரையாக இருக்கின்றனர். தனது கருத்துக்கு அல்லது அபிப்பிராயத்திற்கு மற்றவர்கள் உடன்படும் வரை அவர்கள் வாதிடுவார்கள். அல்லது பிறர் சொல்லும் கருத்துக்களை பலபோது பொருத்தமற்றது என்று கூறுவதன் மூலம் தமது கருத்துக்கள் அங்கீகரிக்கப்படுவதற்கான சூழலை உருவாக்கிக் கொள்கின்றனர்.

இது ஷூரா செய்வதற்கான அழகிய சூழல் அன்று. தலைவராக இருந்தாலும் அவரை விட தரத்தில் குறைந்தவர்களின் கருத்துக்களுக்கும் செவிசாய்க்கும் பண்பாடு வளர்க்கப்பட வேண்டும். தனக்கு மாத்திரமல்ல, மற்றவர்களும் பல விடயங்களை அறிந்து வைத்திருக்கின்றார்கள் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



தனது கருத்துக்கள் அல்லது தலைவரது கருத்துக்கள் தான் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று காணப்படுமாயின் ஷூராவின் பெறுமானமே இல்லாமல் போகின்றது. ஷூரா எந்த நோக்கத்திற்காக விதியாக்கப்பட்டதோ அந்நோக்கம் நிறைவேற்றப்படாமல் ஷூராவின் அந்தஸ்து குறைந்து விடுகின்றது.

### ஷூரா செய்வதன் பயன்கள்

இஸ்லாம் எமக்குக் கற்றுத்தந்த ஷூரா என்ற வழிமுறையானது பல்வகை பயன்களை தருகின்றது. இதன் மூலம் தனிநபர்கள், நிறுவனங்கள், சமூகங்கள், மற்றும் நாடும் நிச்சயம் பயன்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

ஷூரா செய்வதன் மூலம் தான் குறித்த நிறுவனத்தை சேர்ந்தவன், அதன் வளர்ச்சியில் தானும் பங்களிப்பு செய்துள்ளேன், தொடர்ந்தும் என்னால் பங்களிப்பு செய்யலாம் என்ற நம்பிக்கையையும், நிறுவனத்தின் பாலான ஈர்ப்பையும் வளர்கின்றது.

கருத்துக்கள் உள்வாங்கப்படாத போது இப்படியான ஈர்ப்பு நிலை இல்லாது இருப்பதை சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளில் நாம் தாராளமாகக் காண்கின்றோம். இப்படியான நிலையில் நிறுவனத்தின் வளர்ச்சி, எழுச்சியில் தானும் ஒரு பங்காளி என்ற பற்றில்லாது, தான் ஒரு ஊழியன் மாத்திரமே என்று அவர்கள் தம்மைக் கணித்துக் கொள்வார்கள்.

ஷூராவின் மூலமாக பொருத்தமான நபர்கள் பொருத்தமான இடங்களில் அமர்த்தப்பட வழி வகுக்கின்றது. பொறுப்புக்களுக்கு உரியவர்கள் இதன் மூலம் அடையாளப்படுத்தப்படுவார்கள். இன்று அதிகமான மனித வளங்கள் முறையற்ற ஒழுங்கில் பயன்படுப்படுகின்றமையால் அவற்றின் மூலம் உரிய பயனைப் பெற முடியாமல் இருக்கின்றது. மனித வளங்களின் தேவை அதிகமாக உணரப்படக்கூடிய இக்காலத்தில், ஷூரா செய்வதன் மூலம் மனித வளங்களின் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கலாம்.

ஷூராவின் மூலம் உள்ளங்கள் ஒன்றுபடுகின்றன. ஒவ்வொருவரும் தமது கருத்தைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ளும் நிலைமை காணப்படும்போது, அவற்றை பிறர் செவிமடுக்கும் சூழல் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவர்கள் உற்சாகப்படுத்தப்படுவார்கள். நம்பிக்கையுடன் தமது கருத்துக்களை முன்வைப்பார்கள். தொடர்ந்து வரக்கூடிய அமர்வுகளுக்காக தயாராகி வருவார்கள்.

ஷூரா செய்வது பணிவை ஒருவனிடம் வளர்க்கும். தான் எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும் பிறர் கருத்தையும் நான் உள்வாங்க வேண்டும் என்ற அடிப்படையை ஷூரா எற்படுத்துகின்றது. இதற்குப் புறம்பாக சர்வாதிகாரியாக நடந்து கொள்வது கர்வத்தையும் தற்பெருமையையும் வளர்க்கும். கலந்துரையாடல் செய்வது என்பது ஒருவனது குறையாக ஒருபோதும் பார்க்கப்பட மாட்டாது. கலந்தாலோசனை செய்யாது இருத்தல் என்பதுதான் ஒருவனது தரக்குறைவைக் காட்டும் என கலாநிதி அஹ்மத் ரைஸூனி குறிப்பிடுகின்றார்.

வெற்றி, முன்னேற்றத்திற்கான பாதை ஷூரா செய்வதாகும். வேகமாக மாறிவரும் இவ்வுலகில் தனித்து யாரும் செயற்பட முடியாது. சாதிக்கவும் முடியாது. தனக்கு அனைத்தும் தெரியும் என்று பயணிப்பவனின் பயணம் குறுகியது. அதற்கு நீண்ட ஆயுள் கிடையாது.

கலீபா உமர் (ரழி) அவர்களது காலத்தில் நடை பெற்ற ஒரு சம்பவம் இக்கருத்தை மேலும் தெளிவு படுத்துகின்றது. அவர்களது காலத்தில் பாரசீகத்திற்கு எதிராக நடைபெற்ற ஒரு யுத்தத்தின் போது பாரசீகத் தளபதி யுத்தத்தை நிறுத்துவது பற்றிக் கலந்துரையாட முஸ்லிம்களின் தளபதியை சந்தித்துக் கதைத்தார். இதற்கு முஸ்லிம் தளபதி இது விடயமாக தான் தனது போராளிகளுடன் கலந்துரையாடிய பின்னரே தமது கருத்தை தெரிவிக்க அவசகாம் தருமாறு கேட்டுக் கொண்டார்.

திகைத்துப் போன பாரசீகத் தளபதி, ஏன் நீங்கள் தலைவர் அல்லவா, ஷூரா செய்வோரை நாம் தலைவர்களாக நியமிப்பதில்லை என்று கூறினார். அதற்கு முஸ்லிம் தளபதி, இதனால் தான் நாம் உங்களை வெற்றி கொள்கின்றோம். மற்றும் ஷூரா செய்யாதவர்களை நாம் தலைவர்களாக நியமிக்க மாட்டோம் என்று கூறினார்.

காலம் மனிதர்களின் பெறுமானங்களை மாற்றிவிட்டது. இன்று பெயரள்வில் ஷூரா நடைபெறுகின்றது. தகுதியானவர்களிடம் கருத்துக்கள் கேட்கப்படுவதில்லை. தனக்கு விருப்பமானவர்கள், தனது கருத்துக்கு தலை சாய்ப்பவர்களிடம் கருத்துக் கேட்டும் அவள நிலை வளர்ந்து வருகின்றது. இதனால் பொது நலன்கள் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் முடிவுகளில் தாக்கம் செலுத்துகின்றன.

இதனால் சமூகம், நாடு இன்னும் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது, மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். இது ஒருவகையில் பெரும் துரோகமும் மோசடியுமாகும். இது விடயமாக சம்பந்தப்பட்டவர்கள் அல்லாஹ்விடம் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். (தொடரும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதிப் புரட்சி மூலம் ஆட்சிக்கு வரும் தலைவனுக்குக் "கட்டுப்படுதல்"



• முஹம்மத் பகீஹுத்தீன்




இஸ்லாமிய சட்டப் பரப்பில் இமாம் எனப்படும் ஆட்சித் தலைவனுக்கு 'கட்டுப்படுதல்' என்ற கருத்தியலுக்கான எல்லைகள் யாது என்பதை கடந்த இதழில் பார்த்தோம். அதில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பேரணிகள், மைதானங்களில் மக்கள் திரட்சியாக கூட்டங்கள் அமைப்பது போன்ற மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் தலைமைத்துவத்தின் தவறுகளை சுட்டுவதற்கான வழிமுறைகளின் வடிவங்களே என்றும் கால மாற்றத்தின் விளைவாக தோன்றியுள்ள நவீன அணுகுமுறைகள், வழக்காறுகள் அநீதிக்கு எதிரான குரலே அன்றி ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியை தூண்டும் புரட்சிகள் அல்ல என்பதையும் ஷரீஆவின் நிழலில் நோக்கினோம்.

இன்று 'தலைமைக்குக் கட்டுப்படுதல்' என்ற கருத்தியலில் பிழையாகப் புரியப்பட்ட இன்னொரு பகுதியை ஷரீஆவின் பார்வையில் நோக்குவோம்.

ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் பாவமல்லாத விடயத்தில் தலைமைக்குக் கட்டுப்படுவது வாஜிப் என்பது இஸ்லாமிய சட்டப் பரப்பின் தீர்க்கமான கருத்தாகும். இந்தக் கருத்தின் நீட்சியாக ஆக்கிரமிப்பு செய்த ஆட்சியாளனுக்கும் மக்கள் கட்டுப்படுவது வாஜிபாகும் என்ற சிந்தனையை ஆரம்பகால மற்றும் பிற்கால இஸ்லாமிய அறிஞர்கள் கூறிவந்துள்ளனர். அந்த ஆக்கிரமிப்பாளன் தொழுகையை நிறைவேற்றுபவனாகவும் இஸ்லாத்தை பாதுகாத்துப் போராடுபவனாகவும் இருக்க வேண்டும் என்பதே இதற்கான நிபந்தனையாகும்.

ஆட்சியில் இருக்கும் தலைவனை மிகைத்து வரும் ஆக்கிரமிப்பாளன் அவர் தற்போதைய தலைவன் என்ற வகையில் கட்டுப்பட வேண்டும் என்ற இந்த சிந்தனை மிகத் தவறாகப் புரியப்பட்டுள்ளது. அதன் விளைவாக முர்ஸியை கவிழ்த்து விட்டு ஆட்சி பீடம் ஏறிய ஸீஸீக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது ஹராம் என வெகுஜன ஊடகங்களில் பத்வாக்கள் வெளிவந்தன.

ஒரு ஆட்சியை கவிழ்த்து விட்டு தலைமை பதவிக்கு வரும் ஆக்கிரமிப்பு ஆட்சியாளனுக்கும் கட்டுப்பட வேண்டுமா? என்ற கேள்விக்கு மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளுடன் கட்டுப்படுவது கட்டாயம் என்றே இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் பத்வா கூறியுள்ளனர்.

இது ஒரு பொதுவான பத்வா. எனவே இந்த பத்வா காலம், இடம், சூழல் நிலைகள் மாற்றங்களுடன் மாறுபடும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இஸ்லாமிய அறிஞர்கள் ஆக்கிரமிப்பின் மூலம் வந்த ஆட்சியாளனை அங்கீகரிப்பதற்கு ஒரு பின்புலம் இருக்கின்றது. அராஜகங்களை அழிப்பதற்காக கலகங்கள் செய்து ஆட்சிபீடம் ஏறும் தலைவர்கள் பற்றித்தான் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். அராஜகங்களை பரப்பும் அநியாயக்கார ஆட்சிக் கவிழ்ப்பு பற்றிய கருத்தை இங்கு அவர்கள் பேசவில்லை. காரணம் நீதியான சட்டபூர்வமான ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்யும் நபர் தேசத் துரோகி என்ற வகையில் கொலை செய்யப்படுவார் என்பதே அவர்களது கருத்தாகும்.

ஆக்கிரமிப்பு செய்து மிகைத்து வந்த ஆட்சியாளனுக்குக் 'கட்டுப்படுதல்' வாஜிப் என்ற கருத்தை ஷரீஆவின் பார்வையில் இமாம் மாவர்தி அவர்கள் மிக அழகாக தெளிவுபடுத்தியுள்ளார்கள். அவர் தனது ''ஆட்சியாளர்களுக்கான சட்ட ஒழுங்குகள்'' என்ற நூலில் இது குறித்து பேசியுள்ளார்கள்.

ஆக்கிரமிப்பு செய்த ஆட்சியாளன், நபிகளாரின் ஆட்சி முறையில் உள்ளவாறு இமாமத் பதவியை பாதுகாக்க வேண்டும் என்றும் பொது மக்கள் மார்க்க ரீதியாக அவனுக்கு கட்டுப்படும் நிலை மிகைத்துக் காணப்பட வேண்டும் என்றும் ஆக்கிரமிப்பு செய்த ஆட்சியாளன் தீனுல் இஸ்லாத்தைப் பாதுகாப்பவராக இருக்க வேண்டும் என்றும், இன்னும் இது போன்ற பல நிபந்தனைகளைக் கூறுவார். அராஜகங்களை பரப்பும் ஆட்சியாளருக்கு கட்டுப்படுவது கூடாது என்பதையே இமாம் மாவர்தி இங்கு அடையாளப்படுத்தியுள்ளார்.

இங்கு ஆக்கிரமிப்பு யாருக்கு எதிராக நடைபெற்றது என்பதை நோக்குவதும் மிக முக்கியமாக ஒரு விடயமாகும்.

- ஆட்சி கவழிப்பு என்பது அநீதியான ஆட்சிக்கு எதிராக நீதியை நிலை நாட்டுவதற்காக அமையலாம்.
- அநியாயக்கார அட்சியாளன் ஒருவன் இன்னொரு அநியாயக்கார ஆட்சியாளனுக்கு எதிராக கிளர்ச்சி செய்யலாம்.
- ஒரு அநியாயக்கார ஆட்சியான் நீதியான சட்டபூர்வமாக வந்த ஆட்சியாளனுக்கு எதிராக ஆட்சிக் கவிழ்ப்பு செய்யலாம்.

2013 ஜூலை 3 ஆம் திகதி நடைபெற்ற இராணுவ சதிப் புரட்சியில் ஸீஸீ ஆக்கிரமிப்பு ஆட்சியாளராக தலைமை பொறுப்புக்கு வந்தார். ஆட்சிக்கு வந்த ஸீஸீ படுபயங்கரமான கொலைகளை செய்தார். ஆயிரக்கணக்கான உயிர்களை ஒரே நாளில் காவு கொண்டார். இஸ்லாத்தை பேச முடியாதவாறு அதன் குரலை முற்றாக அடக்கினார். இல்லாதோருக்கு உதவும் நன்புரி அமைப்புக்களை இழுத்து மூடிய பெருமைக்குரியவர்.

மனித நேயங்களுக்கு எதிராகப் போராடும் ஸீஸீ ஒரு துரோகியாவர். அவர் சட்டபூர்வ ஜனாதிபதி முர்ஸிக்கு சத்தியப் பிரமானம் செய்த பின்பே ஜனாதிபதிக்கு எதிராக இராணுவத்தைப் பயன்படுத்தி ஆட்சியயைக் கவிழ்த்தார். யாருக்கு எதிராக இந்த ஆக்கிரமிப்பு என்பது அவருக்கு கட்டுப்படுவதா இல்லையா என்பதை தெளிவுபடுத்த போதுமாகும்.

ஜனாதிபதி முர்ஸி பெரும்பான்மை விருப்ப வாக்கில் சட்ட பூர்வமாக ஆட்சிக்கு வந்தவர். நீதி, சுதந்திரம், சமத்துவம் போன்ற உயர் பெறுமானங்களை நிலை நிறுத்தும் வகையிலும் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கோடும் காத்திரமான முயற்சியில் ஈடுபட்ட தலைவர். இந்நிலையில் ஸீஸீ யாருக்கு எதிராக கிளர்ச்சி செய்தார் என்பதைத்தான் இங்கு நோக்க வேண்டும். இத்தகைய ஆக்கரிமிப்பாளர்களை இஸ்லாமிய அறிஞர்கள் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. அவர்களுக்கு எதிராகப் போராட வேண்டும் என்றே தூண்டியுள்ளார்கள். (பக்.14)

# மகாஸித் தேடல்கள் (1)



• ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

## முன்னுரை

மகாஸித் இன்று பெரும் கடலாய் வியாபித்திருக்கும் ஒரு கலை. கலாநிதி ரிபாய் (நளீமி) அவர்கள் குறிப்பிடுவது போல் இக்கலை தொடர்பில் இதுவரை மூவாயிரத்திற்கும் அதிகமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன.[1] எனவே அந்தக் கடலினுள் மூழ்கி முத்தெடுப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

மகாஸித் கலையைக் கற்கின்ற போதும் கற்பிக்கின்ற போதும், எனக்கு ஒரு விடயம் சற்று உறுத்தலாகவே இருக்கின்றது. அதாவது இக்கலையினுள் இருக்கும் அதிகமான கலைச் சொற்களும் நுணுக்கமான சொல்லாடல்களும் பலரை அதனை விட்டும் தூரமாக்கி விடுகின்றன. அக்கலையைக் கற்றுக் கொள்ளும் ஆர்வத்தை சற்றுக் குறைத்து விடுகிறது. உண்மையில் இது மகாஸித் கலையின் நோக்கத்திற்கே புறம்பானது.

ஷெய்க் அப்துல்லாஹ் தர்ராஸ் அவர்கள் குறிப்பிடுவது போல், மகாஸித் எல்லோருக்கும் அவசியமானது. ஏனெனில் அது இஸ்லாத்தை மிகச் சரியாக விளங்கிக் கொள்வதற்கான வழி என்கிறார்.[2] மாத்திரமன்றி, உண்மையில் இஸ்லாத்தினை அன்றாட வாழ்வில் உளத் திருப்தியுடன் அமுல்படுத்துவதற்கான தூண்டுதலும் ஆர்வமும் அதன் மகாஸிதை அறிந்து கொள்வதிலேயே தங்கியிருக்கிறது.

அந்தவகையில் மகாஸிதின் மிகப் பிரதானமான நோக்கங்களில் ஒன்று அல்லது பயன்பாடு ஷரீஅத்தை மிகச் சரியாக விளங்கிக் கொள்வதற்குத் துணை செய்வதும், அதனை அமுல்படுத்துவதற்கான தூண்டுதலை வழங்குவதுமாகும். இந்தப் பணியை இன்று மகாஸித் செய்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் அது குறிப்பிட்டதொரு புலமைத்துவ வட்டாரத்துடன் மட்டுப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது.

ஒரு தடவை மகாஸித் சம்பந்தமான விரிவுரையொன்றை நிகழ்த்தி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஒரு சகோதரர் பக்கத்தில் அமர்ந்திருந்தார். பேச்சின் இடையில் மகாஸித் துறையில் ஆர்வம் வருவதில்லை என்றார். மகாஸித் கலையின் சிரமமான கலைப் பிரயோகங்கள் தான் அவரது ஆர்வத்தைத் தடுத்திருக்கிறது. எனக்கு ஒரு விடயம் புரியத் தொடங்கியது. மகாஸிதை நாம் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் முன்வைக்கவில்லை. இது அசாத்தியமான ஒன்றல்ல. கலாநிதி அஹ்மத் ரைஸூனி அவர்கள் ஷரீஆவின் ஏனைய கலைகளை விடவும் மகாஸிதைப் புரிந்துகொள்வது மிகவும் இலகுவானது என்கிறார். அதனை அவரது வார்த்தைகளிலேயே சொல்கிறேன் கேளுங்கள்.

''உண்மையில் மகாஸிதை விளங்கிக் கொள்வதும், அதில் பரிச்சயப்படுவதும், இஸ்லாத்தின் கலைகள் மத்தியில் இதுவே இலகுவானது அல்லது குறைந்த சிரமத்தைக் கொண்டது. மகாஸித் பிக்ஹை விடவும் அதன் நுணுக்கமான சட்டப் பரப்புகளை விடவும் இலகுவானது. உஸூலுல் பிக்ஹை விடவும் இல்முல் கலாம் எனும் கலையை விடவும் அவற்றின் கலைச் சொற்கள், தர்க்கங்களை விடவும் இலகுவானது.

ஹதீஸ் திறனாய்வுக் கலையை விடவும் அதன் நிபந்தனைகள், காரணங்கள், ஒருவரைக் குறைகாணல், நியாயப்படுத்தல் என்ற அனைத்தையும் விடவும் இலகுவானது மாத்திரமன்றி அறபு மொழிக் கலைகளை விடவும் கூட மிகவுமே இலகுவானது. அதிலும் குறிப்பாக அறபிலக்கணம் அதனை நாங்கள் பள்ளிப் பருவத்தின் ஆரம்பத்திலேயே கற்கின்றோமே.

மாத்திரமன்றி மகாஸிதை அறிந்து கொள்வதும், அதனை அல்குர்ஆனிலிருந்தும் சுன்னாவிலிருந்தும் விளங்கிக் கொள்வதும் எப்பொழுதும் அறிஞர்களில் மாத்திரம் தங்கியிருக்கும் ஒரு விடயமல்ல. மாற்றமாக சில மகாஸித்கள் எல்லோராலும் விளங்கிக் கொள்ள முடியுமானவை மற்றும் சில மிகக் குறைந்த வடிவிலானதொரு அவதானத்தின் மூலம் மாத்திரமே விளங்கிக் கொள்ள முடியுமானவை.

உண்மையில் இது எதனைப் போன்றது எனின், அல்லாஹ் எமக்கு அளித்துள்ள பழங்கள், விதைகள், மரக்கறி வகைகள் போன்ற அருள்களுக்கு நிகரானது. அவற்றில் சில கைகெட்டிய தூரத்தில் இருப்பவை. நேரடியாகப் பறித்துக் கொள்ளமுடியும். இன்னும் சில பூமியின் உள்ளிருந்து அகழ்ந்தெடுக்கப்பட வேண்டியவை. மற்றும் சில உயர்ந்த மரங்களில் கைக்கெட்டாத தொலைவில் இருப்பவை. அவற்றை சிரமப்பட்டுத் தான் அறுவடை செய்ய வேண்டியிருக்கும். மகாஸிதும் இது போன்றதுதான், எல்லாமே ஒரே வகையான ஆய்வுச் சிரமம் கொண்டவையல்ல.

ஷரீஆ சட்டங்களும் அவற்றின் மகாஸிதுகளும் குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் உரியவை என்று வகைப்படுத்தப்படக் கூடிய நுண்ணறிவு சார்ந்ததொன்றல்ல. அல்லது மூளைகளைக் கசக்கிப் பிழியும் தர்க்கவியல், தத்துவவியல் போன்ற நிபுணத்துவக் கலையும் அல்ல. அல்லது வழி தவறிவிடக் கூடாது என்பதற்காக பொதுமக்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள இல்முல் கலாம் போன்ற ஒரு கலையுமல்ல. மாற்றமாக இவை எல்லோருக்கும் அவசியமான சட்டங்களும் அவற்றின் நோக்கங்களும் மாத்திரமே.

ஒவ்வொருவரும் தனது தரத்திற்கும் முயற்சிக்கும் ஏற்ப அதிலிருந்து பயனடைய முடியும். அதனால்தான் அவை விளங்கிக் கொள்ளக் கூடியவையாகவும் மனித சிந்தனைக்கு நெருக்கமானவையாகவும் இருக்க வேண்டும் என்ற அவசியம் இருக்கிறது.[3] அவற்றில் ஆழமான விடயங்கள் கூட எளிமைப்படுத்தப்பட முடியுமானவையாகும்.

இதனடிப்படையில் ஷரீஆ சட்டங்களும் அதன் மகாஸிதுகளும் மூன்று படித்தரங்களில் கற்கவும் கற்பிக்கப்படவும் முடியும். முதலாவது குறித்த துறை சார் அறிஞர்கள் நிபுணர்களது மட்டம். இது அவர்களது தரத்திலான நுணுக்கங்களுடன் கற்கப்படும் உயர் மட்டம். இரண்டாவது கல்வியலாளர்கள் பல்கலைக்கழக மாணவர்களது மட்டம். இது ஒரு நடுத்தர மட்டம். மூன்றாவது பொதுமக்களது மட்டம் இது இலகுபடுத்தப்பட்ட குறைந்த மட்டம்.[4]

கலாநிதி ரைஸூனியின் வார்த்தைகளில் மகாஸிதின் மகாஸித் என்ன என்பது மிகவும் தெளிவாகப் பேசப்பட்டிருக்கிறது. மாத்திரமன்றி அது புலமைத்துவ வட்டத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படக் கூடாது என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு மட்டுப்படுத்துவது அதன் நோக்கங்களுக்கும் புறம்பானது என்பதையும் புரிந்துகொள்கிறோம்.

மகாஸித் என்பது எளிமையான கலைதான். ஆனால் சாதாரண பொதுமகனும் பயன் பெறுகின்ற வகையில் அது எளிமையாக முன்வைக்கப்படுகின்றதா? என்ற கேள்வி மிகவும் முக்கியமானது. பல சமயங்களில் மகாஸித் குறித்த எதிர்வாதங்களுக்கு, அது பற்றிய போதிய தெளிவின்மைகளும் காரணமாக அமைகின்றன. அந்த வகையில் ஷரீஆ சட்டங்களுக்கான மகாஸிதுகள் எவை என்பது பற்றி மக்களுக்கு எளிமையான வடிவில் அறிவூட்டப்பட வேண்டிய அவசியம் இருப்பது போலவே மகாஸித் கலை குறித்த அறிவும் எளிமைப்படுத்தப்பட்ட வடிவில் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. இன்றைய சூழலில் வெகுவாக உணரப்படும் ஒரு உண்மை இது.

அதற்கான ஒரு சிறு முயற்சியை முன்னெடுத்தால் என்ன என்ற கேள்வி என்னில் அடிக்கடி வந்து போவதுண்டு. அந்தக் கேள்விக்கான ஒரு பதிலாகவே 'மகாஸித் தேடல்கள்' என்ற ஒரு தொடர் பத்தியை எழுதலாம் என்றிருக்கிறேன். இதில் மகாஸித் கலை பற்றிய அறிமுகத்தை முதன்மையாகவும் அவ்வப்போது ஷரீஆவுக்கான மகாஸிதுகளை அடையாளம் காட்டுவதை அடுத்ததாகவும் மேற்கொள்ள நினைக்கிறேன்.

மகாஸித் கலை அறிமுகத்தையும் கூட, பாடத்திட்ட வடிவிலன்றி முக்கியமாய்க் கேள்வி எழுகின்ற, விடை அவசியமான பக்கங்கள் மீது ஒளிபாய்ச்சும் ஒரு செயற்பாடாகவே செய்ய நினைக்கிறேன்.

இங்கு மற்றொரு விடயத்தையும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். மகாஸித் கலையின் கோட்பாட்டுப் பக்கம், நவீன காலத்தில்தான் மிகுந்த ஆய்வுக்குட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இமாம் ஜுவைனி, கஸ்ஸாலி, ஷாதிபி போன்றவர்கள் முன்வைத்த மகாஸித் சிந்தனைக் கட்டமைப்பைத் தாண்டி நவீன காலத்தில் பல்வேறு வித்தியாசமான மகாஸித் சிந்தனைக் கட்டமைப்புகள்[5] முன்வைக்கப்படுகின்றன. அந்தவகையில் கோட்பாடு என்ற இடத்திலும் வித்தியாசப்பட்ட பார்வைகள் இருப்பதை மறுப்பதற்கில்லை.

மாத்திரமன்றி ஒரு கலை என்ற வகையில் தொடர்ந்தும் வளர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு நிலையிலேயே மகாஸித் இருக்கிறது. அந்தவகையில் இங்கு பேசப்படும் விடயங்கள் முடிந்த முடிவுகள் என்பதை விடவும் பெரும்பாலும் சமநிலைத் தேடல்களாகவே அமையப் போகின்றன. அதனால்தான் தலைப்பையும் 'மகாஸித் தேடல்கள்' எனப் பெயரிட்டிருக்கிறேன்.

இறுதியாக மற்றொரு விடயம், இவ்வருடம் ஆரம்பித்து வைத்த மற்றொரு பணி இருக்கிறது. அதுதான் இமாம் ஷாதிபியின் முவாபகாத் சிந்தனைகளை விளங்கிக் கொள்ள எடுக்கப்பட்டிருக்கும் முயற்சி. அதனைக் கற்கும் போது தமிழ் நிலைப்பட்ட வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள ஏராளமான விடயங்கள் அங்கிருப்பதை உணர்ந்துகொள்ளமுடிந்தது. அதனையும் அவ்வப்போது மேற்கொள்ளலாம் என்றிருக்கிறேன்.

கலாநிதி முஃதஸ் அல் கதீப் அவர்களின் பாடக் குறிப்புகளை மையப்படுத்தி அப்பணியைச் செய்வதற்கான ஒரு உடன்பாடும் அவருடன் எட்டப்பட்டிருக்கிறது. அல்லாஹ்வே போதுமானவன். முயற்சிகளின் வெற்றி அவன் கையிலேயே இருக்கிறது. அதற்கான தைரியத்தையும், உறுதியையும் தேக ஆரோக்கியத்தையும் தருமாறு பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

(1) கலாநிதி S.L.M. ரிபாய் (நளீமி) (Phd of SOAS, Freelance writer in UK), நேரடிக் கலந்துரையாடல், வாட்ஸ்அப் ஊடாக, 2017.

(2) ஷெய்க் அப்துல்லாஹ் தர்ராஸ், முன்னுரை, முவாபகாத்திற்கான குறிப்புரை, பாகம் 01, பக்கம் 10

(3) ஷரீஆ மனித அறிவால் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் காணப்படுதல் வேண்டும் என்பது, இமாம் ஷாதிபி அவர்கள் பேசும் நான்கு வகையான மகாஸிதுகளில் ஒன்று. அந்தவகையில் ஷரீஆ பொது மகனாலும் விளங்கி, செயற்படுத்த முடியுமாக அமைக்கப்பட்டிருத்தல் அதனுடைய ஒரு மக்ஸத் என்பதாகக் குறிப்பிடுகிறார். இக்கருத்தை விளங்கப்படுத்தும் விதமாகவே மேற்குறித்த வசனம் அமைந்திருக்கிறது.

(4) கலாநிதி அஹ்மத் ரைஸூனி, மகாஸிதுல் மகாஸித், பக்கம் 68, 69, மர்கஸுல் மகாஸித் லித்திராஸாத் வல் புஹூஸ், ஷபகா அல் அறபிய்யாலில் அப்ஹாஸ் வந்நஷ்ர்.

(5) மகாஸித் சிந்தனைக் கட்டமைப்பு என்பதன் மூலம் நான் நாடுவது: மகாஸித் என்றால் என்ன? அவை எவை? அவற்றின் வகைப்பாடுகள் எவை? அதில் உயர்ந்தது எது? தாழ்ந்தது எது? என்ற சிந்தனை ஒழுங்காகும் (Maqashid Structure).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எப்போதும் விளைவுகளில் கவனமாக இருங்கள்

## சிகிச்சை உளவியலாளர் ஹாலா பனானீ

ஹாலா பனானி எகிப்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மருத்துவ உளவியலில் முதுமானிப் பட்டம் பெற்றவர். உள மருத்துவத் துறையிலும் அறிகை முறை நடத்தை சிகிச்சையிலும் 20 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். அல் ஜஸீராவில் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்பவர். இஸ்லாமிய திறந்த பல்கலைக்கழகம், மேர்சி மிஷன், கலம் நிறுவனம், அல் பையினா தொலைக் காட்சி என்பவற்றிலும் பங்குகொண்டு இஸ்லாமிய உளவியல் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளில் வளவாளராகப் பங்காற்றி வருகிறார்.

எகிப்தின் அல் பஜ்ர் தொலைக்காட்சியில் 'ஹாலாவுடன்' என ஒரு தனி நிகழ்ச்சியை நடத்தி வருகின்றது. உளவியல் கோட்பாடுகளை இஸ்லாமிய போதனைகளோடு இணைத்து வழங்குவதில் ஹாலா நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களோடு ஸ்கைப் ஊடாகத் தொடர்பு கொண்டு உளவள ஆலோசனைகளையும் நடத்தை முறை சிகிச்சை தொடர்பான வழிகாட்டல்களையும் வழங்கி வருகின்றார். மகிழ்ச்சியான குடும்ப வாழ்வு, தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பல், அசாதாரண நடத்தைகளுக்குச் சிகிச்சையளித்தல் என்பனவற்றில் ஹாலா நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

இவரது உளவியல் சார்ந்த கட்டுரைகள் சர்வதேசளவிலான பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அதேபோன்று www.muslimmetters.org எனும் இணையத் தளத்திலும் காணலாம். குர்ஆன் திலாவத்திற்கான இஜாஸாவைப் பெற்றுள்ள இவர், சமீபத்தில் மலேசியாவில் நடைபெற்ற விழா ஒன்றில் உளவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக கௌரவிக்கப்பட்டார்.

திருணமாகியுள்ள இவருக்கு 3 குழந்தைகள் உள்ளன. சமகால முஸ்லிம் உலகில் செயற்திறனுள்ள பெண்கள் வரிசையில் முன்னணியில் உள்ள இவரை அல் ஜஸீரா நேர்கண்டது. நேர்காணலின் முக்கிய பகுதி இது.

**1. பொதுவாக முஸ்லிம் பெண்கள் தம்மைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையோடு வாழ்கின்றனர். உயர் தொழில் வாண்மையாளர்கள் அவர்களுள் மிகக் குறைவாகும். நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

குழந்தைப் பருவத்திலிருந்து ஒருவரிடம் ஏற்படக் கூடிய சுயமதிப்பே (Self Esteem) ஒருவரது எதிர்கால ஆளுமையில் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கும் சமூக வாழ்வில் பங்கேற்பதற்கும் உறுதுணையாய் உள்ளது. பெற்றோர் குழந்தைகளை நடத்தும் முறையிலேயே சுயமதிப்பு விருத்தியடைகின்றது.

குழந்தைகள் பெற்றோரிடமிருந்து மதிப்பைப் பெறாதபோது அல்லது அவர்கள் செய்யும் செயல்களுக்கு கடும் விமர்சனங்கள் வரும்போது அவர்கள் பெறுமதியற்றவர்கள் என உணர்கின்றனர். பெற்றோரின் கவனம் அல்லது அக்கறை பிள்ளைகளில் இல்லாத போதும் அவர்களிடம் மிகத் தாழ்ந்த அளவிலேயே சுயமதிப்பு உருவாகின்றது. மட்டுமன்றி, பாதுகாப்பு உணர்வும் இல்லாமல் போகின்றது.

குற்ற உணர்வோடு வளர்கின்ற பிள்ளைகளிடம் தாழ்வு மனப்பான்மையும் பெற்றோருடன் முரண்படும் போக்கும் வளர்கின்றது. உடல் ரீதியான, மன எழுச்சி ரீதியான, பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படும் பிள்ளைகளிடம் அவமான உணர்வு ஏற்படுகின்றது. சில பெற்றார் பிள்ளைகளை அடிபணிய வைப்பதற்கு பயமுறுத்தும் நுட்பங்களைக் கையாள்கின்றனர். அது அவர்களிடம் வெட்க உணர்வை அதிகரிப்பதோடு, தாம் பெறுமதியற்றவர்கள் எனும் மனோநிலையை உருவாக்குகின்றது.

குழந்தைப் பருவத்தில் சுயமதிப்பும் உட்சாகமும் பாராட்டும் பெறும் குழந்தைகள் வளர்ந்த பின் உயர்ந்த சுயமதிப்புடனும் தைரியத்துடனும் செயல்படுகின்றனர்.

**2. சுயமதிப்பற்ற முஸ்லிம் பெண்களிடம் அதனை உருவாக்குவதற்கு நீங்கள் தரும் ஆலோசனை என்ன?**

நான் ஒரு அறிகை நிலை நடத்தை சிகிச்சையாளர் என்ற வகையில் ஒருவர் தாழ்வு மனப்பான்மையால் துன்புறும் போது அவர்களது சுய உரையாடலைத் தூண்டுகின்றேன். அது 500 வார்த்தைகளைக் கொண்ட ஓர் உள்ளார்ந்த உரையாடலாகும். ஒருவரது சிந்தனை எப்படி அவர்களது உணர்ச்சிகளுக்கும் செயல்களுக்கும் இட்டுச் செல்கின்றன என்பதை நான் கற்றுக் கொடுக்கின்றேன்.

ஒருவர் தனது சிந்தனையைக் கட்டுப்படுத்த கற்றுக் கொண்டால் தமது மனோநிலையை அவர்களால் கட்டுப்படுத்த முடியம். அவர்களது நடத்தைகள் பிறருடனான உறவுகளையும் கட்டுப்படுத்த முடியும். உள்ளார்ந்த ரீதியில் காணப்படும் நேர்மறையான உரையாடலே ஒருவரது தாழ்வு மனப்பான்மைக்குக் காரணமாகும். நேர்மறையான உரையாடலை விடுத்து அதற்குப் பகரமாக நேர்ப்பாடான, தன்னை வலுவூட்டக் கூடிய சுய உரையாடலில் ஈடுபட வேண்டும்.

**3. ஒருவர் தன்னுடைய இலக்கை அடைந்துகொள்வதற்கு என்ன வகையான நுட்பங்களைக் கையாள வேண்டும்?**

எப்போதும் விளைவுகளில் கவனமாக இருங்கள். உங்களைச் சூழ நேர்ப்படியாகச் சிந்திக்கின்றவர்களை வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் உங்களின் ஆற்றல் மீது நம்பிக்கை கொண்டவர்கள். உங்களைத் தூண்டுகின்றவர்கள். என்னால் முடியாது என்று கூறுவதை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள். சுய அக்கறையை வளர்த்துக் கொள்ளுங்கள். எந்த விளைவையும் அடைய வேண்டுமாயின் அதற்குக் கடின உழைப்பு அவசியம். விடா முயற்சிக்கு தன்னம்பிக்கையும் உற்சாகமும் அவசியம். எல்லாவற்றிற்கும் உங்கள் உடல் ஆரோக்கியத்தைக் கவனிப்பது முக்கியம்.

**4. உங்களுடைய மிகச் சிறந்த முன்மாதிரி யார்?**

அனைத்து முஸ்லிம்களது ஒரே முன்மாதிரி இறைதூதர் (ஸல்) அவர்களே. அவரது மனைவி கதீஜா (ரழி) ஒரு சிறந்த முன்மாதிரியாவார். ஏனெனில், அவர் மிகவும் புத்திசாலியாக செயற்பட்டுள்ளார். கணவனுக்கு ஆதரவளிக்கின்ற, அன்பு காட்டுகின்ற மனைவியாக அவர் விளங்கியுள்ளார்.

நான் தற்போது 'உலகத்தை மாற்றிய 100 பெண்கள்' எனும் நூலை வாசித்து வருகின்றேன். உண்மையில் இவர்கள் தடைகளை உடைத்துக் கொண்டு சமூக மரபுகள், பாரம்பரியங்களைக் கடந்து தங்களது கனவை எப்படி நனவாக்கினர் என்பதைப் படிக்கும்போது ஆச்சரியப் படுகின்றேன். ஃபுளோரன்ஸ் நைடிங் கேர்ள் போன்றவர்கள் ஒரு இலட்சியத்தோடும் தூர நோக்கோடும் அதை அடைவதற்கான விடா முயற்சியோடும் செயற்பட்டுள்ளனர்.

ஆலோசனை பெறுவதாயின் நிபுணர்களையே அணுக வேண்டும். நீங்கள் ஒரு விடயத்தை அறியாதவர்களாக இருந்தால் குறிப்பிட்ட விடயத்தை ஆழமாக அறிந்தவர்களிடம் வினவுங்கள் என குர்ஆன் கூறுகின்றது. சட்டத்துறை தொடர்பாக அறிய வேண்டுமாயின், சட்ட அறிஞரையே அணுக வேண்டும். ஆன்மீக அல்லது சமய ரீதியான சந்தேகங்கள் இருப்பின் பள்ளிவாயல் கதீபை அல்லது இமாமை அணுக வேண்டும். குடும்ப வாழ்வில் அல்லது மன எழுச்சி தொடர்பான பிரச்சினைகள் இருப்பின் அதனை உளவியலாளர்களிடமே கேட்டறிய வேண்டும். ஏனெனில், உங்களது உள்ளூர் பள்ளிவாயல் இமாம் உளவியல் துறையில் பயிற்றுவிக்கப்பட்டவர் அல்ல. ஒவ்வொரு துறையிலும் மிகச் சரியான வழிகாட்டலை நீங்கள் பெற வேண்டுமாயின், அத்துறை சார் நிபுணரையே அணுக வேண்டும்.

**5. நீங்கள் உங்களது வீட்டுக் கடமைகளை புறக்கணிக்காத வண்ணம் சமூகப் பணிகளில் எவ்வாறு ஈடுபடுகின்றீர்கள்?**

சமூக செயற்பாடுகளில் ஈடுபடும் போதும் உங்களுடைய குடும்பத்தை முதன்மைப்படுத்துவது அவசியமாகும். உங்களது குடும்ப கடமைகளை நிறைவேற்றாத நிலையில், சமூகப் பணிகளில் ஈடுபட முடியாது. இங்கு குடும்ப கடமைகளைப் பூரணமாக நிறைவேற்றுவதற்கும் சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கும் சவாலாக உள்ள ஒரே விடயம் நேர முகாமையே. இரண்டுக்கும் இடையில் சமநிலையைப் பேண முடியுமென்றால் எந்த முரண்பாடும் ஏற்படப் போவதில்லை.

**6. இறுதியாக, உங்களுக்கு மிகப் பிடித்தமான நூல் எது?**

டேவிட் ரிச்சோ எழுதிய How to be an adult எனும் நூல் என்னை வெகுவாகக் கவர்ந்தது. திருமண வாழ்க்கையில் நுழைவதற்கு முன்னால் ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய நூல் என்று இதனை சிபாரிசு செய்வேன். நூலின் ஒவ்வொரு பந்தியிலும் ஆழ்ந்த கருத்துக்கள் இழையோடுகின்றன. முதிர்ந்தவர் என்பதன் அர்த்தம் அல்லது வயதானவர் என்பதன் கருத்து மன எழுச்சி ரீதியில் ஆரோக்கியமாகவும் உள ரீதியில் சமநிலையாகவும் அறிவு ரீதியில் முதிர்ச்சியாகவும் இருப்பதையே குறிக்கின்றது என்ற கருத்தை இந்நூல் ஆழமாக முன்வைக்கின்றது.

# பாடசாலை இடைவிலகல்

## மனித வள அபிவிருத்திக்குப் பெருந் தடை

கல்வி அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றாகும். ஒரு நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்தியின் அத்திவாரமாகும். கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக உலகின் பல நாடுகள் கல்வித் துறையை மேம்படுத்துவதற்கு பாரியளவு முதலீடு செய்கின்றன. கல்வித் துறை முதலீடு ஒரு நாட்டின் எதிர்காலப் பலத்தைத் தீர்மானிக்கின்றது. பௌதிக வளத்தையும் மனித வளத்தையும் அதிகரிப்பதன் மூலம் அனைவருக்கும் கல்வி என்ற பூகோள இலக்கை அடை வதற்கு நாடுகள் முயற்சிக்கின்றன.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அரசாங்கம் கல்வித் துறையில் பாரியளவிலான சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. இலங்கையில் எழுத்தறிவு வீதம் 97 ஆகும். எவ்வாறாயினும், இலங்கையின் கல்வித் துறையில் பாரிய பிரச்சினைகள் பல தொடர்ந்தும் இருந்து வருகின்றன. தற்போது சைட்டம் நிறுவனத்திற்கு எதிராக நாளாந்தம் வீதி ஆர்ப்பாட்டங்களும் மறியல் போராட்டங்களும் பெருகி வருகின்றது. உயர் கல்வித் துறையில் பாரிய சீர்திருத்தம் ஒன்று அவசியம் என்று கல்வியியலாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கையின் பாடசாலைக் கல்வியில் எதிர்கொள்ளப்படுகின்ற முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றே மாணவர் இடைவிலகல் ஆகும். 2009 ஆம் ஆண்டில் மாத்திரம் 45,000 மாணவர்கள் இடைவிலகியுள்ளனர். பெருந்தோட்டத் துறையில் ஆரம்பப் பாடசாலைகளில் சேரும் மாணவர்களில் 20 வீதமானோர் கல்வியைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் இடைவிலகு கின்றனர். யுனிசெப் வெளியிட்டுள்ள பாடசாலை செல்லாத சிறார்கள் எனும் அறிக்கையில் இலங்கையில் பாடசாலைக்குச் செல்லும் வயது வந்தும் பாடசாலைக்கு சமூகம் தராத பிள்ளைகள் மற்றும் இடை விலகுகின்ற பிள்ளைகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளது.

முறைசார் கல்வியில் பாடசாலை முக்கிய பங்காற்றுகின்றது. வரையறுக்கப்பட்ட இலக்குகளையும் குறிக்கோள்களையும் கலைத் திட்டத்தினூடாக மாணவர்களிடத்தில் உருவாக்குவதற்கு மாணவர்களின் முறையான வரவு அவசியம். இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறையில் உள்ளது. பாடப் புத்தகம், சீருடை, போக்குவரத்து போன்றன இலவசமாக வழங்கப்படுகின்றது.



கல்வித் துறைக்கான செலவீனங்கள் வருடாந்தம் அதிகரித்து வருகின்றது. எனினும், இலவசக் கல்வியின் அனுகூலங்களை எல்லா மாணவர்களும் முழுமையாகப் பெறுகின்றனரா என்பது கேள்விக்குறியே. ஏனெனில், கட்டாயக் கல்வி வயதான 5 முதல் 14 வயதினர் பல்வேறு காரணங்களுக்காக பாடசாலைக் கல்வியைப் பூரணப்படுத்தாமலேயே இடைநிற்கின்றனர்.

இலங்கை ஒரு வளர்முக நாடாக உள்ளபோதும் கல்வித் துறைக்கு [illegible]மளவு நிதியை செலவு செய்கின்றது. ஆனால், பாடசாலை இடைவிலகல் என்பது அரசாங்கத்தின் இந்தச் செலவீனங்களை வீண்விரயம் செய்கின்றது. உலகின் வேறு பல நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கைப் பாடசாலைகளில் இடைவிலகல் குறைவாகும். எனினும், முறைசார் கல்வியில் அது ஒரு பிரச்சினையாகவே வளர்ந்து வருகின்றது.

மரணம் அல்லது வேறு பாடசாலைகளுக்கு இடம் மாறுதல் ஆகியன அன்றி வேறு ஏதேனும் ஒரு காரணத்திற்காக பாடசாலைக் கல்வியைப் பூரணப்படுத்தாமல் மாணவர்கள் இடைநிற்பதையே இடைவிலகல் என வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றது.

2010 இல் யுனிசெப் வெளியிட்ட அறிக்கையில் இடைவிலகல் குறித்த தனது அக்கறையை வெளிப்படுத்தியிருந்தது. சர்வதேச தொழிலாளர் நிறுவனம் 2005 இல் வெளியிட்ட அறிக்கையில் 60,000 மாணவர்கள் இடைவிலகியுள்ளதாகத் தெரிவித்தது. ஒடிட்டர் ஜெனரல் வெளியிட்ட அறிக்கையில், 2009 இல் 46,256 பேர் இடைவிலகியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தது.

இடைவிலகலுக்கான காரணங்கள் பல்வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றன. ஆய்வாளர்கள் அவற்றை மாணவர் சார்ந்தவை, பெற்றோர் சார்ந்தவை, பாடசாலை சார்ந்தவை, சமூகம் சார்ந்தவை என வேறுபடுத்துகின்றனர்.

- கல்வியில் வழங்கப்படும் இலவச வாய்ப்புக்களைத் தாண்டி பெற்றோர் எதிர்நோக்கும் கல்விச் செலவீனங்கள்,
- வறுமை,
- வேலைவாய்ப்பு, ஆசிரியர்களின் கவர்ச்சியற்ற கற்பித்தல்,
- பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை,
- பௌதிக வளக் குறைப்பாடு, மாணவர்களைக் கவராத வகுப்பறைச் சூழல்,
- ஆசிரியர்-மாணவர் தொடர்பிலுள்ள குறைபாடுகள்,
- மாணவர் வசிக்கும் சமூக சூழலின் கலாசார சீரழிவு,
- போதைவஸ்துப் பாவனை,
- சகபாடிகளின் அழுத்தம்,
- பெற்றோரின் அக்கறையீனம்

என இடைவிலகலைத் தூண்டும் பல்வேறு காரணங்கள் உள்ளன. மாணவர்களின் போஷாக்கின்மை கூட இடைவிலகலைத் தூண்டுவதாக ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இடைவிலகலுக்கு மோசமான விளைவுகள் உள்ளன.

- தொழிற் தகைமையற்ற இளைஞர்கள் பெருகுகின்றனர்.
- வேலையற்றோர் வீதம் அதிகரிக்கின்றது.
- கீழ் வர்க்கக் குடும்பங்களின் வறுமை ஒரு தொடர் பிரச்சினையாக நீடிக்கின்றது.
- குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன.
- சமூக எதிர்ச் செயலாளர்கள் (Anti Social) அதிகரிக்கின்றனர்.
- தனக்கும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பாரமான தலைமுறை ஒன்று உருவாகின்றது.

போதைவஸ்துப் பாவனை அதிகரிப்பதற்கும் குற்றச் செயல்கள் கூடுவதற்கும் பொறுப்பாக இருப்பவர்கள் பெரும்பாலும் கல்வியறிவற்ற வர்கள். அவர்கள் பாடசாலைக் கல்வியை பூரணப்படுத்தாமல் இடைவிலகியவர்கள்.

அமெரிக்காவில் ஒரு மாணவனுக்கு அரசாங்கம் செய்யும் செலவை விட ஒரு சிறைக் கைதிக்கு மூன்று மடங்கு அதிகமான செலவினை செய்ய வேண்டியுள்ளது என்று அந்நாட்டின் அரசாங்க அறிக்கைகள் கூறுகின்றன. எனவே பாடசாலை இடைவிலகல் என்பது மிக சீரியஸான ஓர் பிரச்சினையாகும்.

ஒரு நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடிய ஆளுமைகள், மனித வளங்கள் அதன் மூலம் இழக்கப்படுகின்றது. தங்கி வாழ்வோரின் தொகை அதிகரிக்கின்றது. எனவே, எமது பிரதேசங்களில் இயங்கும் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகுவதற்கு முழுச் சமூகமும் பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. இதில் பெற்றோரின் பங்கு மிகவும் முக்கியமானது. ஆசிரியர்களுக்கும் இதில் பாரிய பொறுப்புள்ளது.

இந்தக் கூட்டுப் பொறுப்பை ஒன்றிணைந்து நிறைவேற்றுவதன் மூலமே கல்வித் துறை மீதான வீண் விரயங்களைத் தவிர்த்து, இடைவிலகலை நீக்கி, கற்ற ஓர் தலைமுறையை உருவாக்க முடியும். தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் எந்த வகையிலும் மாற்ற முடியாதஒரு மோசமான இளைஞர் அணியை நாம் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும்... (03 ஆம் பக்கத் தொடர்)

கொள்வதான பல எடுத்துக் காட்டுக்கள் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த பாக்கிர் மாக்கார் நினைவு தினப் பேருரையிலும் முன்வைக்கப்பட்டன. இந்த உரையும் பன்மைத்துவத்தை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது.

பேராதெனிய பூந்தோட்டம் பல் வகைப் பூக்களைக் கொண்டிருப்பது தான் அதற்குரிய தனி அழகு என்று வர்ணித்த அவர், ரோஜா அழகானதாக இருந்தாலும் ரோஜா மட்டுமே உள்ள பூந்தோட்டம் அழகானதாக இல்லை எனவும், பன்மைத்துவம் தான் இயற்கையானது எனவும் எடுத்துரைத்தார்.

வேற்றுமையில் ஒற்றுமை தான் வெற்றி பெற்ற நாடுகளின் இலட்சணம் என்பதை சுட்டிக் காட்டிய அவர், பல் கலாச்சாரங்களுக்கு மத்தியில் ஒற்றுமையைப் பேண முடியாமையினால் வீழ்ந்து போன ரோம, உஸ்மானிய சாம்ராஜ்யங்களையும், சிரியா, ஈராக் போன்ற நாடுகளையும் உதாரணமாக எடுத்துக் காட்டினார். பல்கலாசாரத்தை சமாதானத்துக்கான அடிப்படையாக அமைக்கின்றபோது அது நான்கு கட்டங்களில் கட்டியெழுப்பப்பட வேண்டும் என அவர் பட்டியல்படுத்தினார்.

முதலில் எல்லா கிராமங்களும் அயலவர்களும் இன மத வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைய வேண்டும். அல்லாத போது வெளியாரின் தலையீடு தவிர்க்க முடியாததாகிவிடும். அண்டை வீட்டாரை ஒன்றுபடுத்தாமல் தேசிய ஒற்றுமை ஒருநாளும் சாத்தியமாகப் போவதில்லை.

இரண்டாவது தேசிய அளவிலான பன்மைத்துவம். எல்லா இனங்கள், மதங்களினதும் சமவுரிமையைப் பேணும் விதமாகவும், இன மத பாரபட்சம் இல்லாததாகவும் அரசாங்கத்தின் தேசியக் கொள்கை அமைய வேண்டும். அனைத்துப் பிரஜைகளுக்கும் சமமான அரசியல், பொருளாதார, கலாச்சார உரிமைகள் வழங்கப்படுவதோடு செல்வப் பங்கீட்டிலும் சமஅளவு பேணப்பட வேண்டும்.

மூன்றாவதாக அயல்நாடுகளிலுள்ள பிரிவினைச் சக்திகள் உள்நாட்டின் பன்மைத்துவத்தில் ஆதிக்கம் செலுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் சமனாகப் பார்க்கப்பட வேண்டும். பொருளாதார பலமோ, இராணுவ பலமோ மேலாண்மைக்கான அடையாளமாக இருக்கக் கூடாது.

இறுதியாக உலக அளவிலும் நாடுகளுக்கிடையே பாரபட்சம் இருக்கக் கூடாது. ஐந்து நாடுகளின் வீட்டோ வலுவால் 200க்கு மேற்பட்ட நாடுகளின் நலன் தீர்மானிக்கப்படுவது அநீதியாகும் என சமாதானத்தை கொண்டு வருவதில் பன்மைத்துவத்தின் படிமுறைகளை பேராசிரியர் விளக்கினார்.

மதச்சார்பின்மைக் கோட்பாடுகளைப் பின்பற்றப் போய் உஸ்மானிய சாம்ராஜ்யத்தையே சீர்குலைந்து போகச் செய்த துருக்கி நாட்டில் இருந்து வருகை தந்த இன்றைய துருக்கியின் முன்னாள் பிரதமர், இஸ்லாமிய நாடொன்றின் பிரதிநிதியாக முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியிலும் பிரசன்னமாகிப் பிரசங்கம் செய்தது நம்பிக்கை தரும் மாற்றமாக அமைந்திருந்தது.

இலங்கை முஸ்லிம் கல்விமான்களால் மண்டபம் நிறைந்திருந்த ஜாமிஆ நளீமியா கலாபீடத்தில் நிகழ்த்திய உரையிலும் இந்தப் பண்புகள் தொனித்ததை அவதானிக்க முடிந்தது. 'சமூக உருவாக்கத்தில் முஸ்லிம் புத்திஜீவிகளின் வகிபாகம்' என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரையில் இலங்கை முஸ்லிம்கள் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டிய ஆளுமையாக நளீம் ஹாஜியாரை அடையாளப்படுத்தினார். இலங்கை முஸ்லிம்கள் உலகளவில் பங்களிப்புச் செய்வதற்கான வழிமுறைகளையும், பன்மைத்துவத்தைப் பேணுவதில் முஸ்லிம்களின் வகிபாகத்தையும் அவர் எடுத்துரைத்தார்.



வெற்றிகரமாகச் செயற்பட்டு வரும் முஸ்லிம் சமூகம் அல்லது சிறுபான்மை தொடர்பிலான கலந்துரையாடல்களில் நான் எப்போதும் இலங்கை மற்றும் தென்னாபிரிக்க முஸ்லிம்களையே அடையாளப்படுத்துகிறேன். நீங்கள் சிறுபான்மையினர் என்ற எண்ணத்தை கைவிட வேண்டும். இலங்கை முஸ்லிம் சமூகமும், இளைஞர்களும், தலைவர்களும் எவ்வித வெளிநாட்டுத் தலையீடுகளும் இன்றி அடைந்துள்ள அடைவுகளைக் கண்டு நான் வியந்து போனேன். கடந்த 1100 வருடங்களாக நீங்கள் தனித்துவத்தைப் பாதுகாத்து வாழ்கிறீர்கள். நூற்றாண்டுகள் கடந்து போனாலும் கொழும்பு மற்றும் ஏனைய பிரதேச முஸ்லிம்களின் தனித்துவம் மாறவில்லை. மறுமை நாள் வரை அது மாறாது. மறுமை நாள்வரை நீங்கள் இந்தப் பிரதேசத்தின் பிரதிநிதியாக இருப்பீர்கள் என்று அவர் அங்கு குழுமியிருந்த முஸ்லிம்களுக்கு நம்பிக்கை ஊட்டினார்.

இங்கு அவர் முஸ்லிம் சமூகம், குறிப்பாக முஸ்லிம் புத்திஜீவிகள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஐந்து விடயங்களைச் சுட்டிக் காட்டினார். முதலாவதாக முஸ்லிம்களின் தனித்துவத்தையும், கலாசாரத்தையும் பாதுகாத்தல். மரபுவழி வந்த விடயங்கள் கடத்தப்படாமல் புதிய தலைமுறையினரை உருவாக்குவதில் பயனில்லை.

இரண்டாவது இலங்கைச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்களின் வகிபாகம். நாட்டை வளப்படுத்துவதில் முஸ்லிம்கள் பங்களிப்புச் செலுத்த வேண்டும். நளீமியா பட்டதாரிகள் மூலம் முழு இலங்கையும் பயனடைய வேண்டும். இலங்கையின் ஏனைய சமூகங்கள் இந்தப் பட்டதாரிகளின் ஆளுமையைப் பாராட்டும் நிலை உருவாக வேண்டும். நளீமியாவின் பட்டதாரி நோபல் பரிசு வெல்பவராக உருவாக வேண்டும். அவர் இலங்கை முஸ்லிமாக நோக்கப்பட வேண்டும். முஸ்லிம்களின் அடையாளமும் இலங்கையர் என்ற அடையாளமும் இரு வேறாகக் காட்டப்படக் கூடாது. முஸ்லிம்கள் இலங்கைச் சமூகத்தின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். முஸ்லிம் புத்திஜீவிகள் முஸ்லிமாக இருப்பதைக் கொண்டு பெருமையடைவதைப் போன்றே இலங்கையராக இருப்பதைக் கொண்டும் பெருமைப்பட வேண்டும். இன மத ரீதியான முரண்பாடுகளுக்கு இதுவே பதிலாக அமையும்.

மூன்றாவதாக பிராந்திய விடயங்களில் கவனம் செலுத்துதல். பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், சீன முஸ்லிம்களும் ஒரே வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவற்றை எதிர்கொள்வதற்கான கூட்டு வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும்.

நான்காவதாக உலகளாகிய உறவுகளை சீர்படுத்தல். இஸ்லாம் உலகளாவிய மார்க்கம். அது எந்த நாட்டுக்கும் சொந்தமானதல்ல. இறுதியாக தைரியமாகவும் தன்னம்பிக்கையுடனும் இருங்கள். முஸ்லிம் என்ற தனித்துவத்துடன் இலங்கையர் என்ற அடையாளத்துடன் பயணியுங்கள். நீங்கள் தனித்தவர்கள் அல்ல. 1.8 பில்லியன் முஸ்லிம்கள் உங்களோடு இருக்கிறார்கள் என்று பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் தனது உரையை நிறைவு செய்தார்.

வெறுமனே மத போதனை நடத்துபவராக அல்லாமல் நாட்டுக்கு விஜயம் செய்து, உலகுக்கான வழிகாட்டலை இலங்கைச் சமூகத்துக்கு முன்னால் எடுத்துரைப்பதில் பேராசிரியர் அஹமத் தாவூத் ஒக்லு வெற்றிகண்டிருக்கிறார். இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் நம்பிக்கையையும் இலங்கைச் சமூகத்துக்கு மத்தியில் ஒருமைப்பாட்டுக்கான வழிகளையும் அவர் திறந்து காட்டியிருக்கிறார். நாட்டுக்குப் பங்களித்த ஒருவரை ஞாபகப்படுத்துவதற்கு இப்படியான உலமாக்களை (அறிஞர்களை) அழைத்து வந்து சமூகத்தை விழிப்படையச் செய்த தேசிய ஐக்கியத்துக்கான பாக்கிர் மாக்கார் நிலையம், இந்த வகையில் சமூகத்துக்கு முன்னுதாரணமாகச் செயற்பட்டிருக்கிறது. அதனை வழிநடத்திச் செல்லும் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், அஸாம் பாக்கிர் மாக்கார் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கு இதற்காக சமூகம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது.

நோபல் பரிசு வென்ற தவக்குல் கர்மான் ஏற்றிவிட்டுச் சென்ற குத்துவிளக்கே இன்னும் எரிந்து கொண்டிருக்கின்ற நிலையில், நளீம் ஹாஜியாரின் அடக்கஸ்தலத்தில் பேராசிரியர் கேட்ட துஆவுக்கு ஆமீன் சொல்லிக் கொண்டிருக்காமல் கிடைத்த வழிகாட்டல்களை வைத்து தேசத் தலைவர் பாக்கிர் மாக்காருடைய சிந்தனைகளை சமூகம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது தான் இந்த ஏற்பாடுகளுக்குச் செய்கின்ற கைமாறாக இருக்கும். சமூகமாக ஒன்றிணைந்து துருக்கித் தொப்பிப் போராட்டத்தை வென்றெடுத்தது போல துருக்கியின் முன்னாள் பிரதமர் முன்வைத்த போதனைகளை ஏற்று சாதனை படைக்க இலங்கை முஸ்லிம் சமூகம் ஒன்றிணைந்து தயாராக வேண்டும்.

## முஸ்லிம்களின்... (07 ஆம் பக்கத் தொடர்)



இயக்க ரீதியான பிளவுகளை நீக்கி ஒரணிப்படுத்த வேண்டும். எந்த விடயத்திலும் உணர்ச்சிவயப்படாமல் நீண்ட கால திடட்டங்களை உருவாக்கிச் செயற்பட வேண்டும்.

அந்தவகையில் சமூகத்தின் கல்வி நிலை, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். சகல கிராமங்களிலும் அந்தந்த கலாசாரத்திற்கமைய ஆண்களின் கல்வியை ஊக்குவிக்க வேண்டும். பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் மனப்பாங்கை மாற்றி விட வேண்டும். மாணவர்களுடன் அனுசரித்துச் செல்லும் ஆசிரியைகள் உருவாக வேண்டும். சிங்கள மொழியில் கற்பிக்கக்கூடிய முஸ்லிம் கலாசார பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும்.

## அரசியல்வாதிகளை... (04ம் பக்கத் தொடர்)

தற்பொழுது ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தில் ஜனாதிபதியின் தீர்மானத்தையும் மீறி ரணில் கைச்சாத்திட்டுள்ளார். மிஸ்ட க்ளீன் உடல் முழுவதிலும் அழுக்கை பூசிக்கொண்டுள்ளார். அடுத்து மலிக், சாகல, திலக் மாரபன போன்றோரின் செயல்களும் அம்பலமாகும் காலம் வெகுதொலைவில் இல்லை. தற்பொழுது ஹரின் பிரணாந்து மீதும் சேதமடைந்த பொருட்களுக்கான டெண்டர் மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகிறது.

1977 ஆட்சி மாற்றத்திற்கு 40 வருடங்கள் என்பதாக நல்லாட்சி அரசாங்கம் கொண்டாடி வருகின்றது. இந்நாட்டை அழிப்பதற்கு வழிகோலிய அரசியலமைப்பை கொண்டு வந்தது பற்றியோ அல்லது நாட்டிற்கு பாதிப்பான பொருளாதார சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டமையினால் நாட்டிற்கு ஏற்பட்ட அழிவுகள் பற்றியோ யாருக்கும் நினைவில்லை. இவ்வனைத்து விடயங்களையும் மறந்துவிடுகின்ற எமது அரசியல் தலைவர்கள் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி மஹிந்தவுக்கு என்ன நடந்தது என்பதையும் மறந்துள்ளார்கள். மக்கள் அன்றைய தினம் இந்நாட்டில் உருவான மிகப்பெரும் அரசியல், பொருளாதார, சமூக அதிகாரத்தை கொண்ட அரசியல் தலைவர் ஒருவரை தோற்கடித்தார்கள்.

திடீரென காளான் பூப்பதைப் போன்று மேலெழுந்த மைத்திரிபாலவை ஜனாதிபதியாக்கும் நோக்கில் மக்கள் அத்தீர்மானத்தை எடுக்கவில்லை. மஹிந்த முன்னெடுத்த ஆட்சியில் அதிருப்தியும் கோபமும் கொண்டதனாலேயே அவர்கள் இத்தீர்மானத்தை எடுத்திருந்தார்கள். இந்நாட்டில் இடம்பெற்று வந்த பல்வேறு தவறுகளை சரிப்படுத்தும் தேவை மக்களிடம் இருந்தது.

இந்நிகழ்வு, எந்தவொரு ஜனாதிபதிக்கும் ஆட்சியாளருக்கும் கற்றுக் கொள்ளவும் நினைவில் வைத்துக்கொள்ளவும் சிறந்த பாடமாக உள்ளது. இவர்கள் எதை மறந்தாலும் மக்கள் பலத்தை மறந்து, தாம் பெரும் அரசர்கள் என நினைத்துக் கொண்டிருப்பவர்களை மக்கள் மஹிந்தவைப் போன்றே கவனிப்பார்கள். அவ்வாறு ஜனநாயகபூர்வமாக முடியாமல் போகின்ற போது லிபியாவில் கடாபிக்கும் பிலிபீனில் மாகோசுக்கும் ஏற்பட்ட நிலையே உருவாகும்.

## சீன வித்தை... (03 ஆம் பக்கத் தொடர்)

கொண்டுள்ளது. இவற்றைப் பயன்படுத்தி இந்து சமுத்திர கரையோரத்துடன் இணைந்ததாக ஆபிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் பலவற்றில் அமெ ரிக்கா இராணுவ செயற்பாடுகளையும் கொண்டுள்ளது.

புதிதாக வளர்ச்சி கண்டு வரும் வொஷிங்டன், டெல்அவிவ், புதுடில்லி அச்சிலின் கீழ் இந்து சமுத்திரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பொறுப்பை அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கியுள்ளது. இது சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும். சீனா சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் சக்திகளோடு இந்தியா தனது உறவுகளை வலுப்படுத்துகின்றது. இது பாகிஸ்தானும் சீனாவும் தமக்கிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த தூண்டுகின்றது. குவாதரை மையமாகக் கொண்ட பாகிஸ்தான் சீனா மூலோபாய கடற்படை பங்குடைமை இந்து சமுத்திரத்தை ஆதிக்கம் செய்யும் அமெரிக்க இந்திய எதிர்ப்பார்ப்பை பாதிக்கச் செய்யும்.

### ஐரோப்பா

இந்து சமுத்திரத்தில் பொருளாதார மற்றும் பாதுகாப்பு ரீதியான பாரிய மற்றும் உறுதியான நலன்கள் ஐரோப்பாவுக்கும் உள்ளது. இந்து சமுத்திரத்தின் கடல் படுகையில் பெறுமதிமிக்க கனிய வளங்களைத் தேடி ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இது எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் தீவிரமடையலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக ஐரோப்பிய நாடுகளின் மீன்பிடி நலன்களும் இங்கு பிரதானமானது. இந்து சமுத்திரத்தில் அவர்கள் 48 வீதமான மீன்களை வேட்டையாடுவதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மத்திய கிழக்கு

இங்கு புதைந்துள்ள பாரிய வளங்களுக்கு அப்பால் அமெரிக்க ஐரோப்பிய மற்றும் இஸ்ரேலிய சக்திகளால் தூண்டி விடப்பட்டுள்ள பொருளாதார மற்றும் இராணுவ கொந்தளிப்பு உள்ள நிலையில் மேலைத்தேய சக்திகளால் இந்த நாடுகளில் ஆட்சியில் அமர்த்தப்பட்டுள்ளவர்கள் தமது எஜமானர்களுக்கு மிகவும் கீழ்படிவாக சேவகம் புரிந்து வருகின்றனர்.

சல்மான் றாபி ஷேக் என்ற ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ள படி, இந்து சமுத்திரம் அரசியல் மற்றும் பொருளாதார மூலோபாயம் மிக்க செயற்பாடுகளைக் கொண்ட பிராந்தியமாக மாறியுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் பிரதான சக்திகளின் அணு ஆயுத மற்றும் பாரம் பரிய யுத்தக் கப்பல்களின் பிரசன்னமும் அதிகரித்துள்ளது. இந்தப் பிராந்தியத்தின் முக்கிய அமைவிடமே இதற்கு காரணம்.

இந்து சமுத்திர நீர் பரப்பில் இந்தியாவும் சீனாவும் மிகவும் சுறுசுறுப்பான தோர் அதிகாரப் போட்டியில் குதிக்கவுள்ளமை தவிர்க்க முடியாததாகியுள்ளது. அவர்களுடைய பொருளாதார நலன்கள் மற்றும் வர்த்தகப் பங்காளி நாடுகளை நோக்குகின்றபோது இது புலப்படுகின்றது. ஆனால் எந்த ஒரு நாடும் தனித்து நின்று இந்தப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை நிலைநிறுத்த முடியாது என்பது மட்டும் மிகத் தெளிவாகப் புலனாகின்றது என இன்னொரு ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இங்கு பல்வேறு சக்திகள் செயற்படும் ஒரு நிலைமை தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. ஒவ்வொரு நாடும் அப்போது தான் அவற்றின் தனிப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியும். இந்தப் பின்னணிகளில் தான் அம்பாந்தோட்டையில் சீனாவின் பிரசன்னம் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழான துறைமுகம் மற்றும் விமான நிலையம் என்பனவற்றையும் நோக்க வேண்டியுள்ளது.

## சதிப் புரட்சி... (12ம் பக்கத் தொடர்)

ஒரு பத்வாவை ஊடகங்கள் வாயிலாக வழங்கும் போது அது ஏற்படுத்தும் தாக்கங்கள், பின்விளைவுகள் குறித்தும் கவனம் இருக்க வேண்டும்.

ஆக்கிரமிப்பு செய்த ராணுவத் தலைவனுக்கு கட்டுப்படுங்கள் என்ற மொக்கத்தனமான பத்தவா நிச்சயமாக ராணுவ ஆட்சி முறைமையின் இருப்பை தூண்டவதோடு அதனைப் பலப்படுத்தும். மேலும் அது அடிமைத்துவ வாழ்வை மீண்டும் கொண்டுவரும். சமூகம் சகல துறைகளிலும் பின்னடைவுக்கு உட்படும். மக்களின் சொத்துக்கள் சூறையாடப்படும். ஏன் என்று கேட்க ஆளிருக்காது. மொத்தத்தில் இழிவான ஒரு வாழ்கை முறைக்கு மக்கள் பழக்கப்படுவர்.

சதிப் புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்த அநீதியான ஆட்சியாளன் ஒரு போதும் அந்த ஆட்சியை நீதியான ஒருவனுக்கு திரும்ப ஒப்படைப்பதில்லை. எனவே இஸ்லாமிய பாரம்பரிய சிந்தனைக்கு முராண இது போன்ற பத்வாக்கள் இஸ்லாத்தின் இருப்புக்கே ஆபத்தானதாக அமைகிறது. அநியாயக்கரா ஆட்சியாளனை ஆதரிக்கும் இத்தகைய பத்வாக்களின் பாதக விளைவுகளை கவனியாது கருத்துச் சொல்வது ஒட்டு மொத்த இஸ்லாத்தின் இருப்புக்கே ஆபத்தானது புரிந்து கொள்ள வேண்டும்.

நீதியான சட்டபூர்வமான ஆட்சியாளனுக்கு எதிராக ஆக்கிரமிப்பு செய்து ஆட்சிக்கு வந்த ஆட்சியாளன் அநீதிக்கு உடந்தையாக இருப்பதுடன், இஸ்லாத்திற்கு எதிராக செயற்படும் போது அவனுக்கு கட்டுப்படுமாறு கூறுவது மனித அறிவுக்கே இழுக்கானது. இப்படியான அபத்தங்களை எந்த ஒரு இஸ்லாமிய [illegible] கூறியது கிடையாது.

சட்டபூர்வமான முறையில் மக்கள் விருப்பத்துடன் தலைமைப் பொறுப்புக்கு வந்த நீதியான அட்சிக்கு எதிரிகாக கிளர்ச்சி செய்பவன் கொலை செய்யப்படவேண்டும் என்பதே இஸ்லாமிய சட்டவியல் கூறும் கருத்தாகும்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுள் தண்டனை

ஒருவரை நீண்ட நாட்களாக காணவில்லை. அவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கருதிய பொலீஸார், சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர். வழக்கு விசாரணைக்கு வந்தது.

குற்றம் சாட்டப்பட்டவரின் வக்கீல் எழுந்து, ''நீதிபதி அவர்களே, இவர் யாரைக் கொலை செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டதோ, அவரே இன்னும் ஐந்து நிமிடத்தில் இதே நீதிமன்றத்தின் கதவு வழியே உள்ளே வரப் போகிறார். நீங்கள் அதைப் பார்த்த பின்பு, இவர் குற்றமற்றவர் என்பதை உணர்வீர்கள்'' என்று கூறி அமர்ந்துவிட்டார். நீதிபதி உட்பட எல்லோரும் நீதிமன்ற நுழைவாயிலைப் பார்த்துக் கொண்டிருந் தார்கள். 5 நிமிடம், 10 நிமிடம் கழிந்தது. ஒருவரும் வரவேயில்லை. இப்போது வழக்கறிஞர் எழுந்தார்.

''நீதிபதி அவர்களே, நீங்கள் உட்பட யாருமே காணாமல் போனவர், கொலைதான் செய்யப்பட்டு விட்டார் என்பதை முழுமையாக நம்பவில்லை. அதனால்தான் எல்லோரும் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தீர்கள். எனவே, உங்களுக்கு இருக்கும் சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்து, அவரை விடுதலை செய்ய வேண்டும்'' என்று கூறிவிட்டு கம்பீரமாக அமர்ந்தார்.

பிற்பகலில் நீதிபதி தீர்ப்பை வாசித்தார். குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை அளித்தார். வக்கீல் எழுந்து, ''எப்படி நீதிபதி அவர்களே,?'' என்று கேட்டார்.

அதற்கு நீதிபதி சொன்னார், ''அந்த பத்து நிமிடமும் நான் வாசலைப் பார்த்தது உண்மைதான். ஆனால், ஒரு தடவை கூட குற்றம் சாட்டப்பட்டவர் வாசலைப் பார்க்கவில்லை.''

## படிப்பிற்கும் வேலைக்கும்



படிப்பு என்பது நமது அறிவை வளர்த்துப் கொள்வதற்குத் தான். 'கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு' என்ற பழமொழி உண்டு. படித்த படிப்பிற்கும் அறிவிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. தன்னை மேம்படுத்திக் கொள்ளப் படிப் பறிவு உதவி செய்கின்றதே தவிர, நாம் படிக்கும் படிப்பிற்கும் வேலைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

நமது கல்வி முறையே மிகவும் வித்தியாசமானது. ஆங்கி லேயன் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதையே நாம் படிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக் கின்றோம். நம் கல்வித் துறையில் முறைகேடுகளும் குறைபாடுகளும் இருக்கலாம். ஆனால், குறிக்கோளற்ற மாணவர் சமுதாயம் இருக்கும் வரை ஒரு மாற்றமும் ஏற்படாது. விழிப்புணர்ச்சி இயல்பில் வரவேண்டும். கற்ற கல்வி எதுவாயினும் செய்யும் தொழிலே வாழ்க்கை என்று எண்ணும் எண்ணம் வளர வேண்டும்

இளைஞர்களே திறந்த மனதுடன் நல்ல எண்ணங்களைப் பயிர் செய்யுங்கள். அயராத உழைப்பு, சலிக்காத மனம் என்னும் மந்திரத்திற்கு உங்களை ஆட்படுத்திக் கொள்ளுங்கள். 'உடல்' உழைப்பிற்கு. 'படிப்பு' நமது அறிவுத் தாகத்திற்கு என்ப தைப் புரிந்து செயல்பட்டால் இந்த உலகமே உங்கள் கைகளில்தான்.

நம்மைப் போல மற்றவர்களை மேம்படுத்த, உருவாக்க, வேலை வாய்ப்பை ஏற்படுத்த சுயதொழிலைத் தேர்ந்தெடுங்கள். நாடும் வளரும் நாமும் வளரலாம்.

## நினைவாற்றலை வளர்ப்பது எப்படி?




தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

நினைவாற்றல் என்பது ஒரு திறமை. சரியில்லாத நினை வாற்றல் என்ற ஒன்று இல்லை. தக்க பயிற்சிகளின் மூலம் யாரும் நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள முடியும்.

நினைவாற்றல் நன்றாக இருப்பதற்கு ஆறு முக் கிய கோட் பாடுகள் காரணமாக இருக்கின்றன. அவை;

1. தன்னம்பிக்கை
2. ஆர்வம்
3. செயல் ஊக்கம்
4. விழிப்புணர்வு
5. புரிந்துகொள்ளல்
6. உடல் நலம்.

**1. தன்னம்பிக்கை (Self Confidence)**

''என்னால் செய்திகளை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள முடியும். எனது மூளைத்திறன் நன்றாக இருக்கி றது. எனக்கு மன ஆற்றல் நன்றாக இருக்கிறது'' என்ற நம்பிக்கை முதலில் வேண்டும். ''நான் எப்படித்தான் இவற்றையெல்லாம் படித்து நினைவில் வைக்கப் போகிறேனோ, எனக்கு ஞாபக சக்தியே சற்று குறைவாகத்தான் இருக் கிறது. அடிக்கடி எனக்கு மறந்து போய்விடுகிறது'' - என்று தங்களைப் பற்றியே தாங்கள் கொள்கின்ற அவ நம்பிக்கையை விட வேண்டும்.

''நினைவாற்றல்'' என்பது மூளையின் ஒரு திறமை. அதனை பயன்படுத்தப் பயன்படுத்த, பயிற்சியாலும் முயற்சி யாலும் அந்தத் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும். இந்த உண்மையை உணர்ந்து ஏற்றுக்கொண்டு, நினைவாற் றலை வளர்க்க முடியும் என்ற நம்பிக் கையுடன் செயல்பட்டால் அற்புத நினை வாற்றல் பெறமுடியும்.

**2. ஆர்வம் (Interest)**

ஆர்வம் காட்டுகிற விடயங்கள் நினை வில் நன்றாகப் பதியும். இயற்கையாக ஆர்வம் இல்லாவிட்டால் கூட ஆர் வத்தை ஏற்படுத்திக் கொண்டு கவனித் தால், பதியவைத்தால் நினைவில் நிற்கும்.

**3. செயல் ஊக்கம் (Motivation)**

இந்தச் செய்திகளை ஏன் நான் தெரிந்துகொள்ள வேண்டும். எனக்கு எவ்வகையில் இது பயன்படும் என்று உங்களோடு இணைத்து தெளிவுபடுத் திக் கொண்டால் செய்திகள் நன்றாகப் பதியும்.

உதாரணத்திற்கு ''ஹோட்டல் ரெசி டென்ஸிக்கு நாளை காலை 4 மணிக்கு நீங்கள் வந்தால் உங்களுக்கு 5 லட்ச ரூபாய் கொடுக்கப்படும்'' என்று ஒருவர் உங்களிடம் சொன்னால் நீங்கள் மறந்து விடுவீர்களா?

தேவையை, அவசியத்தை நன்றாக உணர்ந்த விடயங்கள் நன்றாகப் பதி கின்றன.

**4. விழிப்புணர்வு (Awareness)**

மனம் விழிப்பு நிலையில் இருக்கும் பொழுது கவனமும், ஒருமைப்பாடும் மிகச் சிறந்து இருக்கும். விழிப்புணர்வு அதிகரிக்க இறை வழிபாடுகள் துணை புரியும்.

**5. புரிந்துகொள்ளல் (Understanding)**

புரிந்து கொண்ட விடயங்கள் நினை வில் நன்றாக இருக்கின்றன. புரியா விட்டால் - தெரியாவிட்டால் கூச்சம், அச்சம், தயக்கம் இல்லாமல் ஏன்? எதற்கு? எப்படி? எவ்வாறு? எங்கு? யார்? என்று கேள்விகளைக் கேட்டு புரிந்து கொள்ளுங்கள்.

**6. உடல் ஆரோக்கியம் (Health)**

உடல் ஆரோக்கியமாக இருக்கும் போது நினைவாற்றல் நன்றாக இருக் கும். ஒருவர் மிகவும் நோய்வாய்ப்பட்டு தளர்ந்திருக்கும் நேரத்தில் செய்திகளை நினைவில் வைப்பதே சிரமமாக இருக் கும். ஆரோக்கியமான உடலில் மூளை க்கு நிறைய இரத்த ஓட்டம், காற் றோட்டம் சென்று மூளை சுறுசுறுப்பு டன் இயங்கும். தக்க உணவு, சரியான உறக்கம், முறையான பயிற்சிகள் மூலம் உடலை நன்கு பேணிப் பாதுகாத்தால் நினைவாற்றல் நன்றாக இருக்கும்

## "இலையில் தங்கிய துளிகள்"

### நூலுக்கு எழுத்தாளர் அனார் வழங்கிய அணிந்துரை



நினைவு, சிந்தனை என்பதன் குறி யீடாக 'போன்ஸாய்' என்ற பூச்செடியை பிரஞ்சு மரபில் கூறுகின்றார்கள். நினைவு களுக்கும் சிந்தனைக்கும் ஒரு பூச்செடியை குறியீடாக்கிப் பார்ப்பதன் அந்த மரபு எவ்வளவு துல்லியமும் மென்மையுமாக விருக்கும் என்றொரு வியப்புப் தோன்றி யது. ஏன் நம்முடைய நினைவுக்கும் சிந்தனைக்கும் இவ்விதமான ஒரு வாழ்வியல் குறியீட்டை கொண்டிருக்க வில்லையே என்ற சிறு வருத்தமும் ஏற்பட்டது. ஆனால் இறைவன் அவனது இயற்கை படைப்பாற்றலை குறியீட்டுச் சிந்தனைகளாக, அதன் அத்தாட்சிகளாக நம்முன் வைத்துள்ளான். அவ்வளவு வியா பகமானது அந்த ஆற்றல். மேலும் மனித இனமே இறைவனின் எல்லையற்ற பேரறிவின், சிந்தனையின் ஓர் வடிவமாகும். ஏவரும் நிராகரிக்க முடியாததோர் பேருண்மையாகும்.

'இலையில் தங்கிய துளிகள்' எனும் உரைநடைக் கட்டுரைத் தொகுப்பின் மூலம் இன்ஷாப் இந்த வியாபித்தல்களை மனித நினைவுகளோடும் சிந்தனை களோடும் அவரது ஆன்மாவின் பார்வை களால் மொழியால் அவ்வப்போது சமூகத்திடம் பகிர்ந்து வந்திருக்கிறார். தான் சந்தித்த அனுபவங்களை விபரிக் கின்ற அவருடைய மொழி, வாசிக்கின்ற அனைவரையும் ஊடுருவக் கூடியது.

**''ஒரு ரயிலைத் தவறவிடும்போது குற்றவுணர்ச்சி வந்து விடுகிறது. அவ்வளவு வேதனையை அது ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு நாளும் ரயிலைத் தவறவிட்டு தலையில் கைவைத்து மூச்சு வாங்குபவர்கள் நிறையப் பேர் இருக்கின்றனர்.''**

**''நாடுகளின் ஊடாகவும் நாகரிகங்களின் ஊடாகவும் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. மனித வாழ்வே ஒரு பயணம்தான் என்பதின் அன்றாட சாட்சியாக பூமிப் பரப்பின் முதுகில் ரயில் ஊர்ந்து கொண்டே இருக்கின்றது.''**
**(காற்றில் கையசைத்து)**

நாம் கவனிக்கத் தவறிய ஒரு முதியவரை, மலையை, பாடலை, கவிதையை, பிரிவை, மரணத்தை, இயற்கையை, இலக்கியத்தை என தன்னில் தாக்கம் செலுத்திய ஏதோ ஒரு விடயத்தை நினைவூட்டுகின்றார். அதனூடாக நம்மை திரும்பிப் பார்க்க வைக்கின்றார். மேலும் அதன் வழியாக வாழ்வின் மூடப்பட்ட ஒரு ஜன்னலை அவரது எழுத்துக்கள் திறந்துவிடுகின்றன. உறைந்து போயுள்ள மென் உணர்வுகளுக்கு வண்ணங்களை தடவுகிறார். நம்மை அசையும் உயிரோட்ட முள்ள நதியில் மிதக்கும்படி செய்கிறார். அவரது அவதானிப்புகளும் அறம் சார்ந்தி ருப்பவை. இன்ஷாபின் பேசுபொருள் மிக விரிவான நோக்கங்களைக் கொண்டிருக் கிறது.மென்மையான தொனி என்பது அவரது இயல்பும் கூட தன் சூழலை நேசித்து அளவற்ற கரிசனையுடன் எழுத்துக்களில் பதிக்கின்றார்.

அவரவருக்கான விதிக்கப்பட்ட சுமை கள், தாம் விரும்பி ஏற்றுக் கொண்ட சுமை கள் என நம் ஆடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பாரங்கள் எத்தனையோ வகையானது.

நம் ஆபரணங்களால் துன்பத்தின் வெடிப்புகள் தெரியாமல் அலங்கரித் தோம். உயர்தரமான மென் புன்னகை யால், தலையசைவால் எதிரே கடக்கும் யாரையும் எனக்கெந்த கஷ்டமும் இல்லையே என நம்ப வைக்க [illegible] செய்யும் பாவனைகள் பல...

வாழ்க்கை என்பது எப்போதுமே நேரான கோட்டில் தங்கு தடையற்று பயணிப்பதல்ல. அதற்கான சவால்கள் என்பது ஆன்மீக ரீதியாகவும் பௌதிக ரீதியாகவும் ஒவ்வொருவரும் எதிர்கொள் கின்றோம். அனுபவங்கள், அடைவுகள் என நன்மை- தீமை, உயர்வு- தாழ்வு என அனைத்தும் இரண்டறக் கலந்திருப்பது. இரு நிலைகளுக்கிடையான போராட் டத்தை எதிர்கொள்கின்றவனாக மனிதன் இருக்கிறான். இங்கே எழுத்தாளனின் முக்கியமான பாத்திரம் அவன் ஒரு தீர்ப் பிடும் நீதிபதியாக இயங்க முடிவதில்லை. அதாவது தெரிந்தும் தெரியாமலும் தவறி ழைத்தவனுக்காக வாதிடுபவனாகவே பல சந்தர்ப்பங்களில் இருக்க முடியும்.

நம்மைச் சுற்றி இருப்பவர்களதும் நம்முடையதுமான அன்றாட வாழ்வு காயங்கள் அற்றதா... துரோகங்கள் அற்றதா... தவறுகள் எதுவுமில்லாமல் மனிதருடைய வாழ்க்கை என்பது கழுவித் துடைத்த கண்ணாடி போன்று பளிச்சென்று இருக்கிறதா... அதனுள் மறைவான நிழல்கள் இல்லையா யாரும் கண்டுணராத வெடிப்புகள் இல்லையா... ஆனால், நம்மில் அனேகர் உண்மைகளை எதிர்கொள்வதை விட பாவனைகளின் தோற்றப்பாடுகளுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றோம். ஆக நமது மறுபக்கம் என்பதை நாமே கண்டுணரத் தயங்குகின்ற வர்களாக இருக்கின்றோம்.

எனவே, அழகை, ஆனந்தங்களை, பரவசங்களை, வியப்பைக் காண்பதும் எழுதுவதும் ரசிப்பதும் மாத்திரம் ஒரு எழுத்தாளரின் தார்மீகப் பணியாக மாட்டாது. சமூகத்தின் உள்ளறண்களை அசைத்துப் பார்க்கும் விதம் எழுத்தாளன் செயற்பட வேண்டி நேர்கின்றது. தன்னை அர்ப்பணித்தல் என்பது அதுதான். [illegible] கருணைகளை அவன் எப்போதும் கைவிடா திருத்தல் வேண்டும். சமூகத்தை விழிப்புணர்வூட்டக் கூடிய கருத்துக்கள் இன்ஷாபின் கட்டுரைகளில் மென்மை யான அணுகுதலோடு முன்வைக்கப்படு கின்றன.

**''பரிசு எனும்போது தேனீர்க் கோப்பை, பீங்கான், கரண்டி என்பவற்றுக்கு அப்பால் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது''** என்றும்..

**''அடுத்தவனின் முதுகில் குத்துவதற்கே காத்திருக்கும் உலகில் அடுத்தவன் முதுகை தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கும் ஒரு வார்த்தைக்கு ஈடாக ஒரு பரிசை நாம் கண்டுகொள்ள முடியாது. கவலைகளால் நிரம்பி காலங் கடத்தும் ஒருவருக்கு மகிழ்ச்சியைப் பரிசளிக்க ஏன் எங்களால் முடிவதில்லை''** என்றொரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

மேலும் அவர் தனது எழுத்துக்களால், சிந்தனைகளால் ஆழச் செல்ல வேண்டும். ஒரு மரத்தின் வெளித்தோற்றத்தை விமர்சிப்பதை விடவும் தேவையானது அம்மரத்தின் ஆணிவேர் வரை பீடிக்கப் பட்டுள்ள் அதன் நோய்க் கூறுகளைப் பற்றியும் கவனம் எடுப்பதாகும்.

இயற்கையை கொண்டாடுதல் எனும் நிலையில் சிலதுளிகளை இந்நூலில் காணலாம்.

**''பூமியின் சமநிலை குலையாமல் ஆப்புகளாக அவை எப்படி ஆக்கப் பட்டுள்ளன? எப்போது அவை இத்தனை பெரிதாய் வளர்ந்தன? ஏன் இத்தனை மௌனத்துடன் இருக்கின்றன? நம் பள்ளத்தாக்குகளில் காவு கொண்ட உடல்களுக்கு என்னவானது? அதிசயப் பனிக்காற்று எங்கிருந்து உற்பத்தி யாகின்றது? மலைகளை குடைந்து எப்படி மனிதர்கள் வாழ்ந்தார்கள்? தேன் ஏன் மலைகளில் கூடு கட்டிக் கொள்கிறது? ஏன் அவை மேகத்தைப் போல நகர்வதில்லை? எல்லாக் கேள்விகளும் சிந்தனையின் அடர்ந்த காடுகளில் நம் கண்களை கட்டி விட்டுவிடுகின்றன.''**
**(மழையில் நனையும் மலை)**

ஜாமியா நளீமியாவில் இருந்து கல்வியை முடித்து வந்த பின்னர் தமிழ் இலக்கியம் சார்ந்தும் கலை சிற்றிதழ்கள் சார்ந்தும் செயற்படுவது என்பது மிக முக்கியமானது. அந்த வகையில் இன்ஷா பின் இந்த இலக்கிய ஆர்வம் நிச்சயம் அவருடைய ஆற்றல்களை வெளிப்படுத் தும் திறனாகவே காணப்படுகிறது.

ஒருவரது மென்னுணர்வுகள் எவ்வளவு தூரம் மற்றவைகளின் மீது கனிவு கொள்ள வும் உணர்வுகளை மதித்து பாதுகாக்கும் பொறுப்புணர்ச்சியோடு செயற்படத் தூண்டுகின்றன என்பதை இன்ஷாபின் பல கட்டுரைகள் நமக்கு உணர்த்துகின்றன.

*மழையில் நனையும் மலை*
*காற்றில் கையசைத்து*
*இன்னும் கொடுக்காத பரிசு*
*கொண்டாடாத வாழ்க்கை*
*பச்சை இலையின் கறுப்பு நிறம்.*

அவருடைய மொழியாலும் அனுபவத் தினாலும் இது போன்ற செறிவான கட்டுரைகள் தொகுப்பில் காணப்படுகின் றன. பிறப்பு மரணம் எனும் இரு கரை களிடையே இளமை, முதுமை ஆகிய பருவங்களின் மாயநதி அசைகின்றது. வசந்தங்களும் ரம்மியங்களும் அனலும் கோடையும் அந்தப் பயணத்தில் நிகழ்கின்றன.

இன்ஷாப் ஒரு கணம் வியப்பிலாழ்ந்த படியும் கேள்வி எழுப்பிய படியும் ஆதுரத் துடனும் தன் கலை மனதை சிதறவிட்டி ருக்கின்றார். மெய்யாகவே அருடைய சமூக அக்கறைதான் இந்த எழுத்துக்கள். ஒரு எழுத்தாளனின் ஆற்றல் மிக்க முன்னெடுப்பு மற்றும் சமூகப் பணியும் இவ்விதமானதே. ஆன்மாவின் கண்களால் உற்றுநோக்கும் விதம் இன்னும் பல உண்மைகள் பேசப்பட வேண்டியுள்ளன. இன்ஷாப் தன்னை புதுப்பித்துக் கொண்டு வருபவர். ஓடுகின்ற நதி போன்றவர். அவரது தார்மீகம் அவரது எழுத்துக்களில் சந்தேகமின்றிப் புலப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு



''விளையாட்டிலிருந்து ஊக்க மருந்து பாவனையை முற்றாகத் தடைசெய்ய வேண்டும். இல்லையென்றால் விளையாட்டுகள் முற்றாக அழிந்துவிடும்.''

-உசைன் போல்ட்-

## 18 வயதின் கீழ் இலங்கை தேசிய கால்பந்து அணியில் 12 முஸ்லிம் வீரர்கள்:



ஈரானின் ஷிராஸ் நகரில் நடைபெறவுள்ள 18 வயதுக்கு உட்பட்டோருக்கான 45 ஆவது ஆசிய பாடசாலைகள் கால்பந்து சம்பியன்ஷிப் போட்டிக்கான 22 வீரர்களைக் கொண்ட குழாம் இலங்கை பாடசாலைகள் கால்பந்து சம்மேளனத்தால் (SLSFA) தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் 8 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டித் தொடருக்கான வீரர்கள் தெரிவு கடந்த ஜூலை மாதம் இறுதிப் பாதியில் இடம்பெற்றது.

புத்தளம் கால்பந்து லீக்கின் செயலாளரும், புத்தளம் போல்டன் கால்பந்து அணியின் பயிற்றுவிப்பாளருமான முஹமட் அஸாத் இந்த 18 வயதுக்கு உட்பட்ட தேசிய அணிக்கு பயிற்சியாளராகச் செயற்படுவதோடு, உதவிப் பயிற்சியாளராக டி.எஸ் சமரதுங்க பணியாற்றவுள்ளார்.

தெரிவுசெய்யப்பட்டுள்ள வீரர்கள்

| பெயர் | பாடசாலை | நிலை |
|---|---|---|
| மொஹமட் அஸ்ராஜ் | கிண்ணியா மத்திய கல்லூரி | கோல்காப்பாளர் |
| முஹமட் முஸ்னி | அல் ஹிலால் கல்லூரி, நீர்கொழும்பு | பின்களம் |
| முஹமட் நிப்லான் | ஸாஹிரா கல்லூரி, கம்பளை | பின்களம் |
| அமான் பைசர் | ஹமீட் அல் ஹுஸைனி, கொழும்பு | மத்தியகளம் |
| ஆகிப் பைசல் | ஸாஹிரா கல்லூரி, மருதானை | மத்தியகளம் |
| முஹமட் மஸாஹிர் | பத்ரியா மத்திய கல்லூரி, மாவனல்லை | மத்தியகளம் |
| முஹமட் முஜாஹித் | ஸாஹிரா கல்லூரி, கம்பளை | மத்தியகளம் |
| யெஸ்மில ஷெஹான் | புனித பேதுரு கல்லூரி, கொழும்பு | மத்தியகளம் |
| ஷபீர் ரசுனியா | புனித பேதுரு கல்லூரி, கொழும்பு | முன்களம் |
| ரிப்கான் முஹமட் | அல் அக்ஸா கல்லூரி, கிண்ணியா | முன்களம் |
| முஹமட் ஜகீர் | ஸாஹிரா கல்லூரி, புத்தளம் | முன்களம் |
| பஸ்லூன் பாஹிம் | புனித அலோசியஸ் கல்லூரி, காலி | முன்களம் |

## தேசிய ரக்பி அணியில் இடம்பிடிப்பாரா வாஜித் பௌமி?



தற்பொழுது 20 வயதின் கீழ் பிரிவில் விளையாடி வரும் வாஜித் பௌமி இலங்கை ரக்பி தெரிவுக் குழுவினரால் அணிக்கு எழுவர் கொண்ட தேசிய ரக்பி அணிக்கான பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். ஆசிய செவன்ஸ் ரக்பி போட்டித் தொடர் எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி ஹொங்கொங்கில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையிலேயே தெரிவுக் குழுவினரால் இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இலங்கை 20 வயதின் கீழ் இளையோர் ரக்பி அணி கடந்த தினம் முடிவுற்ற 20 வயதின் கீழ் ஆசிய ரக்பி போட்டித் தொடரில் 2 ஆம் இடத்தை வெற்றி கொண்டிருந்ததோடு ஹொங்கொங் அணியுடனான போட்டியில் மாத்திரமே இவ்வணி தோல்வியைத் தழுவியிருந்தது. கடந்த வருடம் நடைபெற்ற 20 வயதின் கீழ் ஆசிய ரக்பி தொடரில் இலங்கை அணி முதலிடம் பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது. கடந்த வருடப் போட்டியிலும் பிரகாசித்த வாஜித் பௌமி தேர்வாளர்களின் கவனத்தை ஈர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

20 வயதின் கீழ் 15 அங்கத்தவர்களை கொண்ட ரக்பி குழாமில் இடம்பிடித்திருந்த பொலிஸ் ரக்பி விளையாட்டுக் கழகத்திற்கு விளையாடி வரும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி மாணவனான வாஜித் பௌமி, ஆசிய செவன்ஸ் ரக்பி போட்டியில் கலந்து கொள்வதற்கான பயிற்சியில் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றார். அவர், இறுதி 12 பேர் கொண்ட அணியில் இடம் பிடிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

## போல்டின் முன்மாதிரி



உலகில் உருவான தலைசிறந்த குறுந்தூர ஓட்ட வீரரான உசைன் போல்ட் பங்கு பற்றிய இறுதிச் சர்வதேச 100 மீற்றர் ஓட்டப் போட்டி கடந்த 05 ஆம் திகதி முடிவடைந்தது. இவர் இப்போட்டியில் வெற்றி பெறுவதைப் பார்ப்பதற்கு லட்சக் கணக்கிலான விளையாட்டு இரகசிகர்கள் வருகை தந்திருந்தார்கள். எனினும் அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்து விட்டு அமெரிக்காவின் ஜஸ்டின் கெட்லின் உசைன் போல்டை தோற்கடித்திருந்தார்.

உலகில் தலைசிறந்த வீரரை வெற்றி கொண்ட கெட்லின் பெருமை பாராட்டாமல் மறுகணமே முழங்கால் தாழ்த்தி உசைன் போல்ட்டிற்கு மரியாதை செலுத்தினார். அன்றைய தினம் நடந்த போட்டியை விட அனைவரினதும் அவதானத்தை பெற்றிருந்த நிகழ்வாக இது அமைந்திருந்தது.

2016 ஒலிம்பிக்கில் இடம் பெற்ற 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் உசைன் போல்ட் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் அவரை புகைப்படம் எடுக்க முனைந்தபோது அவர்கள் எல்லோரையும் ஒருகனம் தாமதிக்குமாறு கூறிவிட்டு விளையாட்டு மண்டபத்தின் மேல் மாடிக்கு ஓடிச் சென்று முன்னர் நடைபெற்ற 400 மீற்றர் போட்டியில் புதிய உலக சாதனையை நிலைநாட்டிய தென்னாபிரிக்க வீரர் வேன்ஹைறக்கருக்கு வாழ்த்துக்களை தெரிவித்திருந்தார்.

உசைன் போல்ட் மற்றுமொருவருக்கு மரியாதை செலுத்தியமையினால் தற்பொழுது அவருக்கும் அம்மரியாதை கிடைத்துள்ளது. விளையாட்டில் இவ்வாறான பண்புகள் எல்லா வீரர்களிடத்திலும் காணப்பட வேண்டும்.



இன்ஸாப் ஸலாஹுதீன் எழுதிய ''இலையில் தங்கிய துளிகள்'' நூலின் மற்றுமொரு வெளியீட்டு நிகழ்வு உடுநுவரையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது..நந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல்துறைப் பேராசிரியர் கலாநிதி எம்.எஸ்எம் அனஸ், சிங்களத் துறைப் பேராசிரியர் கலாநிதி லியனகே அமரகீர்த்தி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். நூல் அறிமுகத்தை எழுத்தாளர் அஷ்ஷெய்க் ஏ.பி.எம் இத்ரீஸ் நிகழ்த்தினார்.உடுநுவரை அபிவிருத்தி நிதியமும் நிகழ் பதிப்பகமும் இந் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு



கலாசாரம் மற்றும் அபிவிருத்திக்கான முஸ்லிம் நிறுவனத்தின் (MFCD) ஏற்பாட்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 130 குடும்பங்களுக்கு 950,000 ரூபா பொறுமதியான வீட்டு உபகரணங்கள் இனமத பேதமின்றி வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வு கடந்த 11/08/2017ம் திகதி அன்று எம்.எப்.சி.டி நிறுவன தலைவர் ஹனான் ஹுசைன் தலைமையில் இரத்தினபுரி பௌத்த சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதிகளாக இரத்தினபுரி பிரதேச செயலாளர் சித்ரா எம் கொடவத்த கலந்து சிறப்பித்தார். மேலும் இன் நிகழ்வில் எம்.எப்.சி.டி நிர்வாக சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.ஹஸ்ரிம், MFCD நிறுவன நிகழ்ச்சி திட்டப் பொறுப்பாளர் எம்.ஏ.எம். அல்தாப், கொடிகமுவ கிராம சேவகர் திரு. சத்துர சமரசேகர மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான இணைப்பாளர் திரு.கே.பி. சமிந்த பியசேகர ஆகி[illegible]


## வெளிவந்து விட்டது




சர்வதேசப் பார்வை

இதழ் 34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.